# AKANANURU VACHANAM

(KALITRIYANAI NIRAI)

## PART I

BY


N. S. KANDIAH PILLAI,

(Author of Tamilakam, Pattuppattu Vachanam, Purapporul Vilakkam, Pathittuppattu Vachanam etc.)



OTTRUMAI OFFICE,

THEAGARAYANAGAR, MADRAS.


All Rights Reserved] 1938 [Price Re. 1

Ceylon University College,

Colombo, 6th Feb. 1938.

Mr. N. S. Kandiah Pillai of Navaly, Jaffna is doing valuable service for the advancement of the study of old Tamil Literature-a branch of study which remains much neglected in this country. His prose renderings of the various poems of the Sangam literature will, without doubt, form a great help to the students who wish to have a thorough understanding and critical appreciation of these difficult works. Mr. N. S. Kandiah Pillai writes in a clear and simple style which can be understood both by the scholar and the layman.

(Sgd.) Dr. K. Kanapathippillai,

Lecturer in Tamil.

XK 47

# அகநானூறு வசனம்

## களிற்றியானை நிரை

ஆக்கியோன் :

யாழ்ப்பாணத்து நவாலியூர்

திரு. ந. சி. கந்தையா பிள்ளை

(தமிழகம், பத்துப்பாட்டு வசனம், புறப்பொருள் விளக்கம், பதிற்றுப்பத்து வசனம், கலிங்கத்துப் பரணிவசனம், முதலிய பல நூல்களின் ஆசிரியர்.)

—:o:—

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

'ஒற்றுமை ஆபீஸ்'
தியாகராயநகர், மதராஸ்.

All Rights Reserved] 1938 [விலை ரூ. 1

43800a
O.HBI
G8

Printed at
The Royal Printing Works
Mount Road : : Madras.

# DEDICATED

TO

## K. M. CHELLAPPAH, ESQ.,

IN

Grateful appreciation of his services for the promotion of mass Education in Jaffna by organising the Jaffna Central Free Library.

# முகவுரை

தமிழ்நாட்டைப் புரந்த முடியுடை வேந்தர் மூவருள் பாண்டியர்க்குத் தலை நகராய் விளங்கியது மதுரை அம்மன்னரால் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கம் நீண்டகாலம் மதுரையில் நடைபெற்றது. தமிழ் நாட்டின் ஆங்காங்கு விளங்கிய புலவர்கள் பலரும் பாடல்கள் பாடி வந்து சங்கப்புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினார்கள். தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றிய பாடல்களைச் சங்கச் செய்யுட்களென வழங்கும். சங்க காலப்புலவர்கள் பாடிய தனி நிலைச் செய்யுட்கள்—பா, அளவு, பொருள் முதலிய தன்மைகளை நோக்கிப் பல கூறுகளாகத் தொகுக்கப் பெற்றன. அவை பத்துப் பாட்டு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு புறநானூறு முதலியவாகும். அவற்றுள் கலித்தொகை, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலிய ஐந்தும் அகப்பொருள் நூல்கள். கலித்தொகை கலிப்பாவினாலியன்ற நூல். ஏனைய அகவற்பாவாலியன்றன. ஐங்குறுநூறு ஐந்திணைக்குந் தனித்தனியேயாகிய குறுமையான நூறு நூறு பாவானமையின் ஐங்குறுநூறு எனத் தனிமையான ஓர் நூலாகவழங்குவதாயிற்று. மற்றை நானூறு, நானூறு பாடல்களுடைய மூன்று நூல்களுள், அடிகுறைந்தொழுகியதைக் குறுந்தொகையென்றும், அடி நிமிர்ந்தொழுகியதை நெடுந்தொகை என்றும், மிகக் குறைதலும் கூடுதலுமின்றி நடுத்தரமாயுள்ளதை நற்றிணை யென்றும் பெயரிட்டனர். நெடுந்தொகையாகிய அகநானூறு அடியளவிற் சிறுமை பதின்மூன்றும் பெருமை முப்பத்தொன்று முடையது.

இந்நானூறு செய்யுட்களின் முதல் நூற்றிருபது செய்யுளும் களிற்றியானை நிரையென்றும், அடுத்த நூற்றெண்பது பாடலும் மணிமிடைபவள மென்றும், இறுதி நூறு பாடலும் நித்திலக்கோவை என்றும் பெயர் பெறும். இவை காரணம் பற்றிய பெயர்கள்.

ஒற்றை எண்ணில் வருவன எல்லாம் பாலைத் திணையாகவும், இரண்டும் எட்டுமாகிய எண்களைப் பெற்ற வெல்லாம் குறிஞ்சித்திணையாகவும், நான்கு என்னும் எண்ணைப் பெற்றனவெல்லாம் முல்லைத் திணையாகவும், ஆறு எனும் எண்ணைப்பெற்றவெல்லாம் மருதத்திணையாகவும், பத்து என்னும் எண்ணைப் பெற்றவெல்லாம் நெய்தற்றிணையாகவும் வைத்து இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது. இந்நூல் 7202 அடிகளை உடையது. களிற்றியானை நிரையுள் 2234 அடிகளும், நித்திலக்கோவையுள் 1781 அடிகளும், மணிமிடை பவளத்துள் 3187 அடிகளுமுள்ளன.

இந் நூலைத் தொகுப்பித்தார், கானப் பேரெயிலெறிந்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதி; தொகுத்தார், உப்பூரி குடி கிழார் மகனார் உருத்திரசன்மனார். ஆகவே இந் நூல் தொகுத்த காலம் சங்கத்தின் இறுதிக் காலம் என்க. அது கி. பி. 50 வரையிலென்ப.

இந் நூற்குக் கடவுள் வாழ்த்துச் செய்தார், பாரதம் பாடிய பெருந்தேவனார். பாரதம் பாடிய பெருந்தேவனாரும், பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனாரும் இரு வேறு புலவர்கள். பாரத வெண்பாப் பாடியவர் கி. பி. 10-ம் நூற்றாண்டில் விளங்கியவர். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பாடல்கள் சில பாரத வெண்பாவில் வந்துள்ளன என்பது அறிஞர்களின் அபிப்பிராயம்.

கடவுள் வாழ்த்து உட்பட இந் நூற்பாடல்களைப் பாடிய புலவர்கள் ஒரு நூற்று நாற்பத்து மூவர். 114, 117, 165, முதலிய பாடல்களைச் செய்த புலவர்களின் பெயர்கள் காணப்பட வில்லை.

உரையாசிரியர்கள் பெரும்பாலும் இந் நூலிள்ள செய்யுட்களையே எடுத்தாண்டிருக்கின்றனர். இச் செய்யுட்களின் பொருளை விளங்கிக் கொள்ளாது தொல்காப்பியம் இறையனார் களவியல் முதலிய தொன்னூல்களை உணர்தலரிது.

மேற் புறத்தே முட்கள் செறிந்த பலாப் பழத்தின் அகத்தே தேன் போற் றீஞ்சுவையுடைய சுளைகள் கிடத்தல் போல, பயில்தற்குக் கடியநடை உடையது போற் காணப்படும இந் நூலகத்துக் கற்போர்க்கு விழுமிய சுவை அளிக்கும் பொருள்கள் காணப் படுகின்றன*

பண்டித பரீட்சை முதலிய உயர்தரப் பரீட்சைகளுக்கு இந் நூலின் ஒரு சிறு பகுதியே பாடமாக வருவது வழக்கம். பரீட்சை ஒன்றினுக்கு மாத்திரமே யன்றி விநோதார்த்தமாக இந் நூலைக் கற்போர் இல்லை என்றே கூறலாம்.

பண்டைக் கால நல்லிசைப் புலவர்களின் செய்யுள் நயங்களையும், வருணிக்குந் திறமையையும், பிறவற்றையும் சிறாரும் இனிதிற் கற்றறிந்து தமிழின் சுவையைப் பருகுதல் வேண்டுமென்னும் ஆர்வத்தினாலே இந்நூலை யாம் வசன நடையில் எழுதலாயினேம். பதரை நீக்கி மணியையே கொள்ளுதல அறிவுடையோர்க்கு இயற்கை ஆதலின் இதனி

---

* அகநானூற்றின் நூல் நயம் முதலியவற்றை 2-ம் பகுதியில் காண்க.

டத்தே குறைகளை காணின் எள்ளாது குணத்தையே பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஏனைய சங்க நூல்களையும் இலேசான வசன நடையில் வெளியிடுதல் வேண்டு மென்னும் ஆர்வத்தோடு முயன்று வரும் எமது உள்ளக் கிடக்கை இனிது நிறை வேறுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

தமிழ் நிலையம்
நவாலியூர்
1—3—1938

ந. சி. கந்தையா

## உரிப் பொருள் விளக்கம்

"அன்பின் ஐந்திணை" எனப்படும் ஒழுக்கங்கள் குறிஞ்சி முல்லை பாலை நெய்தல் மருதம் என்பனவாம்.

### 1. குறிஞ்சி

குறிஞ்சித்திணைக்கு உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும்.

குன்றிடத்தேயுள்ள சிறந்த காளைப் பருவத்தினனொருவன் அப்பொருப்பிடத்துள்ள குன்றவாணர் மகள் ஒருத்தியைத் தனிமையிற் கண்டான். கண்டு இருவரும் ஒத்த அன்பினராய் ஒருவரை ஒருவர் காதலித்தனர். காதலின் விளைவாகியகளவொழுக்கம் சின்னாள்நிகழ்தலும், அஃதுசிறுகச் சிலர் பலர்க்குத் தெரிய வந்து நாளடைவில் ஊரில் பேரலராய் எழுந்தது. அது காரணமாகப் பெற்றோர் தலைவியை இற்செறித்துத்தக்கபடிகாவற் படுத்தினர். இக்காவலருமையைக் கடந்து வந்த தலைவனைத்தோழி அடைந்து, 'இவளை உடன் கொண்டு சென்று மணந்து கொள்ளாவிடின் இவள் உயிர் தரியாள்' எனத் தலைவியின் ஆற்றாமையை எடுத்துக் கூறி ஒருவரும் அறியாவகை அவளை வெளியே கொணர்ந்து தலைவ னிடத்துச் சேர்த்தாள். இப்பொருள்கள் பற்றிப் பலவாறு பாடப்பட்ட செய்யுட்கள் இத்திணைக்குரியனவாம்.

### 2. முல்லை

[முல்லைத் திணைக்கு உரிப்பொருள் இருத்தலும், இருத்தல் நிமித்தமும்]

தலைவியை உடன்கொண்டு போய் தலைவன் தன்னூரிலேனும் தலைவியின் சுற்றத்தார் சம்மதித்து வேண்ட அவளூரிலேனும் அவளை விதிப்படி மணந்துகொண்டு அவ்விருவரும் இல்லிருந்து ஆற்றும் கற்பொழுக்கம் முல்லை எனப்படும். இங்ஙனம் இல்லிருந்து இல்லறம் நடாத்தி

இன்புற்றிருக்கும் நாளில் சிலகாரணத்தைமுன்னிட்டுத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்வன். (தலைமகன் பிரிந்து செல்லுமிடத்து தலைமகள் அவன் பிரிவாற்றாது இரங்குவாள். தலைமகனுமிரங்கி அவளைத் தேற்றி இன்ன இருதுவில் இன்ன திங்களில் யான் மீண்டு வருவேன் 'என்று கூறிச் சில குறிகளுஞ் செய்து விட்டுச் செல்வான்). தலைமகளும் தலைவன் சொற்பிழையாது இல்லிலிருந்து இல்லற மாற்றிவருவாள். அவன் குறித்த பருவம் வந்தவிடத்து அவன் பிரிவினை ஆற்றாது வருந்துவாள். தோழி அவள் ஆற்றாமையைக் கண்டு வருந்தித் தலைவன் குறித்தபருவமும் அவன் செய்த குறிகளும் வந்தமையால் அவன் வாரா நிற்கின்றான் என்ற பிறவுங் கூறித் தலைவியை ஆற்றுவிப்பாள். தலைமகனும் தான் குறித்துச் சென்றவினை முடித்துக் குறித்த பருவம் வரவே மீண்டுவருவான். மீளும் வழியில் தான் செய்த குறிகளெல்லாந் தோன்றும். அது பொருட்டுத் தலைவி ஆற்றாளென்று பாகற்குக் கூறித் தேரை விரைவிற் செலுத்தச் செய்து கடுகிவந்து தலைமகளை எய்தி விருந்தயர்வான். பின்னர் இருவரும் பிரிந்திருந்த விடத்து நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு இன்புறுவர்.

## 3. பாலை

[பாலைத் திணைக்குரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும்]

அறநூலை ஓதல், நாடு காத்தல் மாறுபட்ட வேந்தரைச் சந்து செய்தல், வேந்தற்குத் துணையாய்ப் போர் செய்தல், பொருளீட்டல், பரத்தையர்ச் சேர்தல் முதலிய ஏதேனுமொன்று காரணமாகத் தலைவன் தலைவியை விட்டு நீங்குவான். தலைவன் பிரிந்து செல்லும் சுரத்திடத்தே தன் நெஞ்சுக்குக் கூறுதல், தலைவி தலைவன் சென்ற சுரவழியின்

கொடுமை முதலியவற்றை நினைந்து தோழியொடு கூறி வருந்துதல் முதலியவாறும் பிறவுமாக இத்திணைக்குரிய செய்யுட்கள் வரும். பொருள் வயிற் பிரிதல் இருவகை : ஒன்று மணவினைக்குப்பின் பிரிதல் ; மற்றது வரையுமுன் பிரிதல். மணவினைக்கு முன் பிரிதலை, வரை விடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் எனக் கூறுப.

தலைவியை யாருமறியாதவகை இராக் காலத்தே உடன் கொண்டு தலைவன் சென்றானாக நற்றாய், செவிலித்தாய் முதலானோர் சுரத்துத் சென்று தேடுதல், இல்லில் இருந்து வருந்திப் புலம்புதல் முதலிய பொருள் பற்றி வருஞ் செய் யுட்களும் பாலைத்திணைக்குரியவாம்.

## 4. நெய்தல்

[நெய்தற்றிணைக்கு உரிப் பொருள் இரங்கலும் இரங்கல் நிமித் தமும்]

நெய்தல் நிலத்தே, தலைவன் தலைவியை இரவுக்குறி பகற்குறிகளிற் தலைப்படல், தோழி, தலைவியை மணந்து செல்லுமாறு தலைவனை வரைவுகடாவல்; ஆய் தலைவியை இற் செறித்தல், தோழி அறத்தொடு நிற்றல் முதலிய பொருள் கள் பற்றி இத்திணைக்குரிய செய்யுட்கள் வந்துள்ளன.

## 5. மருதம்

[மருதத்திணைக்கு உரிப்பொருள்கள் ஊடலும் உடல் நிமித்த மும்]

இல்லறம் நடத்துங் காலத்துத், தலைவன் பரத்தையரி டத்துச் சென்று வருவான். அக்காலத்துத் தலைவி வாயின் மறுத்து ஊடியிருப்பாள். பின் தளர் நடைப் புதல்வன் முதலிய வாயில்கள் காரணமாக அவள் ஊடல் தணிவாள். இவ்வாறு புனையப்பட்ட செய்யுட்கள் மருதத்திணையின் பாற்படும்.

# நெடுந்தொகை ஆகிய

# அக நானூறு வசனம்.

## கடவுள் வாழ்த்து

மூப்பில்லாத அமரரும், முனிவரும், பிறரும், யாவரும் அறியாத பழைய முறைமையில் வரியுடைய புலித் தோலுடுத்த, சாமவேதம் பாடிய நீலமணிபோலும் கரிய கண்டமுடைய வெற்றியுடைய அந்தணன், பகைவரை அழித்த இமையாத கண்ணுடைய நுதலும், குந்தாலியும் மழுவும் சூலமுந் தாங்கியகையும், இடபமாகிய ஊர்தியும் உமையாகிய பாகமும், செக்கர் வானம்போன்ற திரு மேனியும், அவ்வானில் இலங்கும் பிறைபோன்று ஒளிவிடும் வெள்ளிய கூரிய எயிறும், நெருப்பின் கவர்போல் விட்டு விளங்கும் முறுகிய சடையும், இளம் பிறையோடு சுடர் விடும் சென்னியும் உடையன். அவன், இருண்ட படர்ந்த கொன்றையின் புதுமலர்த்தாரும், மாலையும், கண்ணியுஞ் சூடிய மார்பிடத்தே குற்றமில்லாத பூணூலணிந்தோன்.

(இவ்வாறமைந்த கடவுளின்) *தாள் நிழலில் உலகம் தங்கிற்று ஆதலால் அவ்வுலகிற்கு இடையூறில்லை.

* தார், ஓர் விசேடமாக இடுவது; மாலை அழகுக்கு இடுவது; கண்ணி போர்ப்பூ. மாலை கட்டுவதாகவும், தார் சேர்ப்பதாகவும் கண்ணி, தனித்துத் தொடுப்பதாகவும் வேறுபாடுடையவென்றுங் கூறுவர்.

—பாரதம்பாடிய பெருந்தேவனார்.

## முதலாவது களிற்றியானை நிரை

"வண்டு படக் கிடந்த" என்பது முதலாக 'நெடுவெண் மார்பின்' என்பதீறாகக் கிடந்த நூற்றிருபது பாட்டும் களிற்றியானை நிரை எனப்படும். இப்பெயர் காரணத் தாற் பெற்றது. இதுபொருட் காரணமாகக் கொள்க"

—பாயிரம்.

### 1. பாலை

[இது, தலைமகன் பொருள் வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

வண்டுமூச மலர்ந்த கண்ணியும், பிரகாசிக்கின்ற வீரக் கழலும், அச்சந்தரும் குதிரையுமுடைய மழவரை ஓட்டிய, முருகனைப் போன்று நல்ல போரைச் செய்யும் நெடுவேளாவியின் சிங்கத்தைத் தொலைத்த கொம்பன் யானையுடைய ஆவிமலை யிடத்து இயற்கைப் புணர்ச்சிக் காலத்து, சாணை பிடிப்போன் அரக்கோடு கல்லைச்சேர்த்துச் செய்த சாணைக் கற்போல யாம் பிரியலம் என்று கூறிய சொல்லை நங்காதலர் மறந்தனர்போலும்; தோழீ! மூங்கில்போற் பணைத்த தோள்கள் நெகிழ அணிதற்குத், தொலைவிடத்துள்ள அரிய பொன்னுபரணங்களாகிய செல்வத்தை எமக்குத் தரும்பொருட்டு அவர் அரிய சுரவழியைக் கடந்து சென்றார். அவ்விடத்தே நிலம்பிளந்து பசுமை அறும்படி நெருப்புப் போன்ற கொடிய வெயில் எறித்தலால், உலர்ந்த நிழலில்லாத நேரிய மரங்களுடைய பாறைமீது காய்ந்து நீர் அற்ற பசிய சுனை முற்றாகப் புலர்தலின் நெற்சொரியின், பொரியும் வெம்மையுடையதாயிருக்கும். இவ்வகையான வழியிடத்தே எவரும் செல்லாமையின் ஆறலை கள்வர் மடியச் சுரம் புல் என்றிருக்கும். ஈரமில்லாத முருங்கையின் அசைகின்ற பூவையும்

சூதலின் பெரிய பூவையும் சூறுவளிக் காற்றுச் சுழித்தடித்து எடுக்க, அக்காடு துளிகளைச் சிதறும் கடலின் முகப்புப் போன்று தோன்றும்.

மழவர்—மழவதேயத்தவர். நெடுவேளாவி—இவன் ஓர் குறு நில மன்னன். இவன் ஊர்—போதினி; மலைபோதினி. போதினி—பழனி. —மாமூலனார்.

## 2. குறிஞ்சி

[இது, பகற்குறியிடத்துத், தலைவி இற்செறிப்புண்டமையைத் தலைவனுக்குக் கூறித் தோழிவரைவு கடாவியது.]

பக்கமலையிடத்தே நிற்கும் பலாவின் பழங்கள், கொழுவிய இலைகளையுடைய வாழையின் பல காய்களுடைய பெரிய குலையிற் கனிந்த பழங்களை உண்போரைத் தடுக்கும்* நீண்ட சுனை ஓடுகின்ற பாறையிடத்து விளைந்ததேனோடு பலாச் சுளையை உண்ட ஆண் குரங்கு மயக்கத்தால் அயலே நின்ற மிளகு கொடி படரும் சந்தன மரத்தில் ஏறாது, அதன் நிழலிலுள்ள பூப்படுக்கையில் மகிழ்ந்து தூங்கும். இவ்வாறு முயற்சியும் உளப்பாடு மின்றி வந்த இன்பங்களை நின் மலையிடத்து விலங்குகளும் எய்துகின்ற நாட! நீ விரும்பிய இன்பம் நினக்கு என்ன அருமை உடையது? (அருமை இல்லை.) பெரிய மூங்கி லொத்த பணைத்ததோளுடைய இவளும் நின்ற நிலையில் நிறுத்தவும் நில்லாத நெஞ்சத்தோடு நின் மாட்டு இன்ன தன்மையள் ஆயினள். தந்தையின் அரிய காப்புடைய காவலரின் சாய்வை அறிந்து (பகற்காலத் தன்றி) இராக் காலத்தும் வருக.

---

* பலாப் பழங்களை உண்ணும் விருப்பால் வாழைப் பழங்களை உண்ணார்.

பசிய்புதரிடத்து வேங்கையும் ஒள்ளிய பூங் கொத்துக் களை அலர்த்திற்று, (தினைகொய்தமையால் தலைவி இற் செறிப்புண்டாள், என்ற வாறு). உயர்ந்த வெள்ளிய திங் களும் வளர்பிறைக் கண்ணதாயிற்று.

தலைவி இற் செறிப்புண்டமையிற் பகற்குறி அருமை ஆயிற்று. தந்தையின் காவலர் காவல் புரிதலின் இரவுக்குறி யும் அரிதாயிற்று. கலியாண நாட்கொள்ளுதற் குரிய வளர் பிறைக்காலம் வந்துள்ளது. தலைவியை வரைந்து செல் என்ற வாறு.

கடுவன் பலாச்சுளையையும் தேனையும் நுகர்ந்து மரத் தில் ஏறாது உறங்கினதென்பது: நினது தொழிலாகிய அற நெறியையுந்தப்பி, இக்களவினை நீங்கி வரையவும் மாட்டாதும் இக்களவொழுக்கமாகிய இன்பத்தில் மயங்கா நின்றாய் என்ற வாறு. —கபிலர்.

## 3. பாலை

[இது,முன் ஒரு காலத்து நெஞ்சினாற் பொருள்வலிக்கப் பட்டுப் பிரிந்தான் தலைமகன்; பிரிந்து இடைச்சுரத்தினின்று அவள் நலம் நயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப் போய்ப் பொருண் முடித்து வந்த தலைமகன் பின்னும் பொருள்வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

கரியகழியிடத்திற் கிடக்கும்முதலையின் மேனிதோல் போன்ற கரிய கால் உடைய உயர்ந்த ஓமை மரத்தின் பெரிய கொம்பிற்கட்டிய கூட்டில் முட்டையிட்டு அடைகாக்கும் பெடைக்கு முகவெள்ளைப் பருந்து மிகுந்த இரைதேடச் செல்லும்; சென்று, வானை முட்டும் உயர்ந்த சிகரமுடைய பக்க மலையிடத்து அசைந்து நடக்கின்ற மரையாவை வலப் பக்கத்தே விழும்படி கொன்ற புலி, விளங்குகின்ற சிவந்த

இரத்தம் ஒழுகும்படி உண்டு விட்டுப்போன முடை நாற்றம் வீசும் இறைச்சியைக், கொள்ளை அடிப்போரைப்போல் அகலாது இருந்து கவரும். இவ்வியல்பினதும், புல்லிய இலையுடைய மரங்கள் ஓங்கியதுமாகிய அகன்ற தொலையாத அரிய வழியிடத்து ஆபரணங்களைப் பெறும் விருப்போடு செல்லும்படி எனக்கு அறிவித்துப் பின்னால் நின்று முடுக்கும் நெஞ்சே! இனிய மொழியும், ஆராய்ந்தெடுத்த ஆபரணமும், ஓடிநீண்டு குழையோடு பொருகின்ற கண்ணும் உடைய தலைவியின் நினைவு, (நாம் முன் பொருள் வயிற் பிரிந்தகாலத்து) நீண்ட அரிய தூர வழியிடத்து வந்து எமது போக்கைத் தடுக்கவில்லை. இப்பொழுது நின்வாயின் மெய்போன்ற பொய் மொழி எமது பொருட் பிணியை எவ்வாறு களையவல்லது.

எனது தலைவியின் நினைவு வந்து என்னைத் தடுக்குமன்று; நின்பொய்மொழி எப்படித் தடுக்கும் என்றவாறு. பொய்மொழி—போ என்று எதிர்மறைப் பொருளிற் கூறுதல் அழுங்குதல்—தாமதித்தல்.

எயினந்தை மகனார் இளங்கீரனார்.

## 4. முல்லை

[இது, தோழி, தலைமகளுக்குத் தலைவன் வருதற்குரிய கார் காலம் வந்ததெனக் காட்டி வற்புறுத்தியது].

கூரிய முனையுடைய முல்லை மொட்டுகள் அரும்பின; தேற்றாவின் பூவோடு பசிய காம்புடைய கொன்றை மொட்டுகள் விரிந்தன. இரும்பை முறுக்கினாற் போன்ற கொம்புடைய மான் பருக்கைக் கற்களுடைய பள்ளங்களிற் துள்ளிக் குதித்தன. விரிந்த உலகம் நீர் பெறாத வருத்தம் நீங்கக் கூட்டமாகிய மேகம் மிகுந்த மழையைப் பொழிந்தது

அழகிய காடு கார்காலத்தை அறிவித்தது. ஆரவாரிக்கின்ற விழாவுடைய உறந்தைக்குக் கீழ் பாலுள்ள உயர்ந்த பெரிய சிராப்பள்ளிமலையில் மலர்ந்த காந்தள் மலரின் நாற்றம் வீசுகின்ற, ஆராய்ந் தெடுத்த வளை அணிந்த அரிவையே! பூத்த இலவில் துணையோடு இருந்து, தாதுண்ணும் வண்டு யாழ்நரம்பு போல் இனிதாக ஒலிக்கும். அஞ்ஞான்று, குறும் பொறை நாடன், அவ்வண்டுகள் மருண்டோடுமென அஞ்சி, வளைந்த தலையாட்டம் பொலிந்த கத்தரிக்கப்பட்ட கழுத்து மயிருடைய குதிரையின் வாயை அரியும்படி கடிவாளத்தை இழுத்துப் பிடித்து மணிகளின் நாவொலிக்கும் தேரனாக நினது பெரிய நலனை விரும்பிக் கண்டு மகிழ்தற்குத் தோன்றுவான். குறுங்குடி — திருநெல்வேலி ஜில்லாவில் ஓர் விஷ்ணு தலம். —குறுங்குடி மருதனார்.

## 5. பாலை

[இது, பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

அன்பின் நிலைபொருந்து மேவிய முகத்தள், தலைவனது பிரிவுக்கு உடன்படாளாய், நாண் முதலிய குணங்கள் ஒழியத் தானே யாய நிலையினளாய் (தமியளாய்) அழகு மிகுந்த பாதங்கள் நிலத்தை வடுச் செய்யும்படி நடந்து குறுகி வந்தாள்; வந்து தனது கூரிய எயிறு தோன்றச் சிறிது வாயைத் திறந்து இளநகை புரிந்தாள்.

உலர்ந்த ஓமைமரங்கள் நிற்கும் இலை உதிர்ந்த காட்டில் நெல்லியின் பளிங்கொத்த காய்கள், உயர்ந்த பெரிய பாறையில் உதிர்ந்து குவிந்து சூதாடுகருவியை ஒத்திருக்கும். இவ்வாறான பாறைகளுடைய வெயில் தெறுகின்ற தீட்டினது போல் தேய்ந்த, கூர்தோன்றும் பதித்தாற் போன்ற

தலையுடைய கல் விரல்களின் நுதியைச் சிதைக்கும். இவ்வாறு கல் ஒழுங்குபட்ட வழிகளும் பருக்கைக் கற்களுமுடைய பயனில்லாத கானத்தைக் கடக்க எண்ணுதல் அறத்தா றல்ல, என்று, யான் கருதிய பிரிவைத், தான் அறிவதற்கு முன்பே அதனை யான் செய்தல் கூடாதென்னும் நினைவு டன் இயற்கைப் புணர்ச்சிக்காலத்து அவள் கூறினாள். இப் போது அவ்வார்த்தையைச் சொல்லிக் காட்டுபவள் போலக் குறிப்புக் காட்டி, முகத்தாற் கூறிச், சித்திரத்தின் செயலொத்து, போக்குடன் படாமையை நினைந்து துணிந்து, கண்ணீர் நிறைந்து பாவையை மறைத்த பார்வை யள் ஆயினாள்; அவ்வாறாகி மார்பிடத்தே ஒதுங்கிய புதல் வனின் புல்லிய தலையில் கண்ணீர் உகுத்த தலைவி, செங்கழு நீர் மாலையை மோந்து பெருமூச்செறிந்தாள். அப்போது சிறந்த மலரும் மணியும் உருவழிந்தாலன்ன இவள் தோற்றத்தைக் கண்டு பிரிவை நீக்கினேம். ஒள்ளியவளை அணிந்த இத்தன்மையளது இடத்தனாகிய யான் பிரியின் இவள் பிழையாள். —பாலைபாடிய பெருங்கடுங்கோ.

## 6. மருதம்

[இது, பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகற்குக் கிழத்தி கூறியது.]

உள்ளே மணி இடப்பட்ட சிலம்பும், ஆம்பல் மாலையும் அரத்தினால் அராவிய அழகிய வளைபொலிந்த முன்கையும், ஆபரணங்களணிந்த பணைத்த தோளுமுடைய ஐயையின் தந்தை, மழை போல் வழங்கும் பெரிய கொடையுடைய தித்தன்; அவனது நெற்குவியலுடைய உறந்தையிடத்து ஓடக்கோலுக்கு எட்டாத காவிரி நீரில், வேழமாகிய தெப்பத் தைத் தழுவிப் பூழிநாட்டார் மடுவை நாடுகின்ற யானை

யைப்போல முகமலர்ந்து, காதணி முதலிய மாட்சிமைப் பட்ட ஆபரணங்களணிந்த பரத்தையோடு, உயர்ந்த அழகிய மார்பிலுள்ள பூமாலை குழைய நேற்றுப் புனலாடினாய்; இன்று வந்து அழகிய தனங்களில் சுணங்கு படர்ந்த குற்றமில்லாத கற்புடையவளென்றும், புதல்வனுடைய தாயென்றும் நம்மிடத்துச் சாய்ந்து வஞ்சனையாகப் பொய் மொழிகளைப் பலகாற் கூறினாய். (புதல்வனுடைய தாய்) என்ற அம்முதுமைக்கு நாங்கள் பொருந்துவேம். அழகிய சுடர் விடுகின்ற தாமரைப் பூவுடைய நீர் நிறைந்த வயலிடத்து, வாளை மீனுக்குக் காவலாகிய வள்ளைக் கொடியின் காவலை நெகிழ்த்து, அவ்வாளையை மேய்ந்த நீர்நாய், முள்ளரையுடைய பிரம்பின் முதிய பற்றையில் வெறுத்துக் கிடக்கும் மத்தியின் கழாஅர் நாடு போல எமது இளமைகழிந்து மிகப் பழைதாயிற்று. நின் பொய் மொழி நமக்கு இனிமை செய்வதெப்படி?

இதன் உள்ளுறை:—நீர் நாய், வாளைக்குக் காவலாகி வள்ளையின் நிலையை நெகிழ்த்து, இழிந்த வாளையைநுகர்ந்து முதிய பிரம்பின் தூற்றிலே தங்கினாற் போல, நீயும் பரத்தையர்க்குக் காவலாகிய தாய் முதலாயினாரை நெகிழ்த்துக், குலமகளிரல்லாத விலை மகளிரை நுகர்ந்து, முன்பு நுமக்குண்டாகிய எங்கள் பழைமையைப் பற்ற ஒரு பயன் கருதாது தங்குதற்கு மாத்திரம் எம் இல்லம் வந்தீர் என்றாள்.

—பரணர்.

## 7. பாலை

[இது, மகட்போக்கியசெவிலித்தாய் சுரத்திடைப் பின் சென்று நவ்விப்பிணைக் கண்டு சொல்லியது. நவ்விப்பிணை—பெண்மான்.]

இனிய சத்தமிடும் ஆண் மான் உடைய கூட்டத்திலுள்ள துடிப்புடைய பெண் மானே! முலை நிரம் பிற்று;

முட்போன்ற பற்கள் இலங்கின; தலைமுடி ஐம்பாலாய்
அமைந்தது; தழை உடையை; துன்புறுதே; பழைய முது
பதியிடத்து வருத்தும் தெய்வமுமுண்டு; காவல் பூண்டாய்;
வாயிலுக்கும் போகாதே; அறிவுடைய இளமகளே!
நீபேதைப் பருவத்தளல்லை; புறப்படாத பருவத்தை
அடைந்தாய், என்று நான் கூறக் கேட்டுப் பிரகாசிக்கின்ற
விளக்குடையகாவலை நீங்கினாள்; நீங்கி, களவொழுக்கத்தை
நானறிகின்றேனென்றஞ்சி வலையைக்கண்ட மான் போற்
போய் இவ்வழியாக வெள்ளிய வெற்றி வேலுடைய விடலை
யோடு இச்சுரம் சென்றாள்; அருஞ்சுரத்துள்ள கள்ளர்
ஆவைத் தொழுவினின்றும் நேராகக் கொண்டு வந்தார்க
ளென்று பின்னாற் சென்று மீட்கும் கரந்தையார் போல இப்
பொழுது என் மகளை அணுகப் பெற்றிலேன். இதனை இவ்
விடத்து நின்னோடு வினவுதற்குக் காரணங்கேள்; பெரான்
றொடு புலிப்பற்கோத்த தனி மணித்தாலியும் தழைத்த
அசோகின் தழை உடையும் மாட்சிமைப்பட்ட அல்குலு
முடையாள், சுனைகளின் பக்கத்தேயுள்ள நல்ல சுளை
யுடைய பலாவில் மேயும் குரங்கு உதிர்த்த குடுமியுடைய
விதையைப் பெறும் சிறுகுடிக்கானவன் மகளாதலின் அவ
ளைத் தேடுவதற்கு நினக்குமோர் முறையுண்டு. (இனி
என்ன செய்வேன்.) —கயமனார்.

## 8. குறிஞ்சி

[இது, தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்லு
வாளாய்த் தலைமகள் சொல்லியது.]

(அறியாமையால் நாம் செல்ல முடியாமலிருக்கும் அரிய
வழியை அறிந்தோமென்று சொல்லுவாரைப் பெறேன்.
திறந்தவாயுடைய புலி பன்றியைக் கொன்று நுகர்தற்குப்

பலாவளரும் பக்க மலைக்கு இழுத்துச் செல்லும், மூங்கில் ஒலிக்கின்ற அம்மலையிடத்துள்ள சுரபுன்னையும் வாழையும் ஓங்கி வளரும் நீரறாத குழியில் தவறி வீழ்ந்த களிறு ஏறுதற்குப் படியாகப் போடுவதற்குப், பிடி, மரங்களைமுறிக்கின்ற ஓசை விண்தோய் மலைப்பிளவுகளில் ஒலிக்கும். இவ்வாறான நந்தலைவர் நாட்டிற்குச் செல்லும் வழியை அறிவேம் என்போரைப் பெறின், மான் போகும் உயர்ந்த வழிகளில் மயங்கிச் செல்லாது, மின்னல் வழி காட்ட மெத்தென ஒடுங்கி, மெல்ல மெல்லத்துமிக்கும் மழை தலையிற்படக் குலைந்து முதுகை மறைத்த கூந்தலை வாரிப் பிழிந்து, கறையான் புற்றினுட் கிடக்கும் புற்றாம்பழஞ் சோற்றை, நீண்ட உறைபோன்ற தோலுட் புகுந்திருக்கும் நகமுடைய புலி கதுவுதலால் பாம்பு வலி அழியும் இரவின் நடுயாமமும் நாம் செல்லுதற்கு அரிதல்ல. தோழீ! தேடிச் செல்வேம்.

தலைவரது ஊருக்குச் செல்லும் வழியை அறிவாரைப்பெறின் அரிய வழியையும் இடையூறுகளையும் கடந்து நடுயாமத்தும் அவரிடத்துச் செல்லுதல் நமக்கு அரிதல்ல என்றவாறு.

புலிக்குப் பாம்பை வருத்த வேண்டுமென்னும் விருப்பில்லையாயினும், அதன் காரியஞ் செய்யவே நகம் படுதலால் பாம்பு வருந்தினாற்போல, அவர் நம்மை வருத்தவேண்டுமென்னும் கருத்தில்லாதிருக்கவே, தமது காரியமாகிய களவின்பத்தில் ஒழுகாநிற்க, ஆறின்னாமை ஊறின்னாமை முதலியவற்றுக்கு நாம் வருந்தும்படியாய் விட்டது என்றவாறு.

புலி பன்றியைக் கொன்று பலாவுடைய பக்கமலைக்கு இழுத்துச் சென்றதென்றது, அவர் இன்பந் துய்த்தற்

பொருட்டு நம்மைக்கூடி அக் கூட்டத்தாலே, புகழ்ச்சியுடைய நங்குடியை இகழ்ச்சி உடையதாய்படி பண்ணினு ரென்றவாறு.

சுரபுன்னையும் வாழையும் ஓங்கிய குழியில் யானை விழஅது படியாக ஏறுதற்குப் பிடி, மரத்தை முறித்து இடும் என்பதன் உள்ளுறை பொருள்:—வாழை நுகரவந்த யானை அதன் அயலாகிய குழியில் விழுந்ததாக, பின்பு அக்குழியினின்றும் ஏறமாட்டாது வாழையாகிய உணவையும் இழந்த விடத்து, பிடி, அது ஏறுதற்குப் படியாக மரம் முறிக்கின்ற ஓசை வானை முட்டிய மலைப் பிளப்புகளில் ஒலித்தாற்போல, அவரும் நமது நலத்தை நுகரவந்து, களவொழுக்கமாகிய குழியிலே விழுந்து, இக்கள வொழுக்கமாகிய இதனைவிட்டு வரையவும் மாட்டாது நமது காவலருமையால் இக்கள வொழுக்கினை நுகரவும் மாட்டாது துயரப்படுகின்றுழி, அறத்தொடு நிலை முதலாகிய இவற்றால் மகளிராகிய நாமே வரைய முயலும் வழி, அம் முயற்சியாலே ஊரெல்லாம் அறியும்படி பண்ணினார் என்றவாறு.

—பெருங்குன்றூர் கிழார்

## 9. பாலை

[இது, வினைமுற்றி மீண்ட தலைவன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

இருப்பையின், செப்புத்தகடுபோன்று சிவந்த இலைகளின் அகத்து அரும்பி வெண்ணெய் போன்று தோன்றும் துளையுடைய பூ, வில் வீரர் அம்பறாத்தூணி நிறையப் போட்ட மல்லிகைமொட்டுப் போன்று கூரிய முனையுடைய கொலைத் தொழில் புரியும் அம்பின் தலைபோன்றன. அவை, காம்பினின்றும் நீங்கி, ஆர்க்குக் கழன்று, ஆலாங்கட்டி

வானினின்று காற்றினுற் சிதறி உகுவது போற் பவளம் போன்று நிவந்த மேட்டு வழியில் விழும்; விழுந்து சிதறி, இரத்தத்தின் மீது நிணங்கிடந்தாற் போன்று தோன்றும். இவ்வகையான வழிக்கு அணித்திலுள்ள உயர்ந்த கரிய மலையிடத்து, இருக்கும் கூகைச் சேவல் அழகிய குடிகளுடைய சீறூரிடத்துள்ள வளைந்த பணிச்சையுடைய மகளிர் உலக்கையாற் குத்துஞ் சத்தம்போலக் குழறும். அவ்வரை பின்னே கூறிய ஞாயிறு படினும் ஊர் தூரத்து என்னுது வேகமுடைய பரியை மேன்மேலும் தூண்டிச் செலுத்திச் சோர்வில்லாது விரைந்து சென்று, பல கட்டு மாட்சிமைப்பட்ட நல்ல இல்லின் பக்கத்தே நின்று பல்லி சொல்லுந்தோறும் தொழுது, கன்று மனையிடத்தேபுகும் மாலைக்காலத்து நிற்கும், நாணுேடு பொருந்திய கற்பும், ஒள்ளிய நுதலும் அழகிய இனியவார்த்தையும் உடையாளாகிய காதலியை எய்திக் கைகவித்து (அவள்காணுதே கிட்டச் சென்று) கண்ணைப்பொத்தி, துதிக்கை போன்ற பின்னிய மயிரைத்தீண்டி வளை அணிந்த கைகளைத் தடவித் தழுவி அவள் மெல்லிய தோளைப் பெற விரும்புகின்றது எனது நெஞ்சம்.

—கல்லாடனுர்.

## 10. நெய்தல்

[இது, இரவுக் குறிவந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லியது.]

பெரிய கடலிற் தோன்றும் நீர்த்துளியை ஏற்கின்றதும் நட்சத்திரங்கள் போன்ற மெல்லிய அரும்புகளை முகிழ்த்ததும், வளைந்ததுமாகிய முதிய புன்னையின் பெரிய கொம்பரில் பட்சிகள் தங்குதல் மிகும் பகற்காலத்துத் தலைவி தனிமைகொண்டு நெய்தலுண்ட கண்கள் வருத்த முடையனவாய் அழ, பிரிதலை எண்ணினுயாயின் அரியதனைச் செய்

தனுற்றாய். பெரும! கீழ் காற்றடித்தலின், வெள்ளிய திரையை வீசும் கடல் மோதுகின்ற மணலில் மீன் பிடிக்கும் பழைய படகுகளை உடைத்த புது வலையுடைய பரதவர், உயர்ந்த மணலுடைய கரையில் சுறா மீனைக் கொண்டு வந்து, புலால் மணம் நாறுகின்ற பாக்கத்தே கூறுவைக்கும் தோண்டி அன்ன இவள் நலம் இவளுக்கே உரித்தாகக் கொண்டு நின்னூரிடத்திற் பெயரவேண்டும். (அன்றேல் இவள் உய்யாள்)

புன்னைக் கொம்பில் புட்கள் தங்கும் என்றது, புள்ளுக்குப் புன்னை இருப்பிடமாயினாற் போல எங்களுக்கு நீ ஆதாரமாயிற்றிலை என்றவாறு. பழைய படகை உடைத்த பரதவர் சுறாவைக் கூறுவைத்த தென்பது, பரதவர் தாம் அழிவு சேர்ந்த திமிலானும் பண்ணின வலையானும் தமது தொழிலாகிய வேட்டை மேற் செல்லாது, தேடாமல் வந்த இழிந்த சுறா மீனை அகப்படுத்தி, அதனை அழித்துக் கூறுவைத்து எல்லாரையும் அழைத்தாற்போல, நீயிரும் நமக்கு உறுதியாக ஆக்கிக் கொள்ளப்பட்ட நன்மைகளான் நுமக்கு ஒழுக்கமாகிய நல் வழியில் ஒழுகாது, கண்டோரிகழ்ந்த களவொழுக்கிலே ஒழுகி, இக்களவினைப் பரப்பிப் பலரும் அலர் கூறும்படி பண்ணுகின்றீர் என்றவாறு.

—அம்மூவனார்.

## 11. பாலை

[இது, தலைமகன் பொருள் வயிற் பிரிந்த விடத்து ஆற்றாளாய தலைமகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.]

வானில் இயங்கும் சூரியன் நெருப்பு எனக்கோபித்தலிரால் வெப்பம் மிகுந்த அழகிய காட்டில் இலை இல்லாது

மலர்ந்த முகை இல்லாத இலவமரம், ஆரவாரத்தோடு கூடிய சனத்திரள் சேர்ந்து எடுத்த அழகிய கார்த்திகை விளக்கின் ஒழுங்கு போலத் தோன்ற மடுக்கள் வற்றிப் புழுதிபறக்கும், நீர் அற்ற காட்டிடமாக எம்மை உடன் கொண்டு தம்பதிக்குச் செல்வர்; சென்றனராயின், மணம் விரித்தாற் போன்ற உயர்ந்த மணலுடையகான் ஆற்றுள் தாழ்ந்தெழுந்த பெரிய கொம்பர்களிலுள்ள பூங்கொத்துகள் பரந்த வெண்மணல்மெய்யிடத்தே புகுந்தாற் போன்ற கை விரும்புகின்ற முயக்கினை நம் தலைவர் கம் என்று பெறுவர். வற்றுகின்ற குளத்தை நிறைப்பவர் போலத் தினமும் அழுதல் உடையதாகிப் பழி தீர்ந்த கண்ணும், நீர் வார்த்த ஒளியுடைய மலர்போலப் பிரிதலை மறந்து உறங்கும். கம்என—விரைய. —ஔவையார்.

## 12. குறிஞ்சி

[இது, பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு இரவுக் குறிவாராநின்று வரைவல் என்றாற்கு அதுவும் மறுத்துவரைவுகடாயது.]

ஆய் தன் கண்ணினும் பார்க்க நந்தலைவி மீது அன்புடையள். எமது தந்தையும் அவள் கால் நிலத்திற் படுதலைப் பொறுன்; நடப்பின் குறமகளே! யாது வேண்டிச் செல்கின்றாய் என்று வினவுவான். யாமும் பிரிவின்றிப் பிணைத்த ஆராத நட்பினால் இருதலைப் புள்ளின் ஓர் உயிர் ஆயினேம். தினைப்புனங் காப்போர் ஓயாது ஆரவாரஞ் செய்யுந்தோறும், அவ்வோசையைக் கிளி பயிற்றும் அணில் பாய்கின்ற பெரிய கொம்பரிடத்துப் பெரிய காயுடைய பலாவின் பழமாகிய பயனைக்கொள்ளும் குறவர்கட்டிய குடிலை மறைக்கும், புலி பாய்வதுபோன்ற தேன் பாய்கின்ற

தோற்றத்தைக் கண்டு புலி என்று பயந்த புகர் முகமுடைய யானை மழைபெய்கின்ற மலையிடத்தேயுள்ள மூங்கில் காலின் கீழ் மடியும்படி வெருண்டோடும். இவ்வகையான நல்ல வரையிலுள்ள நாட! நீவரின் மெல்லியலாள் வாழமாட்டாள்.

யானை, வெருவத்தகாத சூரம்பையை வெருவத்தக்க புலியென்று கருதித் தனக்குணவாகிய மூங்கில் முறியப் பாய்ந்தாற்போல, வெருவத்தகாத எங்கள் தமரை வெருவி வரைய முயலாது திரியவே, நாங்கள் இறந்துபடும்படியா யிற்று என்றவாறு. 'நீவரின்' என்றது வரவு மறுத்தது. 'சிறிய அடிகள் சிவப்ப' என்றது இற்செறிப்பு அறிவுறுத்தியது.

—கபிலர்.

## 13. பாலை

[இது, பொருள் வயிற் பிரிதலுற்ற தலைமகனைத் தோழி செல வழுங்குவித்தது.]

போர்முனையிடத்துப் பகைவர் திறைகொடுக்கும் வலியுடைய திருத்தங்கும் மார்பனாகிய பாண்டியன், தன் கடலிடத்துப் பிறந்த முத்தின் ஆரமும், தன் மலையிடத்துள்ள, பிறரால் தெறுதற் கரிய கடவுளைப் பேணி குறவர் கொணர்ந்த சந்தனத்தின் ஆரமுமாகிய இரண்டையும் அழகுபெற அணிவான்; பாண்டியனது படைத்தலைவனும் கூரிய அம்புடையவனுமாகிய, கோட்டூருக் கரசனாகிய பண்ணி, குழியிடத்தே வீழ்த்திப் பிடித்த, மதத்தினால் பிடியோடும் கன்றோடும் சேராத யானைக்கு மொழியினால் தொழிலுணர்த்தும் சிறு பொழுதல்லது, தனக்கென மட்டுப் படுத்தி வையாது பொருளை இரவலர்க்கு ஈவான். அவன் புரிந்த பயன் பொருந்திய களவேள்வியைப்போல், பெரும் பொருளால் அறம் முதலிய விழுமிய நிகழ்வதாயினும், தெற்கே எழுந்து மிகுந்த மழைபெய்து கூதிர்காலம்

கொள்ளும்போது அக்காலத்திற்கு இனிய துணையாகியவள் அவள் எனத்தேர்வாயாக. தேர்ந்து வளவிய வயலிடத்து அழல்நாக்குப் போன்ற கதிர் ஈன்ற கழனியின் கவைத்த நெல் அகன்ற வயலின் வரம்புகள் அடங்காது அசையும் படி, வருத்தஞ் செய்து பொழுது கொள்கின்ற வாடைக் காற்று வீசி, இலங்குகின்ற பூத்த கரும்பின் உயர்ந்த தண்டில் இருக்கும் கொக்கு அலறிஓடும்படி செய்யும் நுண்ணிய துவலையுடைய தண்ணிய பனி நாளிற் பிரிவையாயின், வருத்தமின்றாக அன்னத்தின் தூவி முதலியன பரப்பித் தூய வெண்துகில் விரித்த படுக்கையின் உள்ளிடம் இன்புறாது கழியும்.

பண்ணி—பாண்டியனது படைத்தலைவன்; இவன் ஊர் கோட்டூர்.

—பெருந்தலைச் சாத்தனார்.

## 14. முல்லை

[இது, பாணன் தனக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

அரக்குப் போற் சிவந்த பெரு வழியிற் பரந்த காயாஞ் செடிகளோடு தம்பலப் பூச்சிகள் வரியாய்க் கிடத்தலின் பவளத்தோடு மணிகலந்தாலன்ன தோற்றமுடைய குன்றுகள் சூழ்ந்த அழகிய காட்டு வழியிடத்து, பெண்மானைத் தழுவிய முறுகிய கொம்புடைய ஆண்மான் புல்லை அருந்திக் குதிக்கும். கோவலர், செங்கோலுறுகு மேயும் வலிய நடையுடைய பசுக்களை முல்லை நிலத்தே பரப்பி தாம் குறிய மலைச்சாரல்களில் பூத்த நறிய பூவைச் சூடுவர். பெரிய அழகிய மடிகளினின்றும் இனிய பால் சொரியக் கன்றை அழைக்கும் குரலினவாய் மன்று நிறையும்படி பசுக்கள் புகுகின்ற மாலைக் காலத்தும் எம்மை நினைந்து நம் தலைவர் வாராராயின் என்னது தன்மை என்னவாகும்?

பாண! எனக்கூறும் மனையாளின் சொல்லுக்கு எதிர் ஒன்றும் புகலேன். செவ்வழிபாடும் நல்லயாழில் பையெனக் கடவுளை வாழ்த்தி, நினக்குத் துன்பஞ் செய்தவர் தன்மையை யான் சென்று கண்டேன்; குதிரை, அசைந்து வேகமாகச் செல்லுதலின் கல்லோடு உரோஞ்சி ஓசையைச் செய்யும் சில்லுடைய, முனையிடத்து வெற்றியுடைய நல்ல ஊரனின் தேர், கார்கால மழையின் முழக்கை ஒக்கும், என்று பாடுவேன்.

—ஒக்கூர் மாசாத்தனார்.

## 15. பாலை

[இது, மகட் போக்கிய தாய் சொல்லியது.]

உடம்பை மூடிய, கவசமுடைய தலைமையுடைய கோசரது, பெருத்த பசிய குடுமியுடைய பாகற் பழத்தை, வட்டமாகிய கண்ணுடைய பீலியுடைய மயில் உண்ணும் சோலையுடைய துளுவ நாடு போன்ற, வறிய விருந்தினரை ஓம்பும் பண்புடைய சேரிகள் செறிந்த மூதூரிடத்து முகமறிந்த மாக்கள் உடையாருக. தோழியரும் யானும் புலம்ப, முகபடாம் போர்த்தயானையும், சுடர் விடும் பூவுமுடைய நன்னனது பாழி போன்ற காவலுடைய மனையின் செறிந்த காவலைக் கடந்து மலை மூங்கில் போல் திரண்ட மெல்லிய தோளுடைய அம்மை, (அயலான்) ஒருவனோடு போகிய தன்மை, வழியிடத்துள்ள இருப்பையின் ஆர்க்கை கழன்று உதிர்ந்த புதிய பூவைத் தின்ற வாயுடையவாய், புழுதியுடைய நிலத்தே படர்ந்த கொன்றையின் கொம்பிலுள்ள குழல் போன்ற பழத்தைக் கோதி விட்டுப் போன வலியகையுடைய காடிக் கூட்டத்தின் பான்மையை ஒக்கும்.

இதன் உட்பொருள்: கரடி இருப்பைப் பூவைத்தின்று கொன்றைப் பழத்தைக் கோதிப் போனாற் போல. அவளும் தலைவனோடு கூடிய இன்பத்திலே நிறைந்த செருக்கினாலே, கூடி வளர்ந்த தோழிமாரையும் புறக்கணித்துப் போனாள் என்றவாறு. —மாமூலனார்.

## 16. மருதம்

[இது, பரத்தையர் சேரியினின்றும் வந்து யாரையும் அறியேன் என்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.]

நீர் நாயுடைய மூதிய நீரிற் செருக்கி வளர்ந்த தாமரை மலரின் தாதுடைய அல்லியின் பக்கத்தே உள்ள இதழ் போன்ற மாசில்லாத அழகியகையும்,பவளம் போன்ற சிவந்த வாயும், பேசிமுதிராத நகைதரும் மழலைச் சொல்லும் உடைய, யாவரும் ஆசைப்படும் பொன்வளை அணிந்த புதல் வனுகியநீ, தேரோடும் வீதியிலே தனியேசெல்வதைக்கண்ட, கூரிய எயிறுடைய பரத்தை அணுகி, யாரும் பார்க்காமையால் கருதிப் பேணி பொன்னு பரணங்களைச் சுமக்கும் பூண் தாங்கிய இள முலையிடத்து 'என்னுயிரே! வருக' என்று நின்னைக்கொண்டு நின்றாள்; நின் தோளைக்கண்டு நின்ற நிலையிற் பெயராது நின்றேன். குற்றமில்லாத குறுமகளே ! நீ எப்படி மயங்கினை ? (நீயும் இவனுக்குத் தாயாவாய்) என்று நான் சத்தமிட, நீயும் விரைய வந்து என்னைத் தழுவிக் களவு செய்ததை ஒத்துக்கொள்பவரைப் போற்குனிந்துநிலத்தைக் காலாற் கீறி நாணிநிற்க, நின் தோளின் தன்மையைக் கண்டு யானும் மகிழ்ந்தேன். வானத்து அணங்காகிய அருந்ததி அன்னள் மகனின் தாயாதல் யான் ஒத்திடும். (உன்னைவிட யான் அறியாதவள் என்றவாறு.)

—சாகலாசனார்.

## 17. பாலை

[இது, மகட் போக்கிய செவிலித் தாய் சொல்லியது.]

வளம் பொருந்திய அழகிய மனையிடத்துப் பந்து சிறிது எறியினும், துணையாகிய இளம் ஆயத்தாரோடு கழங்காடினும், சோர்ந்து மயங்கி வருந்தி வியர்வை பொறித்த நுதலளாய், அன்னையே துணை என்று தண்ணென என்னைத் தழுவி உறையும் அம்மே!

வளை அணிந்த ஆயத்தையும் எம்மையும் நினையாது, பெரும் புகழுடைய தந்தையின் அரிய காவலை நீங்கி அயலானொருவனது நெஞ்சம் தனக்கெனப் பெற்று இளமையிலேயே அறிவுமுதிரப் பெற்றாய்; பெற்று கல்லென்று ஊர்குடி எழுந்து சென்றாற் போன்ற அச்சந்தரும் செலவுடையராய் நீரில்லாத வழியிடத்தே போகும் வளைந்த கோலுடைய உமணர் எருதுகளை உரப்பும் ஓசை எதிரொலிக்கும் உயர்ந்த பெரிய மலையிடத்து, கடிய வெயில் வாட்டிய மூங்கில் வளரும் பாறையிடத்துப் பெரியயானை தனது மண்ணுள்ள அரையை உரிஞ்சிய அருஞ் சுரத்துக் கவர் பட்ட வழி மருங்கில், நீண்ட அரையுடைய இலவின் உதிர்ந்த மலர், விழா வெடுத்த பழைய வெற்றியுடைய பழைய ஊரிடத்து நெய் விளக்கிலிருந்து சுடர்விடுவது போலக் காற்றடித்தலிற் சிந்தி, விடி வெள்ளிபோலத் தோன்றும், கரிய பெரிய மலைகுறுக்கிட்ட சுர வழியைச், சிலம்பு ஒலிக்கின்ற நின் சிறிய பாதங்கள் கடக்கவல்லவோ.

—கயமனார்.

## 18. குறிஞ்சி

[இது, தோழி இரவு வருவானைப் பகல் வரவென்றது.]

நீரின் நிறம் மறையும்படி உதிர்ந்த விரிந்த மலர் செறிந்து வேகமாக ஓடும் கான் ஆற்றின் முதலை உறங்கும் உயர்ந்த கல்லின் மீது மோதி மறித்துவரும் நீர்ச்சுழி, மதயானையின் மதம் கெடும்படி சாய்த்து வலியோடு இழுக்கும் அச்சந்தரும் நீருடைய புகழமைந்த அரிய துறையை அஞ்சாது கடந்து, கரிய கண்ணுடைய பன்றியைப்போல யாமத்தே ஈங்கு வருதல் முறையோ? உயர்ந்த வெற்ப! ஒருநாள் துன்பம் நேரினும் அதை உணர்ந்த மறுநாள் என்தோழி உயிர் வாழ்வாளல்லள். இடையூறில்லாத வழிகளில் உலாவுவோரும் நீடுதலில்லையாகக் குற்றப்படுவர். அதனால் அழல் கின்ற வருத்தமுண்டாம். வளைந்ததேன் கூடுகளுடைய சோலைகளுடைய உயர்ந்த சிகரமுடைய நீண்ட வரையிடத்துப் பழந்தூங்கும் செறிவில் காந்தளம் பொதும்பரில் நீ வரின், அகன்றமலையிடத்துள்ளவளைந்த மூங்கிலின் கணுக்களுக்கிடையிலுள்ள நடுவுபோல, ஆய் பாதுகாத்து வளர்த்த தலைவியின் மெல்லிய தோளைப் புணர்குவை.

தேன்கூடு உடைய என்றதனால் தேன் எடுக்க வருவாராலும், பழந்தூங்கும் செறிவு என்றமையால் பழமெடுக்க வருவாராலும், காந்தளம் பொதும்பர் என்றமையான் பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதெனக் குறிப்பான் மறுத்தாள் என்றவாறு.

—கபிலர்.

## 19. பாலை

[இது, நெஞ்சினாற் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் தலைமகள் நலன் நயந்து உள்ளிய நெஞ்சினைக்கழறியது.]

(பிரிந்த) அன்று அவ்விடத்து ஒழிந்தாயுமில்லை. என்னுடன் போந்து மிகவும் வருந்தினாய்; நெஞ்சே! வாழ்வாயாக; பருந்து இருந்து கரையும் உயர்ந்த இடத்தே, குறுந்தடி உருள்கின்ற ஓசையில் 'குத்திப்புதை' என்னும் பொருள் தோன்ற அழும் குரலுடைய கூகை உறையும் நெடிய பெரிய குன்றை நம்மோடு கடக்கவும் வாராய்; எமது உவகையை ஒழிக்க நினைந்தனையாயின் நிச்சயமாகத் திரும்பிச்செல்; நின் உள்ளம் விரும்பியதை நினைந்து பெறுவதாக. குவளையின் கரிய இதழ்போன்று நீர்கொண்ட கண்கள், நறவின் சிவந்த இதழ்கள் போலாய், உள்ளம் கனலும்படி உள்ளுநோயால் வற்றி, பின் வருத்தங்கொண்டு கலங்கி வீழ்கின்ற கண்ணீர் வெய்தாய் உகுதலின், பிறர் காண்பரென்று அஞ்சி, சில்வளைகள் போகிய மெல்லிய இறையுடைய முன்கை பூ உதிர்ந்த கொடி போல் புல்லிதாகி, பொற்றகடு போன்ற விளக்குத் துணையாக ஓரிடத்திலிருக்கும் நங் காதலியின் மெலிந்த சிறு புறத்தை முயங்கிய பின் நம்மைக் கடுக மறவாதிருக்க வேண்டும்; நெஞ்சே! வாழ்க. சிறுபுறம்—முதுகு.

—பொருந்தில் இளங்கீரனார்.

## 20. நெய்தல்

[இது, பகற்குறிவந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன் கேட்பச் சொல்லியது.]

பெரிய கடலிடத்தினின்றும் எமது தந்தை கொணர்ந்த கொழுத்த மீன் கருவாட்டைக் கவரும் புட்களை மணலு

டைய புன்னை நிழலிலிருந்து ஓப்பியும், சிவந்த நண்டின் ஒடுங்கிய வளையைக் கிண்டியும், ஞாழல் மரத்தின் உயர்ந்த கொம்பிலும் கழியிடத்துள்ள வளைந்த தாழையிலும் பிணித்த ஊசல் ஆடியும், கீழ்காற்று மணலைக் கொண்டுவந்து குவிக்கின்ற கடல் முகத்தே ஆயத்தோடு வெள்ளிய திரையுடைய கடலாடியும், அழகிய பூவோடு கூடிய தழைகளை உடுத்தும், அணித்தே உள்ள பலவகைப் பூக்களுடைய சோலையில் தலைவனோடு நீ வருதலாகிய கவ்வையை, பேயுடைய இவ்வூரிடத்துக் கொடியவற்றை அறிந்து கூறும் பெண்டிர் சொல்லக் கேட்டு அன்னை நின்னைக் காவல் கொண்டாள்; இப்பெரிய துறையிடத்து இரவு பகல் என்னாது, பாகன் ஆராய்ந்துகொண்ட அழகிய குதிரை நிலவுபோன்ற மணல்மேல் இழுத்துத் திரியும் ஓர் தேர் உண்டெனா அன்னை அறிவாள்.

—உலோச்சனார்.

## 21. பாலை

[இது, பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து நின்று மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.]

மணைக்கு வேலியாகிய இளமல்லிகை மொட்டின் இரண்டு நிரை அன்ன அழகிய வெண்பல்லும், ஐதானவயிறும், அகன்ற அல்குலும், பின்னித் தாழ்ந்த மெல்லிய கூந்தலும், விசாலித்து மெத்தென்ற பணைத்ததோளும் உடைய மடந்தையின் மாட்சிமைப்பட்ட அழகு வருந்த, தொலைவிடத்தே செல்லாதே என்று யான் சொல்லவும் கேளாய்; கேளாது பொருள் பெறுதலை விரும்பி அதற்கமையச் சென்றாயாயின் தலைவி உவப்ப பல்வேறுவகைப்பட்ட செல்வத்தை (விரைந்து தருவேன் என்றனை). இப்பொழுது செல்லற்குப் பின் நிற்கின்றனை; பூ

எடுப்பவன் மெத்தென்று மலர்கின்ற கொம்புகள் பூவின் றித் தனிக்க, பெரிய கிளையை மலர் ஊதிரும்படி கோலால் அடிப்பதுபோல, ஆச்சாமரத்தை மலைந்த மணமுடைய தென்றல் சுரத்தே செல்லும் மள்ளரது சுருண்ட மயிரைத் தூற்றும். இவ்வாறான புல்லிய இடத்தே பருந்து அடை காக்கும் சரிந்ததலையுடைய ஓமை மரங்கள் நிற்கும் பெரிய மலை முழைஞ்சில் ஈன்று காவற்பட்ட மெல்லிய புனிற்றுப் பிணவு பசித்ததாக, பசிய கண்ணுடைய செந்நா யேறு பன்றியைத் தாக்க, அப்பன்றிப் பிணு அடித்தலிற் செங்காயுதிர்ந்த ஈந்தின் பரலோடுகூடிய மண்ணையுடைய மேட்டு வன்னிலத்தை வெட்டிய, வலிய வாயுடைய குந்தாலி யால் தொழில் புரிந்து சீவிப்போர், ஊறுமையால் விட்டுச் சென்ற கூவலை, யானையின் வெள்ளிய கோட்டை விரும் பிய கானவன், அவ்விடத்தே தம்மைப் பிடித்தற்கு அகழ்ந்த குழியெனக் கருதிப் பெரியகளிற்று நிரை தூர்க்கும் பெரிய கல்லுடைய வழியின் குறுக்கே கிடக்கும் காட்டிலே, நெஞ்சே! இப்பொழுது எழுந்து செல்வாயாக.

—காவன் முல்லைப் பூதனார்.

## 22. குறிஞ்சி

[இது 1. வரை விடை வைத்துப் பிரிந்த காலத்துத் தலைமகள் ஆற்றாளாகத் தலைமகனை இயற் பழிப்பத் தலைமகள் இயற்பட மொழிந்தது. 2. தலைமகன் இரவுக் குறிவந்து சிறைப் புறத்தா னாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது உமாம்.]

வெறியாட்டெடுத்து வந்த வேல! கோபிக்காதே. ஒன்று வினவுகின்றேன். பலவகையான மடையோடு ஆட்டுக் குட்டியைக் கொன்று இவள் நெற்றியைத் தடவி வணங்கிப் பலிகொடுத்தாயாயின், விண்ணைத் தீண்டும்

மாமலையிடத்துள்ள சிலம்பனது தண்ணியதார் அணிந்த மார்பும் அப்பலியை உண்ணுமோ. (முருகனாலன்று சிலம்பனால் நேர்ந்தது இந்நோய் என்றவாறு) தெய்வ முறைகின்ற நீண்ட மலை உச்சியினின்று கூட்டமாகிய அருவி ஒழுகுகின்ற மலை நாடனது மணநாறுகின்ற மார்பு வருத்திய வருத்தம் இதுவென ஆய் அறியாள்; அறியாளாய் சுழற்சியுற்றுப் பகைவரைத் தேய்த்த பலர் புகழும் தடக்கையுடைய வேலனைப் பரவ இந்நோய் தணியுமென முதிய பெண்கள் கூறக் கேட்டாள். கேட்டு வெறியாடு களன் நன்கு அமைத்து வேலனுக்குக் கண்ணி சூட்டி, வளம் பொருந்திய மணி ஒலிக்கும்படி பாடி (செம் மறிக்குட்டியைப்) பலிகொடுத்து, இரத்தத்தோடு கலந்த செந்தினையைத் தூவி முருகக் கடவுளை வழிபட்ட அச்சந் தரும் நடு இரவில், சந்தனச்சேறு நாற, வெடிப்புகள் செறிந்த மலைச்சாரலிலுள்ள பூக்களை வண்டுகள் மொய்க்கும் படி சூடிக், களிறை இரைகொள்வதற்கு வேட்டம் புரியப் பாறை ஒதுக்கோடு ஒளித்துத் திரியும் வீரமுடைய புலிபோல, அழகிய மணிகளுடைய பெரிய நகரைக் காக்கும் காவலர் அறியாது வந்து தனது நல்ல விருப்பமிருந்த நெஞ்சத்து வேட்கை மீதூர இனிய உயிர் குழையத் தழுவுந்தோறும் மெய்பூரித்து, நோய் வேலனால் நீங்கினமை கண்டு மகிழ்ந்தேன்! யான் எய்திய நோயைத் தணித்த காதலரின் வரவு குற்றமில்லாததாகும்.

வெறியெடுத்துத் தீராத வழியில் அஃது யாராலே வந்ததென்றறியாதபடி வரைய வந்த பெருதவியினரைப் பொல்லாங்கு சொல்லக் கடவையோ என இயற்பட மொழிந்தது.

"முருகயர்ந்து வந்த முதுவாய் வேல, சினவ லோம்புமதி வினவுவ துடையேன், பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு, சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி, வணங்கினை கொடுத்தியாயி னணங்கிய, விண்டோய் மாமலைச் சிலம்பன் றண்டார கலமு முண்ணுமோ பலியே." குறுந்தொகை 362.

— வெறிபாடிய காமக்கண்ணியார்.

## 23. பாலை

[இது, தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

பறையின் குரலுடைய மேகம், நிலம் குளிரும்படி பெய்த தண்ணிய மழையின் ஓசை நின்றது. புதர் மீது தவழ்ந்த செம்முல்லையின் முள்ளுடைய பூங்கொத்துக்கள் பிடவோடு ஒருங்கு முறுக்கவிழ்ந்து காடு கம் என்று மணம் வீசிற்று. வலம்புரிச் சங்கு உடைந்தாற்போன்ற மலருடைய வெண் காந்தளைக் களையாகவுடைய வரகு முதலிய பயிர்களி னிடையே கிடந்த அறுகப்புல்லின் கிழங்கை உண்ட மதத்த நடையுடைய தலைமை மிக்க ஆண்மான் அமைதியாகிய பிணையைத் தழுவி தண்ணிய நீரைப் பருகி ஓரிடத்திற் தங்கும். மனையிடத்துள்ள குறுகிய மௌவல் சூழ்ந்த குறுகிய நொச்சியின் கரிய கொம்பு மலர்ந்த அளவே நங் காதலர் பிரிந்து பெறும் பொருள். நொச்சி மலர்ந்த மாத் திரையே மேலே போயிற்றோ ?

—ஒரோ டோக்கத்துக் கந்தரத்தனார்.

## 24. முல்லை

[1. தலை மகன் பருவங் கண்டு சொல்லியது. 2. வினை முற்றுந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம்.]

யாகம் பண்ணுத பார்ப்பான் வாள்போன்ற அரத்தால் அறுத்தெறிந்த சங்கின் தலைபோன்ற முறுக்கவிழாத கரிந்த

முகமுடைய பகன்றை, சிதறுகின்ற துவலை தூறலின் மலரும். இவ்வாறான தைத்தன்மையைப் பெற்ற தண்ணிய மழைக்காலத்தின் கடை நாளில் (பனிக்காலத்து) சூரியனது கிரணம் மறைந்த வாடைக் காற்று வீசும் வைகறைக் காலத்து விசும்புரிவதுபோல் கரிய பெரிய முகிற் கூட்டங்கள் தெற்கே செல்லும், பனிமிகுந்த இராக்காலத்தை, தம் மூரிடத்தாளாகிய நல்ல நெற்றியுடைய நங் காதலி தமியளாய்க் கழிக்கின்றாள். இஃதிவ்வாறாக, காவலுடைய பகைவரின் மதிற் கதவைப் பாய்தலின் பூண் பிளந்து கூர்மழுங்கிய மணைந்த வெள்ளிய கோடுடைய சிறுகண் யானையின் நீண்ட நாவுடைய ஒள்ளிய மணி, தடியிற் பிணித்த பரிசையிடத்து சொரிகின்ற கணை உதைப்பின், தழங்குகின்ற குரலுடைய முரசின் ஓசையைப்போல் ஒலிக்கும் யாமத்தும், வலிய வாளை உறையினின்றும் உருவி வலிய தோளிடத்தே சார்த்தித் துயில்கின்ற தானையுடைய கொடிய சினமுடைய வேந்தனது பாசறையிடத்தேம் யாம்.

காதலி மனையிடத்தே தனித்து உறைய, யாம் பாசறையிடத்தேம் என்றவாறு. பரிசையில் அம்பு உதைக்குமோசை முரசொலிபோன்றது, அம்முரசொலிபோன்றது மணி ஒலி.

—ஆலூர் மூலங்கிழார்.

## 25. பாலை

[இது, பருவங் கண்டழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

நீண்ட கரையுடைய கான் ஆற்றின் வேகமாக ஓடும் புனல் வாரடித்துக்கருமணல் கொண்ட மணல் பரந்த பெரிய துறையின் நீர் நிலைக்கு அணித்திலுள்ள பொழில்கள் தோறும் காஞ்சியின் பசியதாது பரந்த பூக்கள் குவிந்த மணல், புதிய வதுவை மகளிரின் நாற்றத்தை வீசும். மரங்

களினிடையே பூங் கொத்துக்களைக் கோதிய குயில், தினமும் நடு நின்று சில வார்த்தை உரைப்பவர் போல், பெடையுஞ் சேவலுமாக மாறி மாறிக் கூவும். வண்டின் கூட்டம் கோங் கின் மலரை ஊதி இலவின் மீது உதிர்த்த தாது, வர்த்தகர் பவளச் செப்பில் பொன்னைச் சொரிந்தாற் போல் தோன்று நிற்கும், இகழ்ந்து பிரிவோரும் பிரியவொண்ணாத இள வேனிற் காலத்தை, துன்பஞ் செய்த காதலரின் குறியென நீ வருந்துகின்றாய். வருந்தித் துன்பத்தை உண்டகண்கள் நீர் சொரிய வெறுத்த நெஞ்சோடு 'என்னுயிர் நோவதாக' என்று கூறி வருந்தும் குறமகளே வருந்தாதே கொள்.

வேந்தரது போர் தொலைத்த வில்லும் தடக்கையும் உடைய போதியிற் செல்வனாகிய பொன்தேருடைய திதி யனது இனிய வாத்தியம் போல ஒலிக்கும் மலை அருவி யுடைய காட்டைக் கடந்து சென்றார், மெல்லிய இனிய வார்த்தைகளைக் கூறி விரைவில் வருவார். தோழீ! வாழ் வாயாக.

—ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்.

## 26. மருதம்

[இது, தலைமகன் தோழியை வாயில் வேண்டி, 'அவளால்தான் வாயில் பெறாது ஆற்றாமையே வாயிலாகப்புக்குக் கூடிய தலை மகனீக்கத் துக்கண்புக்க தோழிக்குத் தலை மகள் சொல்லியது].

பெரியமதிற் கதவைப் பெயர்த்த யானையின் மருப்பில் இறுக்கிய இரும்பாற் செய்த பூண் போன்று கரிய முலைக் கண் மார்பகத்தே பொருந்த முயங்கலில் வருந்தி நீங்கென வும் நீங்காராய் தாம் பாராட்டிய காலமும் உண்டு. இப்பொ ழுது புதல்வன் உண்கின்ற பாலோடு சரிந்து தேமல்படர்ந்த பெரிய தனங்கள் நறுஞ் சந்தன மணிந்த ஒள்ளிய மார்பைப்

பாலொழுக விம்மும்படி முயங்க விரும்பினேம். இனியபால் படுதலை அவர் அஞ்சினர். அப்போது அகவொழுக்கம் நழுவுதல் கருதி, செவிலியின் கையிற் கிடந்த செருக்கிய நடையுடைய என் புதல்வனை நோக்கிப் 'பரத்தையர்க்கு ஒத்தனிர் நீர், இச் செல்வர்க்கு ஒத்தனம் நாம்' எனக்கூறி அவன் கிட்டச் சென்றேன். அது கண்ட என் தலைவர் 'யானும் அவனிடத்துக் காதலுடையேன்' எனக்கூறி என்னிடத்திற் சாய்ந்து முதுகைத் தழுவினன்; தழுவி மழைத்து மிக்குப் பல படியாக உழுத செம்பாட்டு வயல் நிலத்து மண் போல நெகிழ்ந்து கலங்கிக் கண்ணீர் உகுத்தான். இவ்வாறு நின்ற, கூரிய முள்ளுடைய முள்ளியின் பூங் கொத்தினின்றும் விழுந்த மீன் முட்போன்ற வெள்ளிய காம்புடைய அழகிய மலரை விளையாட்டு மகளிர் விழாவுக்கு அணியாகக் கூட்டும் இடத்தே (= பரத்தையர் சேரிக்கு) சென்ற வளம் பொருந்திய நாடனை, வருந்தச் செய்த அறிவுடையேற்குப் புலத்தல் கூடுமோ. இராப் பொழுது வருத்தத்தோடு கழிந்தது.

இதன் உள்ளுறை பொருள் : முள்ளியின் பக்கலிலே தோன்றி வாழும் பூ அதனை விட்டுப் பிறர்க்குப் பயன் பட்டவாறு போல நம்முடன் பிறந்த நெஞ்சு அவருடன் ஏகுகையாயிற்று; அவருடைய வதுவை விழவிற்குத் துணையாய்த் திரியா நின்றால் புலத்தல் கூடுமோ என்றவாறு.

—பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி

## 27. பாலை

[இது, செலவுணர்ந்து வேறு பட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

வடக்குத் திசையிலுள்ள வேங்கடத்து வேந்தர் வெள்ளிய கொம்புடைய யானைகளைத் திறையாகக் கொடுக்கும்

பாண்டியர், அறத்தோடு காக்கும் கொற்கைப் பெருந்துறையிடத்துப் பெறும் முத்தன்ன நகைபொலிந்திலங்கும் எயிறு பொருந்திய துவர்வாய் நின்காதலரின் பிரிவைத் தடுக்கும்; அத்தடைக்குத் தங்காராயின், பாண்டியன் அழிக்க அழிக்க அடங்காத வேந்தரைப் பருந்து சூழும்படி வென்ற வெற்றியுடைய வேல் இரத்தத்தோடு அசைவதுபோல் செவ்வரி பரந்ததும், தெளிந்த நீருக்கேற்ற திரண்ட காம்புடைய தேன்பாந்த குவளை மலர் ஒத்ததுமாகிய நின் கண்ணின் நோக்கு அவரை எவ்வாறு அகலவிடும்? விடாது காண். இது இவ்வாறாகவும், நல்ல மடம் பொருந்தியவளே! உயர்ந்த மலையிடத்து ஆடுகின்ற தண்டுடைய பெரிய திணித்த மூங்கில் மேல்காற்றுக்கு ஒதுங்குதலால், வளைந்த வரியுடைய புலி தோன்றும் காடும் அரியவென்றது, இன்ன விடத்தில் கிடைக்கும் என்று சொல்லுதற்கில்லாத பொருளை நாம் மகிழும்படி கொண்டு வருதற்குச் செல்வாரென்று சொல்லா நின்றார்களென்றாய்.

—மதுரைக் கணக்காயனார்.

## 28. குறிஞ்சி

[இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லு வாளாய்த் தோழி சொல்லியது.]

தோழீ! ஒருவர் மெய்யினின்றும் ஒருவர் நீராமைக்குக் காரணமாகிய காமமோடு நீ வருந்துவாயானால், கூறுவேன் கேட்பாயாக. தினையின் நீண்ட கதிர் கொய்தற்கு முன் உதிரும்; அருவி ஓடும் அகன்ற பசிய வாய்க்கால் தோறும் கதிர் கொய்த தினையின்தாள் பல தோன்றாநின்றன. முருகனைப்போன்று வலிய தேன்பாயும் கண்ணி சூடி மகிழ்ச்சியுடையனாய்ப் பல மலைகளிற் செல்லும் வேட்டுவ

மைந்தனை நீ பொருந்தினாய். தாழ்ந்த பூமாலை எழுந்தெழுந்தசைய இடையிடையே 'ஆயோ' என்னும் சத்தமிட்டுக் கிள்ளைகளை ஓட்டாயானால், ஆய், இவள் கிளியோட்ட அறியாள் எனக்கூறிப் பிறரை அனுப்பி உன்னை நிறுத்துவாள்; பின்நின் காதலனின் மலர்ந்த மார்பு உனக்கு அடைதல் அரிதாகும்.

—பாண்டியன் அறிவுடை நம்பி

## 29. பாலை

[இது, வினைமுற்றி மீண்ட தலைவன், எம்மையும் நினைத்தீரோ என்ற தலைமகட்குச் சொல்லியது.]

குறிவைத்துப் பாய்வதிற் றப்பாத வலிய தாள்களுடைய புலி, கிடந்து பசியால் வருந்துவதாயினும் வேட்டம் புரிந்த களிறு இடப்பக்கத்து வீழ்ந்ததாயின் அதனைப் புசியாது. அப்புலியினுஞ் சிறந்த ஊக்கம் மென் மேலும் சிறக்க வினை செய்தற்கு அகன்றீர். கத்தியால் வெட்டி இருகூறுக்கினது போன்ற அழகிய விலங்கின் பிளவுபட்ட அடிபோலப், பார்க்கும்போது பொருந்தாத, மகிழ்ச்சியை உண்ட நின் கண்ணின் நோக்கை மறந்து சிறிதும் உயிர் வாழேன் எனக்கூறி என்னைத் தேற்றிய பெருமை சான்ற நன்மொழிகளை மறந்தீர்; என்னையும் நினைந்தீரோ என அழகிய எயிறு பொருந்திய துவர் வாயிற் புன்னகை தவழ வினவினாய்; அழகிய ஆபாணங்களை உடையவளே! கேட்பாயாக.

(யான் சென்ற சுரவழி மிக அருமையுடையது.) வெம்மை குறையாத நெருப்பைக் கொட்டினாற் போன்ற பாழிடத்து வாடிய தலைமையுடைய யானை நீர்காணும் இடம் அறியாமல் பேய்த் தேரை நீரென மருண்டு சென்று நீர்ற்ற

ஆற்றின் குழியில் வெயிற்காய்கின்ற, நினைப்போர் தலை நடுங்கும் செல்லற்கரிய காட்டிடை, எள்ளத்தகாத பொருள் தேடும் பொருட்டுத் தொடங்கின காரியம் முடியவேண்டுமென்னும் மானம் தளையாகச் சென்று, மாட்சிமைப்பட்ட வினைக்கு உடல் அவ்விடத்து இருந்ததன்றி, எனது பிருதுவான நெஞ்சு உன் இடத்ததே. துவர்வாய்—சிவந்த வாய்.

—வெள்ளாடியனார்.

## 30. நெய்தல்

[இது பகற்குறிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நெடிய (வலை இறுக்கும்) கயிறு கட்டிய குறுகிய கண்ணுடைய வலையால் கடல் பெருமை அழியும்படி திரளாகிய மீனைப்பிடித்துத் துணைவரைச் சேரும் உவகையராகிய பரதவர், இளையரும் முதியோருமாக ஓரிடத்தில் நெருங்கி, உப்பு விற்கும் உமணர் அரிய துறையிடத்து ஓட்டிச் செல்லும் வலிய எருதுகளைப் போல் குழுமுவர்; குழுமி மீன்களை நுண் மணல் செறிந்த கரை ஆரவாரமுறும்படி இழுத்துவந்து, பெரிய நெற்களமுடைய உழவரைப் போல இரப்போர்க்கு வறிய கலம் நிறைய அளிப்பர்; அளித்துப் பல கூறுகள் செய்து அவற்றில் விலையைக் கூறி விற்று உயர்ந்த மணலிடத்தே உறங்குவர். இவ்வாறான துறையுடையவனே! கழுவாத முத்துப் போலமுகை அரும்பிய புன்னைமரங்கள் நிற்கும் குளிர்ந்த கடற்கரையில் வந்து உமது வண்ணம் அழிந்ததன் காரணமென்ன என்று ஒரு நாளாவது வினவிப்போகில் நின் பெருமை என்பது கெடுமோ?

இதன் உள்ளுறை பொருள்:—பெருங்கடலுட்சிக்கிக் கிடக்கின்ற மீனை நுளையர் அதனின்று நீக்கி உயிர் செகுத்துக், கண்டாரெல்லார்க்குங் கூறுவைத்துப்பாப்பிப் பின்பு

உயிர்வருந்திநோமென்னுமிரக்கமின்றி, மணற் குன்றிலே யுறங்கினாற் போல, பெருங் குலத்துப் பிறந்த இவளை நீயிர் நும்வசமாக நீக்கி வருந்தி, வேறு பாட்டாளெல்லாரு மிவளைச் சூழும்படி அலராக்கிப் பின்பு நீர் துயரமின்றி உறங்குகின்றீர் என்றவாறு.

புன்னை அரும்பியவென்றதால் பகற்குறிதடைப்பட்டது கூறியதாகும். வண்ணம் கேட்கில் வரைவர் என்பது பொருளாம்.

—முடங்கிக்கிடந்த நெடுஞ் சேரலாதன்.

## 31. பாலை

[இது, பிரிவிடை ஆற்றாளாயினளென்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

வெப்பத்தோடு விளங்குகின்ற, நெருப்பெனச் சிவந்த சூரியன் தரையிலுள்ள பயிர்களெல்லாம் தீயும்படி தெறுதலின், ஆண்டு வாழும் மக்கள், நிலம் சுருங்கி இன்று நிலை குலையும் காலம் எனக்கூறி மடிந்த, மழை அற்ற காலத்து, உயர்ந்த யாமரத்தின் மேற் கொம்பில் இருந்த குஞ்சுகளுக்கு, கல்லுடைய குறும்பில், ஆறலைப் போர்வில் லிடத்துப் பட்டு, நிணம் குறைந்து சிவந்த நிறம் கூடிய இரத்தம் சிந்துதலால், வழிதோறும் செவ்வலரிமாலை இட்டுக் களைந்தாற்போல் புண்களினின்றும் கொப்பளிக்க வீழ்ந்து கிடப்போரின் இரத்தத்தைக் கழுகு உரிஞ்சிக் கொடுக்கும். தோழீ! இவ்வகையான காட்டைக் கடந்து, வெற்றியோடு வில்லாற் பொருது உண்ணும் வலிய ஆண்மையுடைய வாழ்க்கையாகிய தமிழ் மூவேந்தர் காக்கும் மொழி வேறுபட்ட தேயத்திலுள்ள பல மலைகளைக் கடந்து நங் காதலர் சென்றார் என்று சொல்லுவா

ரில்லை. (பிரிவாற்றாமை வருந்துகின்றாளென்று சொல்லுவர் என்றவாறு.) யா = ஓமை மரம்.

—மாமூலனார்.

## 32. குறிஞ்சி

[இது, 1. பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது. 2. தோழிக்குத் தலைமகள் சொற்றதூஉமாம்.]

அழகிய மணிகள் ஒளிவிடுகின்ற பூணணிந்த தோளினல், நேற்றுத் தினைப்புனத்தே தோன்றிக் காப்பவன்போல் இல்லாது மாறுபட இரப்பவர்களைப் போலத் தாழ்ந்த சிலவற்றைக் கூறித் 'தினையில் விழுகின்ற கிளிகளை ஓட்டுதற்கு மாட்சிமைப் பட்ட ஈரமாகிய தட்டையை மெத்தெனப் புடைத்து தெய்வமகள்போல நின்ற நீவிர் யாரோ?' என வினவினன். வினவி, என்னை வருத்தினய், உன்னைப்பெற்று மகிழ்வேன் எனக்கூறி எனது முதுகைத் தழுவினன். அதனால் மழைபட்ட மண்ணைப் போல் நெகிழ்ந்த என் உள்ளத்தை அவன் அறிதலை அஞ்சி நினைத்தற்குக் கடியவற்றைக் கூறிக் கைப்பிணிப்பை விடுவித்து, வெருண்ட பெண்மான்போல் ஒதுங்கி நின்றேன். எனது வயிரமாகிய தன்மையைக் கண்டு மறுபடி வேறு வார்த்தைகளைச் சொல்லவல்லுனன் ஆயினனல்லன். வருந்தி இனம்பிரிந்த களிற்றைப்போல் நீங்கினேன் மறுபடியும் வராமல் போமாறில்லை. தோழி! யாம் இவ்விடத்தை விட்டுச் செல்வோம்.

சாய்ந்த இறையுடைய பணைத்த எனது தோள்களின் உரிமை தனக்கே குற்றந்தீரக் கிடைப்பது அறியாது வருத்தமுற்று என்னைப் பெருங் குறைக்குப் பின்னின்று முயலும் கண்ணைப்போன்றவனை நாம் நகுவேம்.

இதனைத் தோழி கூற்றாகக் கொள்ளுமிடத்து தலைமகன் உன்னைத் தழுவினானாக அவனை நான் விடுவிக்க நீ மான்போல நின்றாயென்றும், அவன் என்னிடத்திற் பின்னின்று முயலுவன் என்றும் பொருள் கொள்க.

—நல்வெள்ளியார்.

## 33. பாலை

[இது, தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

பொருள் தொகுத்தற்குப் பிரிதல் மிக நன்றாதலை அறிவித்து, மனைமாட்சிமைப் பட்ட கற்புடைய ஒள்ளிய நெற்றியுடையவளைப் பிரிந்து, கவைத்த கொம்புகள் இழந்த நேரான யாமரத்தின் முதிய உயர்ந்த கொப்பில் இருந்த வலிய இறகுடைய சிள்ளென்னும்ஓசை செய்யும் பருந்தின் இரைகொள்ளவல்ல சேவல், வளைந்தவாயுடைய பேடைவரும் பொருட்டு இளி என்னும் இசை போன்ற குரலால் அழைக்கும் அரிய வழி, செல்லுதற்கு அரிய வென்றாது, அவ்விடத்தே சென்று, காதலியின் மலரின் பெருமை சான்ற மழைக் கண்ணின் வெருண்ட நோக்கை நினைந்தாய்; உளி போன்ற வாயுடைய கொடிய பாற்கற்கள் பரந்த அரிய வழியுடைய பல குன்றுகளைக் கடந்து யானே தனியாகச் செல்ல நீ மேற் செல்லாமையை விரும்பினாய்; விரும்பி பழைய வெல்கின்ற போருடைய வானவனது கொல்லிமலை மீதுள்ள மெல்லிய மூங்கில் போல் வளைந்த இறையும் பணை போன்ற தோளும் திதலை அணிந்த அல்குலும் வெள்ளிய எயிறுமுடையாளின் தோளைப் பிரியாதிருக்க விரும்பினையாயின் நன்றல்ல. பிரிகின்ற அன்று நாம் முடியப் போக மாட்டேமென்று உள்ளபடி அறியாதே பிரிந்தாயாயினும்

இன்று நாம் செய்வினையின் பொருட்டு வழியிடத்தே வந்த அளவில் நீங்குவாயாயின் பிறர் சிரிக்கத் தக்கதாகும்.

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.

## 34. முல்லை

[இது, வினைமுற்றிய தலைமகன் தேர்ப் பாகற்குச் சொல்லியது.]

சிறிய கரிய பிடவின் வெள்ளிய தலையுடைய குவிய புதர், கண்ணியைப் போன்று மலர்ந்திருக்கும் தண்ணிய நறிய முல்லைக் காட்டில், செருப்புத் தொட்ட கானவன் கவர்த்தடிகளைச் சுமந்து சென்றாற் போன்ற பெரிய முறுகிய கொம்புடைய தலைமையுடைய மான், செறிந்த இலை உடைய செங்கோலறுகின் மெல்லியகொத்துகளைப் பக்கத்தே நின்றுவிளையாடும் பெண் மானுக்கு அருத்தி தெளிந்த நீருடைய ஆற்றின்வார்ந்தமணலுடையகரையில் அசைஇடுகின்றகவுளதாய், உறங்குகின்ற இடத்தைப் பாதுகாக்கும் பெருந்தன்மைக்குநெஞ்சம்உடைந்தது;பெரியதோளுடைய கீழ்மகள் (வண்ணாத்தி) அழுக்குப் போக்கித் துறையிடத்துக் காயவிட்ட வெண்டுகில் போன்ற வெண்தூவி யுடைய அன்னம் பேட்டோடு விளையாடும் காவலுடைய மனையில், சிவந்த தாருடைய கிளியை முன்கையில் ஏந்திய அரிவை 'பிரிந்தகாதலர் இன்று வருவர்என்றுகூறாய்' எனச்சொல்லிப் பின், வீட்டிலுள்ளார் அதனைக் காண்பரென நாணத்தால் அஞ்சி இனிய மழலைச் சொற்களை அதற்குப் பயிற்றுவாள். இவ்வாறு நாணுடைய அரிவையின் மாட்சிமைப் பட்ட நலனைப் பெறுதற்கு கடுக விடவல்ல வெற்றியுடைய பாகனே தேரைச் செலுத்துக.

—மதுரை மருதன் இளநாகனார்.

## 35. பாலை

[இது, மகட் பேக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது.]

ஈன்று பாதுகாத்த என்னையும் நினையாது, காவலுடைய அழகிய வானை முட்டும் மனை தனிக்க, தனி மணி ஒலிக்கும் காம்புடைய நீண்ட வேலையுடைய, அரணிடத்துள்ள மழவர், பகைப்புலத்தார் கவர்ந்து சென்ற நிரையை முனையிடத்தே பொருது மீட்டு, வன்னிலத்தே வீழ்ந்த வில்லேர் வாழ்க்கையராகிய குறி தப்பாத அம்புடைய மறவரின் வலிய ஆண்மையின் ஞாபகமாக நிறுத்திய பதுக்கைக் கடவுளை வழிபடுவோர், அந்நடு கல்லுக்கு மயிலிறகு சூட்டித், துடிகொட்டி, நெல்லினாற் சமைத்த கள்ளோடு செம்மறிக் குட்டியைப் பலியாகக் கொடுக்கும், போதற்கரிய வழியுடைய அருஞ்சுரத்தே செல்லத் துணிந்து பிறள் ஆயினள்; ஆயினும் அன்புடைய நெஞ்சோடு ஆயத்தாரால் அணிந்தணிந்து அலங்கரிக்கப்பட்ட அழகைப் பெற்று எனது மார்பு துணையாகத் துயிலினல்லது துயிலாத, துஞ்சாத முழவுடைய நீண்ட தேருடைய திருக்கோவலூரின் அரசனாகிய நெடிய தேருடைய காரியின் கொடுங்காலூரின் முன் துறையிடத்துள்ள பெண்ணையாகிய பெரிய ஆற்றின் நுண்ணிய அறலை ஒத்த சுருண்டு நெளிந்த கூந்தலுடைய பேதைக்கு அறியாத் தேயத்து அம்மழவ நாட்டார் துணையாவாராக.

—குடவாயிற் கீரத்தனார்.

## 36. மருதம்

[இது, தலைமகள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு புலந்து சொல்லியது.]

அங்காந்த வாயுடைய வரால், பல வரியுடைய பெரிய இலையாகிய படுக்கையின் கீழ் இருந்து தூண்டிலிற் கொளு

வீய இரையை நுகர்ந்து ஆம்பலின் மெல்லிய இலை கிழியவும் குவளையின் கூம்பிய மலர் சிதையவும் பாய்ந் தெழுந்து, தூறு பட்ட வள்ளையின் கொடியை நீக்கி, தூண்டிலிட்ட வேட்டுவன் இழுக்க வராது, கயிற்றிற் பிணித்த கோபங்கொண்ட எருதுபோல மதமிகுந்து விடி யற் காலத்தே மடுவைக் கலக்கும் பூக்களுடைய ஊர! வையையின் ஓடுகின்ற நீர் வாரடித்த மணலுடைய அகன்ற துறையிடத்தே அழகிய மருத மரங்கள் உயர்ந்து வளரும் விரிந்த மலருடைய பூங்காவில் நறிய கூந்தலும் குறிய தொடியுமுடைய பரத்தையோடு வதுவை அயர்ந்தா யென்று அலர் கூறுவர்; அவ் அலர், கொய்த பிடரி மயிருடைய குதிரை பூட்டிய பாண்டியன், ஆலங்கானத்து அகன்ற போர்க்களம் இரத்தத்தாற் சிவப்பச் சேரல் செம்பியன், சினம் பொருந்தியதித்தன்; போர் வல்லயானை யும் பொற் பூவுமுடைய எழினி, பன்னுடையால் வடிக்கப் படும் நறவுடைய எருமையூரன், மணங்கமழும் மார்பிற் புலர்ந்த சாந்துடைய இருங்கோவேண்மான், அழகிய தேருடைய பொருநன் என்னும் எழுவரின் நல்வலி அடங்க ஒரு நாள் ஒரு பகலிலே, முரசோடு வெற்றிக்குடை யை அகப்படுத்திப் புகழ் மிக்க களவேள்வி செய்த போது வெற்றிவீரர் ஆர்த்த ஆர்ப்பினும் பெரிதாகும்.

—மதுரை நக்கீரர்.

## 37. பாலை

[இது, 1. தலைமகள் தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது. 2. பிரிவுணர்த்திய தோழி சொல்லியதூஉ மாம்.]

ஆரவாரமுடைய விடியற்காலத்து ஆட்களை அழைத்து ஆர வாரஞ் செய்யும் உழவரது தூற்றுத பொலியினின்று எழுந்த நொய்த கூளங்கள் வானத்தை இருண்ட மேகம்

போல் மறைக்க, இருள்புலர்கின்ற விடியற்காலத்து வைக் கோலைப்பெயர்த்து அலைத்துக் கடாவிட்டுத் தொழிற்செருக் கால் சேர்ந்த சோர்வு நீங்கும்படி, காற்றடிக்கப் பூத்த வள வியதளிருடைய மாவின், கிளி போன்ற காய்க் கொத்து களைப் பிழிந்து, மாதுளங்காய் முதலியன சேர்த்துப் புளிக் கும் செவ்வி உண்டாகச் செய்து புதுக்குடங்களில் நிறைத் துவைத்த சாரத்தை வெயிலிலே வாடப் போட்ட பனை ஓலையாற் கோலியதட்டுப்பிழாவில் வார்த்து மடுவில் மாடு நீர்குடிப்பதுபோல் களமர்குடிப்பர்; குடித்துக் கொள்ளும் பயறும் பால் விட்டுச் சமைத்து வெள்ளிக் கோல் வரைந்ததுபோல் தோன்றும் வெள்ளிய கூழை வேண்டியமட்டும் உண்டபின் நெற் குவியலைச் சூடாகச் சுற்றிப் பொழுதுசரிய மருத நிழலில் எருதோடு தங்குவர். இது, துணைவரோடு மாட்சிமைப்பட்ட இன்பத்தை அனுப விப்போர்க்கு விரும்பத்தக்க இளவேனிற் காலமாகும். அது தான் நமக்கு என்னை. அதனை அறிந்து நங்காதலர் தங்கப் பெறார்.

—விற்றூற்று மூதெயினனார்.

## 38. குறிஞ்சி

[இது, 1. தோழி தலைமகன் குறைகூறியது. 2. பகலே சிறப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லிய தூஉமாம். 3. தோழி குறி பெயர்த்திட்டுச் சொல்லிய தூஉமாம்.]

வேங்கையின் விரிந்த பூங்கொத்தாற் கட்டிய வண்டு படும் கண்ணியனும், தெரிந்த இதழ் உடைய குவளை மலரி னற் றொடுத்ததேன் பாய்கின்ற தாரனும், அழகிய சிலையை இடப்புறத்தே தாங்கி, கொடிய செலவையுடைய கணையை

வலக்கையில் ஆராய்ந்து எடுத்துக்கொண்டு காதலியை நினைந்துவருதல் மெய்யாகும்; வான்தோயும் மலைநாடன் வந்தானாயின், அழகிய தளிருடைய அசோகின் உயர்ந்த கொம்பிடத்தே தொடுத்த தாழ்ந்த கயிற்று ஊசல் ஆடிய பக்கங்கள், பாய்ந்து ஆடாமையின் சிதையாது தழைத்து நீண்ட இதழ் நீட்டிய அழகிய குவளை கண்போல் மலர்ந்த சுனையையும், அழகிய இறக்கையுடைய மிருதுவாகிய கிளி எடுக்கமாட்டாத பெரிய கதிர்கொய்து கோற்தலையுடையவாகிய தினைத்தாள் உடைய கொய்த புனத்தையும் நோக்கி, நீள நினைந்து வருத்தமுடையனாய்ப் பெயரமாட்டான். மிகவும் வருந்துகின்றேன். சுனையினின்றும் தாழ்ந்து வெள்ளிய அருவி சூடிய உயர்ந்தவரைக்கு மேல் எம்மூர் என்று அறிவிக்க மறந்தேன்.

—வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்.

## 39. பாலை

[இது, பொருள் முற்றிய தலைமகன் தலைமகளைக் கண்டு சொல்லியது.]

பெண்ணின் விசாரத்தைப் பழித்த நெஞ்சோடு வழிச் சென்று எம்மையும் நினைந்தீரோ என்று வருந்தாதே. நின் முள்போன்ற எயிறுடைய தூவர் வாயிடத்து முறுவல் நீங்க வருத்தத்தைத் தோற்றுவித்து வெறுத்து மொழியாதே. தொலைவிடத்தே சென்று ஆயத் தாராற் புனையப்பட்ட நின் அழகை மறப்பேனோ! தழைத்த மூங்கில் தீக் கடைவது போல் ஒன்றோடு ஒன்று உரோஞ்சுதலால் சொரித்த ஒள்ளிய பொறி, உதிர்ந்த சருகை மூடி உயர்ந்த ஊகம் புல்லின்மீது பற்றிக் காற்றுச் சுழற்றுதலால் காட்டை அழிக்கும் பெருந் தீ, காற்றோடின இடங்கள்தோறும்

4380
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL

ஓடலின் வழிகெட்ட சாத்தர் அலறுவர் ; சாத்தரோடு மதர்த்த புலிக்கு அஞ்சிய மயக்கமுடைய வேழக்கூட்டம் வழி அறியாது மயங்கிய பெரிய காட்டின் நடுவே தாழ்ந்து தோன்றும் விளங்குகின்ற ஞாயிறு மயங்கிப் படுதலும், வண்டு மொய்க்கும் கூந்தலுடைய நின்னை நினைந்து செல்ல அரிய வழியிடத்தே விரைந்து படுத்த தூக்கத்தில், மான் (வலையிற்) பட்டாலென்ன மெலிவாற் கழன்று விழுகின்ற வளையை ஏறத் தடுக்கிக் கவிழ்ந்த பார்வையோடு நிலத்தைக் காலாற் கீறி வருத்த முடையையாய் நிற்க நின்னைக் கண்டேன். கண்டு இன்நகாய்! நான் இவ்வாறு போய்த் தனித்து வருந்தவும், என்னிடத்து ஊடல் யாது காரணத்தால் வந்ததெனை வருந்தி உனது பக்க முயர்ந்த புருவமோடு திரண்டு ஒடுங்கிய நுதலை நீவி, நறிய கூந்தலை (புலவிதீர்தற்குக்) கோதிய அமையத்து ஒன்றையுங் காணப்பெறாத மெய்யல்லாத கனவில் யானடைந்த தாழ்ந்த வருத்தம் அறியாய், ஆதலின் என்னைப் புலக்கின்றாய்.

—மதுரைச் செங்கண்ணனார்.

## 40. நெய்தல்

[இது, தலைமகன் பொருள் வயிற் பிரிந்தவழி கிழத்தி தோழிக்குச் சொல்லியது.]

கடற்கரைச் சோலையிடத்து மாலைக் காலத்து கழியிடத்தே பூக்கூம்பவும், நீல நிறப்பெருங்கடல் ஒலிமிக்கு ஒலிக்கவும், மீன் கவரும் கொக்கின் கூட்டம் புன்னைப் பொதும்பரிற்றங்கவும், பறக்கின்ற வண்டுகள் நீர்ப்பூவை விட்டுக் கோட்டுப் பூவைச்சேர்வேமோ என்று தடுமாறி ஒலிக்கவும், விலங்குகளும் புட்களும் தத்தம் பதிகளிற் சென்று தங்கும் மாலைக் காலத்து, தாழை ஒடுங்கி அசையப், பிரிந்தாரை

வருத்த வீசும் வாடைக் காற்றால் மிகுந்த துயர் கொண்ட அழகிய நெஞ்சம் செயலற்று வருந்துவதாயிற்று. இவ்வாறு துயரஞ் செய்து நமக்கு அருளாராயினும் நீங்காத அவரது கேண்மை அன்பின்மையின் அவ்விடத்தே தங்கி என்னிடத்து வாரா தொழிக. தோழீ! வயலிடத்தே வெண்ணெல் அரிவோருக்குப் பின்னே ததும்பும் தண்ணுமைக்கு வெருண்ட விசாலித்ததாளுடைய நாரை தலையிலே பூண் இறுக்கிய கொம்பு போல் ஒலித்துப் பனை மடலிற் றங்குந் துறைவனின் துயில்கின்ற மார்பிடத்தே எனது நெஞ்சம் சென்றது.

வெண்ணெல் அரிந்தார் தங்காரியஞ் செய்தற்குப் பறை கொட்டுவிக்க நாரை வேற்று நிலத்ததாகிய பனையிலே சென்று தங்கித் தான் வாழுமிடமாகிய மருத நிலத்தை மறந்தாற் போலத் தங்காரியஞ் செய்ய நம்மைப் பிரிவர். மனையைப் பிரிந்தவழி நம்முடைய நெஞ்சு நம்மை விட்டுத் தனக்கு அந்நியமாகிய அவர் மார்பிலே சென்றது என்றவாறு. கொம்பு=கொம்பாற் செய்த குழல்.

—குன்றியனார்.

## 41. பாலை

[இது, தலைமகன் பொருள் வயிற் பிரிந்த விடத்துக் கிழத்தியை நினைந்து சொல்லியது.]

பொழுது புலர்கின்ற காலையில் எருமைகள் வயல்களிற் பரந்து செல்லவும், கரிய மொட்டுகள் மலர்ந்த எரி போன்ற பூங்கொம்பர்களில் வண்டினங்கள் ஆர்ப்பவும், நீண்ட நெல் நெருங்கிய கழனி, கூட்டிக் குடுமியாகக் கட்டிய பக்கத்தோடு விளங்கவும், பிளவுபட்ட காலுடைய எருந்த உழவர் உரப்பி உழும் ஓசை வயல்தோறும் ஒலிப்

பவும், விளங்கி மரம் காட்டிடத்தே அழகுபெற்று விளங்குகின்ற காட்சிக்கினிய காலத்து நாம் பிரிந்தேம்; அதனால் வருந்தி அழகுபோகச் சோர்ந்து, நமது பிரிவை அறியாத அழகிய நல்ல தோள்கள் நெகிழ, மெல்லிய சிறகுடைய வண்டுகளிருக்கும் தண்ணிய கமழ்கின்ற பூங்கொத்தின் தாதிலுண்டான மதுத்துவலை தளிரிலொழுகினலொத்த *மாமை நிறம்தோற்றின நுண்ணிய பல சுணங்கு பொறித்த மாயோள் வருந்தினள். —குன்றியனார்.

## 42. குறிஞ்சி

[இது தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

மிகுந்த மாரிமழைக்குச் செருக்கி வளர்ந்த செண்பகத்தின் கொய்தற்கரிய குளிர்ந்த அழகிய மணமுடைய முகைபோன்ற செவ்வரி பரந்த கொழுவிய கடையுடைய குளிர்ந்த கண்ணும் தளிர் போன்ற மேனியுமுடைய மாயோளே! தூரத்தே உயர்ந்துதோன்றும் வானளாவும் வெற்பன் வந்தான். அவன் வருகை, நாடு வறங்கூரக் கலப்பை உழாது கிடக்கக் கோடை நீண்ட வறண்டகாலத்துக், குன்றுகண்டாற்போன்ற கொம்புடைய யானையும் பிறவிலங்குகளும் செல்லாத, புட்கள் தங்குகின்ற, நீரற்ற குளம நிறையும்படி பெரிய மழைபெய்த மகிழ்ச்சிக் குரிய வைகறைக் காலத்துப் பலரும் உவக்கின்ற மகிழ்ச்சி எல்லாம் என்னிடத்தே நிரம்பினது போலாகும்.

மழைக் கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு, நீ வருந்தாமல் காதலர் வரைவோடு வந்தார். அவ்வருகை

---

*தோலுரித்த ஆம்பலின் தண்டுபோன்ற நிறம்.

எனக்கிவ்வாறு இருந்ததெனத் தோழி கூறினாள் என்ற வாறு.

—கபிலர்.

## 43. பாலை

[இது, பொருள் தொகுத்து மீண்டதலைவன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

கடல் நீரைப் பருகிய சூல் நிறைந்த பெரிய தண்ணிய சூலுடைய முகில், ஒளிவிடும் மின்னலோடு வலமாகி எழுந்து பொழிந்த மழைக்கு வருந்திய புல்லிய தலையுடைய மடப்பிடிக்குக் கையைத் தூக்கி மறைத்த களிறு, நீத்தத்தில் அப்பிடியோடு படியும்படி நிலனும் விசும்பும் நீரோடு ஒன்றுபடுதலால், நாழிகை வட்டிலில் அளவு பட்ட நீரால் நாழிகை எண்ணுதலல்லது, ஆதித்தனைப் பார்த்து நாழிகை எண்ண முடியாமல் அச்சந்தரும்படி பரந்து மழை பொழிந்த காலத்து, கொய்த செறிந்த முல்லை காற் றோடு பொருது கரிய இருண்ட காட்டை நாற்றஞ் செய் தது போன்ற, நறியநுதலும், செறிந்த இருண்ட கூந்தலும், மெல்லிய, சாயலுமுடைய மடந்தையின் அழகிய உயர்ந்த ஆகத்தை நாம் சேர்ந்தேம். குற்றமில்லாதபொருள் தொகுக் கும் வினையிற் போய் இக் காலத்தைக் கண்டு திரும்பிவர நினையாது பிரிந்தோர் அறிவில்லா தோராவர்.

—மதுரை ஆசிரியர் நல்லத்துவனார்.

## 44. முல்லை

[இது வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல் லியது.]

அரசனும் வந்து போர் முடித்தான்; பகைவரும் திறை அளந்தனர்; மாறுபட்ட இருதிறப் படைகளும் சந்துபட்டு

ஒரு திறப்படை போலாயின. பாக! படையின் முன் இயங்குகின்ற நின் தேராகிய ஊர்தி இனிப் பின் நிற்றல் கூடாது. நன்னனது படைத்தலைவனாகிய ஏற்றை, நல்ல பூணணிந்த அத்தி, சொல்லுதற் கரிய மிகுந்த திறமையுடைய கங்கன், கட்டி, பொன்னாபரணமணிந்த வலியவில் வீரனாகிய புன்றுறை என்று சொல்லப் பட்டோர் கூடி யிருந்த பெரிய பாசறையை பருந்துசூழும்படி செய்து*பழையன் பட்டது கண்டு பொறாளாகித், திண்ணிய தேருடைய† கணையன் அகப்படக் கழுமலம் என்னும் ஊரை வென்ற, மாலையும் கண்ணியும் சூடிய பெரும் பூட் சென்னியின் அழும் பிலைப் போன்ற நீங்காத புது வருவாயுடையதும், மிகுந்த பழம் நெல்லுடைய பாந்த குடிகளும், யானைபடியும் மடுக்களும், செறிந்த காவற்காடு முடைய குடவாயிலை ஒத்த வளாகிய அவளது ஆகத்தின் இனிய துயிலைப் பெறுதற்கு இச்சுரத்தை நாம்தாண்டும்படி தேரை விரைந்து செலுத்து வாயாக.

—குடவாயிற் கீரத்தனார்

## 45. பாலை

[இது வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

காய்ந்து விளைந்த நெற்கதிர் ஆடுகளத்தில் ஒலிக்கும் பறைபோல விட்டுவிட்டு ஒலிக்க, கோடை நீடிய அகன்ற பெரிய குன்றிடத்து நீரில்லாத போதற்கரிய வழியில் உயர்ந்த களிற்றைக் கொன்ற புலி, ஆளில்லாத வழியிற் திரிகின்ற காட்டைக் கடந்து நங்காதலர் சென்றார். மாமை நிறமுடைய ஐதாகிய நுண்ணிய பசலை, பாந்து பீர்க்கின் அழகிய மலரின் தன்மையை எய்திற்று. எழு

---

* சோழனது சேனாபதி † சேரன் படை முதலிய.

கின்ற அலரோ, அன்னி, குறுக்கைப் பறந்தலை உடைய திதியனாகிய பழைய வேந்தன் இறக்கப் புன்னையை வெட்டியபோது எழுந்த கூத்தரது இனிய வாத்தியங்களின் ஓசையினும் பெரிதாகின்றது. காதலரைக் காணாத சிறுமையோடு நோய் மிகுந்த ஆதி மந்திபோல யான் வருத்தமுறத்தேடித்திரிவேனோ? பொன்மாலையுடையவனும், வேலாற் கடல் பிறங்கோட்டியவனுமாகிய வான வரம்பனது போர் முனையாற் கலங்கிய (பகைவர்) மதில் அரண்போலு அஞ்சத் தக்கநோயோடு துஞ்சி உழலேன். (இறந்து படுவல் என்றவாறு) பறந்தலை = போர்க்களம்.

—வெள்ளி வீதியார்

## 46. மருதம்

[இது, வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயின் மறுத்தது.]

சேறாடிய (கொட்டிலில்) நிற்கும் சிவந்த கண்ணுடைய கரிய பசு, ஊர் துயில்கின்ற இராக்காலத்து வலிய தளையை அறுத்துக் கொண்டு நீர் மிகுந்த பழனத்துக்குக் காப்பாகியகூரிய முள்வேலியைக் கொம்பால் நீக்கி, மீன்கள் பயந்தோட அழகிய தாமரையைச் சூழ்ந்த வள்ளையை நெகிழ்த்து தாமரையின் வண்டூதும் குவிந்த மலரை அருந்தும் ஊர! யாம் பிணங்குவேம்; அதைக் கேட்க நீ என்ன உறவுடையை. மழை நீரின் வீழ்ச்சியைக்கடந்து நீண்டுவிளங்கும் தாழ்ந்த கரிய கூந்தலுடைய பிறபெண்கள் சிலர், நீ பரத்தை ஒருத்தியை வதுவை அயர்த்தாயென்று நம் மனையிடத்தே வந்து கூறினர். நீ வதுவை அயர்த்தனை என்று யாங்கள் சொல்லேம். எந் தாய் வாழ்க. பகைவரது களிற்றுடைய போர் சிதைய வெட்டும் ஒள்ளிய வாட்டானை

யுடைய அள்ளூர் போன்ற, ஒள்ளிய வளை அணிந்த என் தோழி மெலியினும் மெலிக. பெரும! நீ செல்வதைத் தடுப்பவர் யார்.

காரா, தனக்கு நிலை என்று புகுத்தப்பட்ட கொட்டிலை நீராலும் சாணகத்தாலும் தானே சேறுக்கிக்கொண்டு பழனத்துக்குக் காவலாகிய வேலியையுங் கோட்டால் எடுத்து, மீன்கள் ஓடத் தாமரையைச் சூழ்ந்த வள்ளையை நீக்கி, மலர்ச்சியின்றி வண்டோடு குவிந்த தாமரையை ஆர்ந்தாற்போல, நீயே ஆதரித்துக்கொள்ளப்பட்ட இவளை நீதானே வேறுபடுத்தி நாணமாகிய தளையையுமறுத்துக் கொண்டு, பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனுமிய கோட்டாலே நீக்கி, அப்பரத்தையருடனுறை யும் தோழிமார் நீங்க அப்பரத்தையருடைய தாய்மாரை யும் மயக்கி, அகமலர்ந்துன்னை எதிர் ஏற்றுக்கொள்ளாத மகளிரை நுகர்வான் ஒருத்தன் அல்லையோ என்றவாறு.

—அள்ளூர் நன்முல்லையார்.

## 47. பாலை

[இது, தலைமகன் கடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.]

கலங்காத நெஞ்சம் மென்மேலும் சிறக்க நாம் கருதி வந்த வினையை இவ்வளவில் முடித்தோமாயின், பக்கத்தே எழுந்த சூறுவளி தழைத்து அசைகின்ற மூங்கில் ஒலிக் கும்படி தாக்கி, வெப்பமுறப்பண்ணிய கொடிவிட்டு எரியும் மிகுந்த நெருப்பு மலைவெடிப்புள்ள பாறையிற் பரத்தலின் மூங்கில் வெடிக்கின்ற ஓசையைக் கேட்டு மான் ஓடும், வெவ்விய போர் செய்யும் இடம்போன்ற அரிய சுரவழி யைக் கடந்து நமது மனைக்குச் செல்வேம்.

சூரியன் அத்தகிரியில் மறைய, மனையிடத்தே ஒள்ளிய வளையணிந்தமகளிர் வெள்ளியதிரிகளைக்கொளுத்த, உயர்ந்த பெரிய மாளிகையிடத்துக் குறுந்தாளுடைய செங்காற் புறவின் சேவல் பெடையை அழைக்க, காதலரைப் பிரிந்து தனித்து இருந்தாரை வருத்தஞ் செய்யும் புல்லிய மாலைக் காலத்து, நம் காதலர் யாண்டுள்ளார் எனக்கூறிக் கலங்கு வாளை எய்தி, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட நெடிய தேரும் கொடுக்குந்தன்மையுமுடைய பாண்டியனது மழை தவழும் வளம் பொருந்திய பக்கத்தில் கூதளம் கமழ் கின்ற மலையிடத்துள்ள மூங்கில்போன்ற பணைத்த தோளிடத்துப் பரந்த நோயான் வரும் வருத்தம் விடப் பல படியாக முயங்குவேம் எழுவாயாக. நெஞ்சே ! வாழ்க.

—ஆலம்பேரிச்சாத்தனார்.

## 48 குறிஞ்சி

[இது, செவிலித்தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்றல்.]

அன்னாய் ! வாழ்வாயாக. யான் கூறுவதை விரும்பும் அன்னையே! நின்மகள் பாலும் உண்ணாளாய் வருத்த முற்று மிகவும் பசந்தாள் என்று வினவா நின்றாய். அதன் தன் மையையானும் தெளிவாய் அறியேன். முன் ஒரு நாள் பூக்கள் மலிந்த சாரலிடத்தே என் தோழிமாரோடு தழைத்த கொம்புடைய வேங்கையின் பூக்கொய்யச் சென்றேம்; சென்று புலி புலி எனச்சத்தமிட்டேமாக ஒள் ளிய செங்கழு நீரின், மகளிர் கண்போன்ற, ஆராய்ந் தெடுத்த நல்ல இதழை ஊசியாற் கோத்துச் சுற்றின மாலை யும், பக்கத்தே சேர்த்திய வெட்சிக் கண்ணியும் உடையோனா கிய ஒரு தோன்றல், நெஞ்சிடத்தே பூசிய சிவந்தசாந்தைக் கையாற்றடவி உதிர்த்து, வரிந்து கட்டிய அழகிய வில்லு டையனாய், ஒரு கணையைத் தெரிந்து கையிடத்தே

கொண்டு இவ்வழியில் நேர்ந்த துன்பம் யாது எனவினவி நின்றான். அவனைக்கண்டு எம்முள் ஒருவர் முதுகோடு ஒருவர் மறைந்து நாணிநின்றேமாக, எம்மை விரும்பி, ஐவகையாகக் கோதி முடிந்த கூந்தலும் அழகிய நுதலும் உடைய மையீரோதி மடவீர்! நும்வாயிடத்துப் பொய்யும் உண்டோ என்றான்; என்று பையெனக் குதிரையை முடுக்கு தல் தவிர்ந்த தேரன், எதிர்த்துப் பார்த்து விட்டபின் நின் மகளை உண்ட கண்ணால் பலமுறை மாட்சிமைப்பட நோக்கிச் சென்றான். அவன் அக்குன்றுக் குரியோனவன். பகற் பொழுது மாய்கின்ற அந்திப்பொழுது நேரத்து அவன் மறைந்த திசையை நோக்கி, தோழீ! அவன் புருஷருட்சிற ந்தவனே என்று வியந்து கூறினள். விசாரிப்பார்க்கு அத னளவுண்டோர் கோட்பாடு.

புலியென்பது, வேங்கை மலர்கொய்யத் தாழ்ந்து கொடுக்குமென்றோர் பேதைத் தன்மை. அதுவும் மலை யில் வாழ்வோர்க்கு உள்ள தோர்பண்பு.

—தங்கால் முடக்கோவனார்.

## 49. பாலை

[இது, உடன்போய தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனை யின்கண் மயங்கியது.]

கிளியும் பந்தும் கழங்கும் விளையாடும்* வெய்யோள், இரக்கமும் அன்பும், சாயலும் செய்தியும் முன் நாட் போலாள்.

அதனைக் கண்டு உயிரற்றவள் போலானேன்; ஆகி, வளைந்த காலுடைய கன்றோடு மாத்திற்கட்டிய, கன்றை

* விரும்பப்படுபவள்.

விரைந்து பார்க்கின்ற பாற் பசுவைப்போல், அவள் முதுகை நோக்கிக் கிட்டவந்து அகன்று ஒடுங்கிய நுதலைத் தடவி மெல்லெனத் தழுவினளாக, என்மகள் நல்ல ஆகத்து முலைஇடை வியர்ப்பவும் (போக்கை நினைந்து) பலமுறை என்னை முயங்கினாள். ஐயோ! வெற்றிமிகுந்த பெருந்தகை தன்னைப் பலபடி பாராட்ட, வற்கடமாயுலறின நிழலிலே தங்கி, வானை வெறுத்து வருந்திய மடமான் கூட்டம் வற்றிய மரலை நுகரும் காட்டிடத்தே (இருவரும்) ஒருமித்து செல்வதை அறியேன்; அறிந்தேனாயின், தந்தையின் மிகுந்த சோறும் காவலுமுடைய பெரிய மனையிடத்தே செல்லுந் தோறும் மெய்யின் நிழல்போலத் திரண்ட ஆயத்தோடு விளையாடி உள்மணியிட்ட சிலம்பொலிக்க நடப்பவள் செல்லும் வழிகள் தோறும் அகலேன்.

—வண்ணப்புறக் கந்தரத்தனார்

## 50. நெய்தல்

[இது, தோழி பாணனுக்குச் சொல்லியது]

கடல் ஒலி அடங்கித்தோணி கடலுட் செல்ல, ஆழ்ந்த நீருடைய கரிய கழியிடத்துச் சுறுமீன் செருக்கித் திரியும் போதும் கொடிய வாயை உடையபெண்டிர் கௌவை தூற்றினும், மாட்சிமைப்பட்ட அணிகளாலலங்கரிக்கப்பட்ட நெடிய தேர்தாமதித்து நிற்பப் பகலும் நம்மை விட்டு நீங்கானாகிக் குளிர்ந்த கடலையுடைய சேர்ப்பன் அடுத்தடுத்து வருவான். களவுக் காலத்துக் கூடுதற்கரிய வேட்கை நீங்க இப்போது வாராதார் நமக்கு என்ன உறவினர் என்றது, பாண! வளம் பொருந்திய மூதூரிடத்தில் மறைவாகச்

* *விரும்பப் படுபவள்

சென்று, "இராக்காலத்து மனைக்கு அண்மையிலுள்ள பனையில் இருக்கும் மடிந்த வாயுடைய அன்றிற் சோடி, ஒன்றை விட்டு ஒன்று பிரியின் உறங்காத தன்மையைக் கண்டு கண்ணிறையக் கண்ணீர் மறைக்கும் ஒள்ளிய நெற்றியுடைய அரிவை என் செய்வாள்' என்று சொல்லின் என்னோ?

கூடி நீங்கிப் போகும் வழியிலே, தான் வருங்காலத்தும் அவர் தூற்றினாராயினும் முன் அடுத்தடுத்து வருவார். இப்பொழுது வேட்கை நீங்குதலான் வருகின்றிலர்; அங்ஙனம் வாராதோர் நமக்கு என்ன உறவினர் என்றனது, அன்றில் துஞ்சா காண் என்று சொல்லி, கண் இறை நீர் கொண்டு கரக்கும் யான் இதற்கு என் செய்வேனென்று நீ இதனைச் சொல்லின் என்னும்? பாணனே, எனப்பாணனுக்குத் தோழி கூற்றுக்குக.

—கருவூர்ப் பூதஞ்சாத்தனார்

## 51. பாலை

[இது, பொருள் வயிற்பிரிவு கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது]

ஆள் வழங்குதல் அற்றசுரத்திடத்தே வெயில் தெறுதலின் மிக வெப்பமுள்ள நெடியதாளுடைய யா மரத்துக் காற்று அடித்து முழங்கும் புல்லென்ற உயர்ந்த கொம்பில், ஊனை விரும்பி இருக்கும் பேடையின் முகத்தை நோக்கி இருக்கும், ஊன்பதித்தாற்போன்ற அச்சந்தரும் சிவந்த செவியுடைய எருவைச் சேவலின் கரிந்த சிறகு தீய வேனில் நீடிய மூங்கில் உயர்ந்த நடுக்காட்டில் நீ வருந்திப் பிரிந்து பொருள் தொகுக்கும் வினையின் பொருட்டு, மலரின் இதழை ஒத்த மழைக்கண்ணுடைய மாயோளைப் பிரிய நினையாயாயின், தம்மிற் பிரியாது ஏந்தின முலைப்பரப்பு

வீங்கப் பலமுறை அழகிய ஆபரணங்கள் ஒலிப்பத் தழுவி நாளும் இல்வாழ்க்கையோடு மகிழ, பிரிதலை மறந்து நினை வாய், நெஞ்சே! மாயோள் = கரியவள். கடை கூட்டிய — முடித்த.

## 52. குறிஞ்சி

இது, தலைமகள் வேறுபட்டமை யறிந்த செவிலித் தாய்க்குத் தோழி அறத்தோடு நிற்குமெனத் தலைமகள் சொல்லியது.]

மரங்கள் உயர்ந்த மலைச்சாரலிடத்து வள்ளிக் கொடி படர்ந்த தழைத்த வேங்கையின் உயர்ந்த கொம்பரிடத் துள்ள பொன்னொத்த புதுமலர் பறிக்கும் குறமகளிர் "புலி, புலி" என்று இன்னாத ஓசை செய்தாராக, பெருத்தகற் பாறையிடத்து இருண்ட குகையுடைய பக்கமலையிலே பசுக் களைக் கவரும் புலி வந்ததென்று, மலையிடத்துள்ள சீறூர் வருந்தக் கல்லென்னும் ஓசையுடன், இடப்புறத்தே வில் லுடை யோர் விரைந்துசெல்லும் நாடனாகிய எனது நெஞ்சு விரும்பியவனுடைய பெரிய மார்பைக் காரணமாக உடை யது, நின்மகளின் ஆராய்ந்த மலரை உண்ட கண்களிடத் துள்ள பசலைநோய், என விளக்குவதும் விளக்காததுமாகிய ஒரு சூட்சியால் (கூட்டமில் நாட்டத்தால்) கூறுவாயாக. உடலிடத்திருந்து இனிய உயிர் பிரிய வருவதாயினும் நின்மகள் கொண்ட வருத்தம் காமநோயெனச் செப்பாதே. தோழீ! வாழ்க.

—நொச்சி நியமங்கிழார்

## 53. பாலை

[இது, வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

இருள் நீங்க விசும்போடு விளங்கும் விரைவாகச் செல் கின்ற சூரியனின் வெவ்விய கதிர் பிளந்த பிளவுநிறைய நீண்

டகாலுடைய முருங்கையின் வெள்ளிய பூப் பரந்து நீர் அறும்படி வறண்ட, தொலையாத நீண்ட வழியிடத்து, கூரிய எயிறுடைய செந்நாய், பசியால் வருந்துகின்ற பிணவோடு, கள்ளி பரந்த காட்டிடை வாகையின் உள் ஊன் வாடிய மடிந்த மூக்குடைய பொருக்கு அரையை மறைத்துக் கிடக்கும் தனிமையுடைய வழியிடத்தே குறிதப்பாத அம்புடைய மறவரின் விற்போரிடத்து வீழ்ந்தோரின் புகழை எழுதி நாட்டிய கல்லின் நிழலில் தங்கும் அருஞ்சுரத்துள்ள, கவர் வழியைக் கடந்து என்றும் வறியோர்க்கு இல்லையென்று கூறிக் கரத்தல் மாட்டாத நெஞ்சம் வலிப்பச் சென்றார். ஆதலின் காதலருக்கு நம்மினும் பொருளே காதல். காதலர் நம்மேல் அருளுடையார் என்றாய் அறியாய், தோழி! வற்புறுத்தல் = காதலர் நம்மீது அருளுடையராதலின், தாமதியாது வருவாரென வலியுறுத்திக் கூறல். நாய் பிணவோடு தங்குமென முடிக்க.

— சீத்தலைச் சாத்தனார்

## 54. முல்லை

[இது, வினைமுடித்து மீளூர் தலைமகன் தேர்ப்பாகற்குச்சொல்லியது]

புதிய அரசர் அரிய ஆபரணங்களைத் திறையாகக் குவிக்க வேந்தனும் கொடிய பகைதணிந்தான். இனிய மழையைப்பெய்யும் முகிலும் ஆரவாரத்தோடு பொழிந்தது; வலிய நடையுடைய தாம்பு கட்டின கன்றிடத்தே தனது வீங்கின முலைமடிய வேண்டி, கனைக்கின்ற குரலோடு ஓடி, கழுத்திலே மணி கட்டிய பாற்பசுக்கூட்டம், இலை உருவிப் போடுதற்குக் கோலின வளைந்த மடியுடைய, கோலைக்கையிலுடைய கோவலர் கொன்றைப் பழக்குழலை ஊதுகின்ற வாய்ப் பின்னே செல்ல, வீடுகள் தோறும் செல்லும்,

மொட்டுகள் அலர்கின்ற மாலைக்காலத்து, தனக்கெனவாழாப்பிறர்க்குரியாளனாகிய பண்ணனது* சிறுகுடிச் சோலையிடத்துள்ள நுண்ணிய இலையுடைய நெல்லியின் புல்லிய கொட்டையுடைய பசிய காயைத் தின்றவர் நீர் குடித்த சுவையைப் போல இனியவற்றைக் கூறி, விரிந்த நிலாவைத் தருகின்ற இளந்திங்களே!* பொன்னுடைய புலிப்பற்றாலியுடைய என் மகனை நினைந்து வருகுவையாயின் பால் தருவேன் என ஒருக்கடித்த கண்ணளாய் விரலால் அழைத்துத் திதலை அல்குலுடைய எம் காதலி புதல்வனைப்பாராக் காட்டும் பூங்கொடி போன்ற நிலையைக் காண்பதற்குப், பாகனே! சித்திரம் போன்று சிவந்த நிலத்தே கூரிய வாயுடைய சில்லு நனைந்து உருளும்படி தேரைக் செலுத்துக. [* கோவலர் பின்னே குழலூதிச் செல்லப் பசுக்கள் மாலைக்காலத்தே வீடுகள் தோறும் செல்லும் என்றவாறு.]

—மாற்றூர் கிழார்மகனார் கொற்றங் கொற்றனார்

## 55. பாலை

[இது, புணர்ந்துடன்போன தலைமகட் கிரங்கிய தாய் தெருட்டும் அயற் பெண்களுக்கு உரைத்தது.]

காய்ந்து செல்கின்ற சூரியன் மலை வெடிக்கும்படி தெறுதலின், நைந்து உருகிய கொல்லன் உலை மூக்குப் போன்ற நீண்ட வழியிடத்தே உளியின் மூக்குப் போன்ற கொடிய பரற்கல் அடியை வருத்துதலின் இன்ன இடத்தில் இன்ன கேடு வரு மென்று அறிய முடியாத மூங்கில் கரிந்து போகின்ற கானத்தே, வெற்றியுடைய, யானை போன்ற காளையோடு என் மகள் சென்றதற்கு வருந்தியிருத்தலை ஒழியேன்; விட்டிருந்து, கொல்லன் ஊதுலை மூக்குப் போல் நெட்டுயிர்த்துக், கலங்கி வேவது போலும்

வெய்ய நெஞ்சமோடு நித்திரை பெறேன்; ஒள்ளிய ஆயுதங்களுடைய கரிகால் வளவனோடு வெண்ணிப் பறந்தலையில் பொருது முதுகிற்பட்ட புண்ணுக்கு நாணிய சேரலாதன் வாளோடு வடக்கிருந்தா னென்னும், இன்னாமையும், இனிமையுமாகிய உரையைக் கேட்டு அவனோடு வீர சுவர்க்கம் சென்ற சான்றோரைப் போல, காதலனை வேண்டி என்னைத் துறந்த அவள் பொருட்டு என்னுயிர் போகா திருக்கின்றது.

தங்களுக்கு அன்னியனாகிய அரசன் வடக்கிருந்துழி அச்சான்றோர் உயிர்துறந்த மாத்திரம் நான் என் மகளுக்கு மாட்டிற்றிலேன் என்றவாறு.

—மாமூலனார்

## 56. மருதம்

[இது பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

பளிங்குமணிபோன்ற தெளிந்த நீர் கலங்க, இரும்பாற் செய்ததுபோன்ற கரிய கொம்புடைய எருமை ஆம்பலின் மெல்லிய இலை கிழியும்படி குவளையின் விரிந்த மலரை மாந்திக் கரையிலே நின்ற காஞ்சி மரத்தின் நுண்ணிய பூந்தாது, மெல்லுகின்ற புறத்தே உறைப்ப அசை இடுகின்ற கன்னமுடைய வாய் தாம் தங்குமிடத்தே செல்லும் தண்ணிய துறையுடைய ஊரனது தாருடைய திண்ணிய மார்பு, வதுவை ஒப்பனையுடைய பரத்தையரைப் புணரும்படி வேண்டி ஆதரவோடு நேற்றுவந்த பாணன், தெருவிடத்தே ஈன்றணிமையுடைய பசுப் பாய்ந்தாற்போலக் கலங்கி யாழை ஒலித்து என் மனையிடத்தே புகுந்தான். அதனைக் கண்டு மெய் பூரிக்கும்படி எழுந்த உவகையை

மறைத்தேனாய் எதிர்சென்று, 'இம்மனை அன்று அஃது உன்மனை' எனக் கூறிய எனது இகழ்ச்சியும் தனது இளி வரவும் நோக்கி வருந்தி தொழுது நின்றான். தோழீ! அது நகையாயிருந்தது.

இரும்பியன்றன்ன கருங்கோட்டெருமை கயங் கலங்க ஆம்பல் மெல்லடை கிழியக் குவளை மாந்தி........ தங்குமிடத்தே செல்லுமென்றது, இரும்புபோன்ற நெஞ் சினையுடையராகிய பரத்தையர் ஊர்முழுதும் கலங்கத், தான் முன்பு கூடின பரத்தையர் தாய்மார் கலங்க, அப் பரத்தையர் அவ்வாம்பற் பூப்போலக் குவியக், குவி தல் விட்ட குவளைமலர் போலும் பூப்பெய்து கொள் ளப்பட்ட பரத்தையரை நுகர்ந்துவருகின்ற காலத்து, வழியிலகப்பட்ட சேடியர் முதலாயி னாரை நுகர்ந்து, பின்னும் சிலரைக் கூடக்கொடுநாக் கெறிந்துகொண்டு, நம்மனையிலே தங்குதற் பொருட்டு வருகின்றான் என்று தோழிக்கு வாயின் மறுத்தது. பாணன் ஊரனைப் பரத்தையர் மனைக்கு அழைத்துப் போக வந்தானாக அதனை அறிந்த தலைவி இவ்வாறு கூறினாள் என்றவாறு.

விரிகின்ற பன்மலர் என்றதனால் ஆம்பற் பூ என்ப தைக் குறிப்பாற் கொள்க.

—மதுரை அறுவை வாணிகனிளவேட்டனார்

## 57. பாலை

[இது பொருள் வயிற் பிரிந்த தலைமகன் கிழத்தியை நினைந்து சொல்லியது.]

சிறிய பசிய தூவியும் சிவந்த காலுமுடைய குருவி யின் பேடு நீண்ட வானைப் பறந்து கடந்து வெயிலின்

வெப்பத்தோடு வந்து களி பெறாது, தான் முன்பு களி பெற நாளின் வளனை நினைந்து வருந்திப் பயனில் லாமையில் மரங்களிற் புகாதிருந்த புல்லென்ற கொம் புடைய குறுகிய காலுடைய இத்தி, புல்லிய தலையி னின்றும் வீழ்த்திய விழுது கரிய முரடான திண்ணிய பாறையைத் தீண்டி காற்றடிக்கப் பெரிய கையுடைய யானை போல் அசையும் குன்றிடத்துள்ள நீண்ட வழியிடத்தே நாம் தமியமானேம். கொய்த பிடரி மயிருடைய புரவி பூண்ட கொடித்தேருடைய பாண்டியன் முசிறி முன்றுறை யிடத்துச் சென்று, களிறு மடியும்படி கொன்ற கல்லென் னும் ஓசையுடைய களத்துத் தீர்த்தற் கரிய புண்ணுற்றோ ரைப் போல், பெரிதும் அழிந்து வருந்தி, யாமமும் பகலும் அமையாது அழுவோளின் சிறிய நுதல், பசிய நிலா விரிந்த பல கதிருடைய மதியின் நல்ல அழகு நீங்கி சிறு பீர்க்கம் பூவின் அழகிய நிறத்தை எய்தியது.

—நக்கீரர்

## 58. குறிஞ்சி

[இது, நேரம்போக்கி வந்த தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.]

இனிய ஓசையுடைய முழக்கத்தோடு மழை பெய்து எல்லா உயிர்களும் உறங்குகின்ற நடு இரவில் காட்டிற் திரிந்து வேட்டையாடுமிடத்து, உறங்க இடம் பெறாது புலித்தோற் படுக்கையிற் படுத்த, தேனுறுகின்ற கூந்த லுடைய கொடிச்சியின் தந்தை கூதிர் காலத்து இல்லில் வந்து தங்கும் குன்றநாட! பண்ணினாற் போன்று வருதலை யுடைய இளமுலை பரக்க, விளங்குகின்ற வளை யுடைய முன்கை வளைந்து புறத்தே சுற்ற, நின் மார்பை

பலமுறை அடைதலினும், நும்மை இல்லாத தனிமையால் உள்ளுந்தோறும் வருத்தும் குளிர்ந்து வீசுகின்ற குணமில்லாத வாடைக்காலத்து நேரம் பார்த்து நீடி மனைமரம் முறிய வலித்து பலரும் உறங்கிய இராக்காலத்து நின்ற புற நிலை இனிதாயிற்று. உம்மைச் சேர்தலினும் வீட்டின் இறப்பைப் பிடித்துப் புறத்தே நெடுநேரம் காத்து நிற்றல் இனிதாயிற்று என்றவாறு.

—மதுரை பண்டவாணிகனிளந்தேவனார்

## 59. பாலை

[இது, தலைமகன் பிரிவின் கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியது.

தண்ணிய மடுவில் நெருங்கி வளர்ந்த இரண்டு மலரின் பெருந்தன்மையை இழந்த கண்ணினையாய்ப்* பெரிதும் வருந்தினை, தோழீ! நீ வாழ் வாயாக. நின் வீங்கிறைப் பணைத்தோள் நெகிழத் தொலைவிடத்தே அரிது தொகுத்தற்குரிய பொருளை முன்னி நம்மைப் பிரிந்து உறைவார் சென்ற வழியில், வடக்கேயுள்ள வளவிய புனலுடைய தொழுனை ஆற்றின் வாரடித்தமணல் உடைய அகன்றதுறையிடத்தே இடையர் மகளிர் தண்ணிய தழையை உடுக்கும் படிகுருந்து தாழமிதித்தமால் போலப், புல்லிய தலையுடைய மடப்பிடி உண்ணுதற்கு அழகிய குழையை உயர்ந்தயாமரத்தினின்றும் வளைத்து முறித்து, மதம் நனைத்த கன்னத்திற் படியும் வண்டை ஓட்டும் களிறுடைய, சூரபன்மாவின் கிளையை அழித்த முருகனது தண்ணிய பரங்குன்றத்து அந்துவன் என்னும் புலவன் பாடிய சந்தனமரம் வளரும் உயர்ந்த

* கலங்கிய கண்ணுடையையாய்

வரையின் இனிய பசிய சுனையின் மலர்ந்த தண்ணிய செங்கழுநீரை வைத்துக் கையால் பெரிய ஒப்பனை செய்த முதுகைத் தடவி அவர் பாராட்டிய காலமும் உண்டு யானை உடைய பரங்குன்று எனச் சேர்த்துப் பொருள் கொள்க.

குருந்தை மால் மிதித்ததென்றது :—ஆயர் பெண்கள் குளியா நின்றார்களாக, அவர் இட்டுவைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக் கொண்டு மால் குருந்த மரத்தேறினாராக, அவ்வளவில் நம்பி மூத்த பிரான் வந்தாராக, அவர்க்கு ஒரு காலத்தே கூடமறைதற்கு மற்றொரு வழி இன்மையின் ஏறி நின்ற குருந்த மரத்துக் கொம்பைத் தாழ்த்துக் கொடுத்தார், அதற்குள்ளே பெண்கள் அடங்கி மறைதற்கு. "நீனிற வண்ணனன்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன் பானிற வண்ணனேக்கிற் பழியுடைத் தென்று கண்டாய் வேனிறத்தானைவேந்தன் விரிபுனற் றொழுனை யாற்று கோனிற வளையினார்க்குக் குருந்தவனொசித்ததென்றான்" (சீவகசிந் 209.)

—மதுரை மருதனிளநாகன்.

## 60. நெய்தல்

[இது, தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.]

பெரிய கடலிடத்தே சிவந்த இறால் நடுங்க, நீண்ட படகிற் சென்று சிவந்த கோல் கட்டிய வலையால் முகந்து மீன் பிடிக்கும் தொழிலிற் தங்கிய தந்தைக்கு, உப்பின் விலைக்குப் பெற்ற நெல்லின் வெண்சோற்றோடு புளிவிட்டாக்கிய அயிலைமீன் கறியோடு, கொழுத்த மீன் கருவாட்டைக் குறுமகள் கொடுக்கும், திண்ணிய தேருடைய பொறை

யனது மேதாணடியன்ன எம் ஒண்டொடியை வருத்தாதே. காற்றுக் கொணர்ந்து குவித்த உயர்ந்த மணலுடைய கடற் கரையில் ஆயவெள்ளத்தோடு வண்டோச்சிப் பஞ்சாங் கோரையால் பாவை செய்து விளையாடினும் உன் ஒளி வாடு மென வறிதே கோபிக்கும் ஆய் காணின், வெற்றிவேலுடைய கொற்றச் சோழர் குடந்தையிற் குவித்த நாடு தருகின்ற திர வியத்தைக் காக்கும் காவலினும் செறிந்த காவலைச் செய் வாள்.

திமிற்றொழிலோடு வைகிய தந்தைக்கு அவன் மீன் கொண்டு வருதற்கு முன்னே இளமகளானவள் தான் உப்புக்கு விலையாகப் பெற்ற நெல்லாலே ஆக்கிய மூரல் வெண்சோற்றையும் புளிங் கறியையும் சொரிந்து கொழு மீன் கருவாட்டோடு கொடுத்தாற்போல வரைதற்குத் தாமும் புறம்பே முயல, நாங்களும் அறத் தொடுநிலை வகையால் ஈங்கு முயல்வேம் எனச் சொல்லிய வாறுக்குக.

—மாமூலனார்.

## 61. பாலை

[இது, தலைமகன் பொருள் வயிற் பிரிய வேறுபட்ட தலை மகட்குத் தோழி சொல்லியது.]

தவஞ் செய்வார் பிறர்க்கு உபகாரமின்றி வறிதே மரி யார். (இறந்தபின்) பிறர் தம் கைப் பொருள் கொள்ள உப காரிகளாய் பிணியாலும் மூப்பாலும் இறவாது அமர்க் களத்து வீழ்ந்தோரே துறக்கம் புகுவர் எனக்கூறிச் சேட் புலம் சென்ற நாட்களைக் கீறிக் கணக்கிட்ட உயர்ந்த சுவரை நோக்கி வருந்தேல். தோழீ! வாழ்க. இடிபோல ஒலிக்கும் ஊக்கத்தோடு வரியுடைய மாலின் தும்பால் திரித்த ஒள்ளிய நாணுடைய வலிய சிலையிடத்து வைத்துத்

தலைமை மிக்க யானையின் மார்பில் அழுத்தி அதன் வெள்ளிய கோட்டைக் கள்ளுக்கு விலையாகக் கொடுத்துப் பலரோடு புதிய கள்ளைப் பருகும் கழல் புனைந்த திருந்திய அடியுடைய கள்ளர் தலைவனது மழவர் தேயத்தை வணங்கச் செய்த பெரிய கொடையுடைய புல்லியின் விழாவுடைய பெரிய சிறப்பு வாய்ந்த வேங்கடத்தைப் பெறினும், முழவை ஒத்த திண்ணிய தோளுடைய நெடுவேளாவியின் செல்வமுடைய பெரிய நகரிடத்துள்ள பழைய போதினி போன்ற மின்ஒளி பொருந்திய அழகிய முலையிடத்தே பொலிந்த நுண்ணிட பூணுடைய ஆகத்தைப் பொருந்துதல் மறந்து தாமதித்து உறைதல் அரிது.

—மாமூலனார்

## 62. குறிஞ்சி

[இது, அல்லகுறிப் பட்டுழித் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது]

தண்ணீருள் வளரும் பஞ்சாங் கோரை வேரின் மேற்றண்டு போன்று ஒளி பொலிந்து விளங்கும் எயிறு பொருந்திய துவர் வாயும் ஆகத்துத் தோன்றிய முலையும், பணைத்த தோளும் கரியதாள் உடைய குவளைமலரின் பிணையல் போன்ற அழகிய மழைக்கண்ணுமுடைய கரியாளொடு பேயுமியங்காத காலத்துக் களவுப் புணர்ச்சி, துடியைப் போல அயலார் தங்களிற் கூடியும் தனித்தும் பேச, மறைந்த மறைப்போடு நாம் செல்லற் கருமையா யிற்று. வேகமாய் ஓடும் நீர் நிறைந்த பெரிய காவிரியாற்றின் நெடிய சுழியுடைய நீரிற் குளிக்கு மிடத்துக் குளிருவது போலக் குளிர முயங்கி நேற்று ஆகத்தை அடைந்தவள், வெல்லும் வேலும் களிறு பொருந்திய தானையுமுடைய பொறைய

னது கொல்லிமலையின் விளங்குகின்ற சுனையுடைமீ பாறையிடத்துப் பெரிய இடம் அழகு பெற கடவுளெழுதிய பாவையின் அழகு மாட்சிமைப் பட்ட மாயோளாவள்.

கொல்லிப் பாவை:—இது கொல்லி எனும் மலையிலுள்ள ஒரு பெண் படிமை. கண்டார் உள்ளமும் விழியும் கவர்ந்து பெருங் காம வேட்கை உறுவித்து இறுதியிற் கொல்லத் தக்கதாகத் தெய்வத்தானே அமைக்கப் பெற்ற மோகினிப் படிமை.

—பரணர்

## 63. பாலை

[இது தலைமகள் புணர்ந்துடன் செல்லச் செவிலிதன் மகளுக்குச் சொல்லியது.]

மகளே! வாழ்வாயாக. கேளாய் நின் தோழி அழகிய மனை வருந்த அவனோடு பெரியமலையைக் கடந்து சென்றதற்கு நோவேனல்லேன். கடிய கண்ணுடைய யானை நீண்ட கையை வளைத்து வளைந்த காலால் உதைத்த அழகிய நிலத்தே பெரிய புலரிக் காலையில் வெயில் பரந்து எறிக்கக், கழுத்தில் கரிய ஆரமுடைய சிவந்த காடைச் சேவல் சிறிய புல்லிய பெடையொடு நின்று காலாற் கிளறும் இடத்தையுடைய அஞ்சத்தக்க காட்டை நீந்திக் கன்றைக் காணாது புல்லிய கண்ணவாய்ச் செவி சாய்த்து மன்றிடத்தே நிறைந்து வருந்த மிக, பல கறவைப் பசுக்களை அடித்துக் கொண்டுவந்த வலிய காலுடைய மறவரது கல்லென்னு மோசையுடைய சீறூரிடத்து இராக் காலத்தே தங்கி, அறிவுடைய பெண்ணின் வளைந்த காலுடைய குரம்பையிடத்தே இருக்கும் மடமயில் போன்ற நடையால் மெலிந்த, எனது தோள் அணையாகத் துயிற்றத் துயிலாத பேதை வேடுவராகிய கள்ளரது வார் இழுத்துக்

கட்டிய கடிய கண்ணுடைய, ஆக்கொள்ளும்போது கொட்டும் தண்ணுமை கேட்டு அஞ்சுவாளென்று என் நெஞ்சு வருந்துகின்றது.

—கருவூர்க் கண்ணம் புல்லனார்

## 64. முல்லை

[இது, வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது]

பாக, தலையாட்டமணிந்த, உலகத்தைப் பறந்து கடப்பது போன்ற புள்ளின் தன்மையையுடைய மனஞ் செருக்கிய குதிரையின் செலுத்துங் கூறுபாடமைந்த வனப்பினையுடையவாரை நீ தெரிந்து இட, முல்லை மலர் விரிந்த தண்ணிய நல்ல பெருவழியிடத்து, ஐதாக இலங்குகின்ற அகன்ற இலைபோன்ற நெய் பூசியதும் வலிய பிடியுடையதுமாகிய வெற்றி வேலுடைய வீரர் விசையுடைய குதிரையைத் தூண்ட நாம சென்றனமாயிற், மழை பெய்து வாரடித்த செம்பாட்டு நிலத்தில் செல்லும் வழிமருங்கில் ஈரமணலில் தங்கும் கானங்கோழி வெருண்டோட, பாம்புடைய புற்றின் ஈரமாகிய புறத்தைக் குத்தி, மண்ணுடைய கொம்பினதாய் நிற்கும் தலைமையுடைய இடபம் தன்னோடு உடன் நிற்கும் விருப்பினையுடைய மடநாகைத் தழுவி ஊரிடத்தே செல்லும் நேரத்து மேயச் சென்ற பசுக்கள் திரண்டு கன்றை அழைக்கின்ற குரலோடு மன்று நிறையும்படி புகும். அவை நடக்குந்தோறும் விட்டிசைக்கு மோசை வருத்தஞ் செய்யும் மாலைக் காலத்தே கேட்டோறும் கலங்கி உறைவோளின் செயலற்ற நிலையைக் களையும் நேரமிதுவாகும்.

—ஆர்க்காடு கிழார்மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்.

## 65. பாலை

[இது, வேறு பட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்கொண்டு செல்ல விரும்பினதைத் தோழி சொல்லியது]

இக்கூட்டங்காரணமாக, தானறிந்தவற்றைநினைந்து அது தோன்றுமற் சிலசொல்லுகின்ற அன்னையின்சொல்லையுந்தப் புவேம், சிறிதும்ஈரமில்லாத இயல்புடைய பொய்கூறும் சேரி யிடத்துள்ள பெண்கள் அலர் தூற்றுதலும் இனி ஒழிக. பிறர்நாட்டைக்கொண்டுதனது நாட்டை அகட்டிய உதியஞ் சேரலைப் பாடிச் சென்ற பரிசிலர் போல தோழீ! இனிமகிழ்வாயாக. மலைதோறும் பெரிய மூங்கில் உரோஞ்சி உண்டான காற்றுக்கு மூண்டெரிகின்ற நெருப்பு, மீன் பிடிக் கும் பரதவரின் வளைந்ததோணியிலுள்ள வெளிச்சம், வரிளை முட்டும் கடலிடத்தே தோன்றினாற் போல உயரத்தே தோன்றும். யாமரம் உயர்ந்த நடுக்காட்டிடத்து வாடிய யானையின் முதுகிற் சென்றாற் போன்ற பாறையிடத்தே செல்லும் புல்சாய்ந்த ஒடுங்கிய வழியும், காட்டை விசேட மாகக் கூறுதற்குக் காரணமாகிய உயர்ந்த கொம்புடைய யானை வழியைக் காவல்கொள்ளும் அரிய சுரமும், பணைத்த தோளும் நாறுகின்ற ஐந்து வகையாகக் கோதிமுடிந்த கூந்தலும், திரண்ட சுணங்கணிந்த முலையும் நிரைத்த பூ விதழை உண்ட கண்ணுமுடைய மகளிர்க்கு அரியவெனச் சொல்லி அழுங்கிய செலவை, பொலிந்த கூந்தலுடைய நம்முடன் செல்ல இன்று விரும்பினார்.

—மாமூலனார்

## 66. மருதம்

[இது, பரத்தையிற் பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புகுந்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

இவ்வுலகத்தில் புகழோடு விளங்கி மறுமை உலகத்தில் மறுவின்றி வாழ்வர், செறுநரும் விரும்பும் குற்றந்தீர்ந்த அழகிய சிறுவரைப் பெற்ற பெருமையோர், எனப் பலர் கூறிய பழமொழி எல்லாம் உண்மையாதல் பெற்றேம், தோழீ! நிரையாகத் தார் அணிந்த மார்பன், நேற்று பரத்தை ஒருத்தியொடு வதுவை அயர்தல் வேண்டி புதிதாக அலங்காரஞ் செய்தவனாய் இத்தெருவைக் கடந்தான். அது காலை தொழில் மாட்சிமைப்பட்ட மணி கறங்குதலால் அவ்வோசையைக் கேட்டு வாயிலைக்கடந்து பார்த்தல் விருப்போடு தள்ளாடித் தள்ளாடி ஓடும் மலர்போன்ற கண்ணுடைய புதல்வனைக் கண்டு 'நெடிய தேரைப்பிடித்து நில், பாக!' என்று இறங்கினவன் தாமதியாது பவளமணிபோன்ற செவ்வாய் மார்பகம் பொருந்தப் புல்லிப் பெரும! உள்ளே செல் எனக்கூறி விடுத்தான். அதற்கு உடன்படாது அவன் அழுதலின் தடையுண்டவன், அளகேசுரன் என்று கூறத் தகுந்த மகனோடு மனைவாயிலிற் புகுந்தான்! யான் அப்படிச் செய்வித்தேனதற்கு நாணி, இக்கொடியோன் தடுத்துக் கலக்கினான்போலுமென்று அடிக்கும் தடியோடு சென்று குழந்தையைத் தூக்கிப் பரத்தையர் மனையில் ஒலிக்கின்ற கண்ணுடைய முழவுபோல் இனிய வாத்தியங்களை ஒலித்து ஆற்றவும் அவன் (குழந்தை) அழுகை தவிரானாக. இயற்கைப் புணர்ச்சிக் காலத்து ஒரு நாள் கழங்காடும் ஆயத்தோடு இருந்த காலத்து நாம் அருளிய பார்வை வருத்த தான் விரும்பிய மணத்தைத் தவிர்த்தான்.

—செல்லூர்க் கோசிகன் கண்ணனார்.

## 67. பாலை

[இது பொருள் வயிற் பிரிந்த வழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எமது நலத்தைத் துறந்து சென்றவரது வழியில், பொறியும் வரியும் உடைய வானம்பாடி பாடவும், இரங்காது மழை நீங்கலின் இலைகள் சொரிந்து மரம் புல்லென்றிருக்கும் நடுக் காட்டிடத்துள்ள வன்னிலத்தில் அரத்தினால் அராவிய கூருடைய மிருகக் கொம்பாகிய அம்புடையோரும், ஆட்களின் வருகையை இடுக்கிப் பார்க்கும் கண்ணுடையோருமாகிய நாகம்புகுவோர் (கொடியோராகிய ஆறலை கள்வர்) நெல்லிமரத்தின்கீழ் சூழ்ந்து தங்கியிருக்க, நல்லபோரை வென்று (நிரைமீட்டு) வீழ்ந்த வீரரின் பெயரும் பீடுமெழுதி வழிகள் தோறும் நிறுத்திய மயிலிறகு சூட்டிய உயர்ந்த நடுகல்லின்முன் வேலை ஊன்றிச் சார்த்திய பலகை, பகைவர் போர்க்களம் போன்று தோன்றும்; தமிழல்லாத பிறமொழி பேசும் தேசத்து, மன்னர் இடுகுப் படையை அழைத்துப் படைகண்டது போன்ற, பட்டோரைக் கல்லிட்டு மூடிய இடங்களும், ஆட்களை அகப்படுத்தும் பொறிக் கிடங்குகள் உள்ள இடங்களும், நிலத்திலே கிடக்கும் மின் மினி போல், பரலோடு கூடி விளங்குமென்ப; யானென் செய்வேன்; தோழீ!

—நோய் பாடியார்

## 68. குறிஞ்சி

[இது, தலைமகன் இரவுக்குறி வந்ததை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

அன்னையே! வாழ்க. அன்னையே! யான் சொல்வதை விரும்பிக் கேட்பாயாக. தண்ணிய சுனையிடத்தே

மலர்ந்த கூதளம் குழைய அருவிபாடும் இனிய ஓசை எதுவுங் கேட்டாயோ? அன்னையே வாழ்க இன்னு மொன்று கேட்பாயாக. நமது சோலையிடத்தே அரக்கு ஊட்டினாற் போன்ற ஒள்ளிய தளிருடைய அசோகின் உயர்ந்த கொம்பரில் தொடுத்த ஊசலைப் பாம்பென நினைந்த உருமு அசோகு முறியும்படி இடித்தது; பின்னுங் கேட்டியோ, எனக் கூறவும் அன்னை செறிந்த நித்திரை யாளுள். தன்னிடத்தே உயிர்களெல்லாம் மடிந்தாற் போன்று துயிலுறும் காலத்துக் காதலர் வருவாராயின் இது சமயமாகுமென்று நினைத்தலும், சுடர்விடும் விளங்கு கின்ற வளை நெகிழ்ந்த நம்மிடத்தே படர்ந்த உள்ளம் பழு தின்றாக நின் காதலர் வந்தனர். தோழி! வாழ்க. பல முகிற் கூட்டங்கள் ஒலியோடு கூடிய மழையைப் பெய்யும் தடைப டாத வெள்ளம் மென்மேலும் பெருக யானைக் கன்றின் காலைச் சுழியுடைய வெள்ளம் பறிக்க, புல்லிய தலையுடைய மடப்பிடி நீரைத் துழாவி வெள்ளிய கோடுடைய யானைகளை அழைத்து ஆரவாரஞ் செய்யும், அகன்ற இலைகளுடைய பாம்புச் செடியுடைய வழி இரவும் பகலும் அஞ் சத்தக்கது.

யானைகளும் கன்று காரணமாகப்பிடி வருந்திய பின் எடுக்க முயன்றாற் போல அவரும் அலரானும் வழியத ருமையானும் நாம் நலன் அழிந்த பின்பு வரைய முயல்வ தல்லது முன்பு முயலார் என்றவாறு.

உருமு—இடி.

—ஊட்டியார்

## 69. பாலை

[இது, பொருள் வயிற் பிரிந்து நீடித்தான் தலைமகனைக் கவன்ற தலை மகட்கு வருவர் என்பது படச் சொல்லித் தோழி ஆற்றுவித்தது.]

ஆயத்தார் அலங்கரித்த அழகு தொலைந்தமேனியும் மலரின் வனப்பை இழந்தகண்ணும், அழகிய நிறம் வாடிய திதலையும் நோக்கி வருந்தினாய். முறைமையாக ஈதலாகிய இன்பத்தை விரும்பிப் பொருள் செய்யும் திறத்தாராகி புல்லிய இலையும் பரிய அரையுமுடைய நெல்லியின் அழகிய புள்ளியுடைய திரண்டகாயைக் காட்டு மரைக் கூட்டம் கவரும் வேனிலுடைய அரியவழியே சென்று மயக்கமுற்று, விண்ணைத்தீண்டும் நெடியவரைபோன்ற அழகிய தேருடைய மோரியர், பொன்னாலலங்கரித்த உருளைகள் செல்லும் பொருட்டுக் குறைத்த வரையைக் கடந்து சென்றனராயினும், ஆடும் அழகிய மயில் உதிர்த்த இறகை வார்ந்து, தொனியால் மாட்சிமைப் பட்ட வில்லிற் சுற்றிப்பல வலிய அம்புடைய கையராய் அரண்பலவற்றை அழித்து நல்ல ஆபரணங்களைப்பெறும் வீரர் வீரனாகிய சுடர்விடுகின்ற மணிகளழுத்தின ஆபரணங்களுடைய ஆயின் கானத்துக் காலையில் அலர்ந்த மலர் நாறுகின்ற ஆகத்து அலர்ந்தமுலையின் இனியதுயிலை மறந்து சிறிதும் தங்கமாட்டார். தோழீ! வாழ்க. திதலை—தேமல்.

—மேட்டூர் கிழார்மகனார் பரங்கோற்றனார்

## 70. நெய்தல்

[இது, தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

வளைந்தமீன்பிடிக்கும் படகுடைய பரதவர், வலையிடத்தே மீன் பட்டதாக பெரிய புலால் வீசும் சிறிய வீடுகளுடைய பாக்கத்துக் குறுகிய கண்ணுடைய வலையைப் பாராட்டி கொழுவிய கண்ணுடைய அயிரை மீனைப்பலருக்கும் பகுந்தளிக்குந் துறைவன் நம்மொடு சேர்ந்த உறவை அலர் தூற்றும் பெண்டிர் அலர் தூற்ற அவ்விடத்

துப் பலரும் முன்னமே அறிந்தார்கள். இனி வதுவை கைகூடிய பின், ஞாழலின் பொன்னிறப் பூவொடு புன்னையின் பூ உதிர்ந்து வரியாகக் கிடக்கும் கரையுடைய பெரிய துறையிடத்தவாகிய வயல்களிடத்துள்ள நீரிற் செருக்கி வளர்ந்த பசிய இலையும் திரண்ட காம்புமுடைய நெய்தலை விழாக்காணச்செல்லும் மகளிர் அல்குலுக்குத் தழை அணியாகக்கொள்ளும் வெற்றி வேலுடைய பாண்டியரின் பழமைமிக்க திருவணிக் கரையிடத்து முழங்குகின்ற கடல் ஒலிக்கும் முன்துறையில், தான் வெல்லும் போருடைய இராமன் மறைசொல்லுதல் காரணமாகக் கவிந்த, பல விழுதுடைய ஆலவிருட்சத்தில் பட்சிகள் ஆரவார மொழிந்தது போல ஊரிடத்து அலர் அடங்கிற்று.

பரதவர் தம்முயற்சியானே வேட்டை வாய்த்ததாகிலும் குறுங்கண் வலையைப் பாராட்டி அம்முயற்சியானுண்டான அயிலையைக் கடலினின்றும் நீக்கி, எல்லார்க்கும் பகுத்துக் கொடுத்து மகிழ்வித்தாற்போல, அவரும் தம்முடைய முயற்சியானே வதுவை கூடிற்றாயினும் அதற்குத் துணையாக நின்ற என்னைக் கொண்டாடி, நின்னைப் பெரிய இச் சுற்றத்தினின்றுங் கொண்டுபோய்த் தம்மூரின் கண்ணே நின்னைக் கொண்டு விருந்து புறந்தந்து தம்மூரை எல்லாம் மகிழ்விப்பர் என்றவாறு.

நெய்தற் பூவானது, ஞாழலும் புன்னையும் கரையிலே நின்று தாதையுதிர்த்துப் புறஞ்சூழ, நீரிடத்துத் தன்னை விடாதே அலைகள் சூழ நடுவே நின்று செருக்கி வளர்ந்து பின்னை விழவணி மகளிர் அல்குலுக்குத் தழையாய்ப் பயன் பட்டாற்போல, இருமுதுகுரவர் புறங்காப்ப ஆயவெள்ளத்தார் மெய்யை விடாதே சூழ்ந்து புறங்காப்ப, இப்படிச் செல்வத்தில் வளர்ந்த நீயும் நம் பெருமானுடைய இல்லற

மாகிய பிரிவிற்குத் துணையாகப் போகா நின்றாயன்றோ வென்று வியந்து கூறியவாறு கண்டு கொள்க.

—மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்

## 71 பாலை

[இது, பொருள் வயிற்பிரிந்த விடத்து ஆற்றாளாய தலைமகட்குத் தோழி சொல்லியது.]

செல்வங் குறைந்து பயனற்ற நட்டாரை நீங்கிச் செல்வரை நாடும் நன்றியில்லாத கீழ் மக்களைப் போல வண்டின் கூட்டம் நீர்ப்பூவை விட்டுக் கோட்டுப்பூ விடத்தே செல்லவும், குற்றமில்லாத மான் கூட்டம் மருளவும் மெல்லெனஉருகி ஆறுகின்ற பொன்னைப் போன்று செக்கர் தோன்ற, கூரிய அறிவையும் மழுக்கும் செயலற்ற துயரோடு பிரிந்திருப்பார்க்கு, வானம், பல நிறமுடைய மேகங்களையும் வருத்தத்தையுந்தர, காதலர்ப் பிரிந்து வருத்தத்தால் நோகச் செய்த மாலை, மிகுந்த துன்பமுறுவோர் நெஞ்சைச் சுட்டிக் கூரிய வேலை எறிந்து வருந்துவதை ஒப்ப மிக வருத்தஞ் செய்து, தெளிந்த கண்ணாடி மண்டிலத்தில் ஊதிய ஆவி பரந்து பின்பு சுருங்கினாற் போல எமது வலி மாயவேண்டியிரா நின்றது. சூறாவளி எழுப்ப அசைகின்ற மரத்திலுள்ள புட்போல உயிர்போம் பொழுது இதுவோ ? தோழீ !

—அந்தியிளங்கீரனார்

## 72. குறிஞ்சி

[இது, தலைமகன் இரவுக்குறிக் கண் சிறைப்புறனாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது சிறைப்புறம்-வேலிப்புறம்.]

இருளைக் கிழிப்பதுபோல மின்னி வானம் மழையைப் பொழியும் குளிர்ந்த மழைக் காலத்தின் நடுயாமத்து மின்மினி மொய்த்த பிளந்த வாயுடைய புற்று (கொல்லன்

உலையிற் காய்ச்சி அடிக்கும்) இரும்பிலிருந்து பறக்கும் பொறிகள்போல விளங்க, அதனை உடைத்துப் புற்றும் பழஞ்சோற்றைக் கிண்டும் பெரிய கையுடைய புலி இரும் பிலே தொழில் செய்யும் கொல்லன்போன்று தோன்றும் ஆறு, செல்லற்கருமையுடையது. நினைப்போர்க்கு அச்சந் தரும் முதலை திரியும் ஆற்றுவெள்ளம் மூங்கிலைப் பிடுங்கிக் கொண்டு கல்லோடு மோதி ஒலிக்க தனியே செல்வதற்கு அஞ்சுவம் என்றது, மேகத்தைச் சுமந்து ஆடுகின்ற மூங் கில் ஒலிக்கும் தெய்வ முறைகின்ற பக்க மலையில் சூற் கொண்ட பிணவின் வயாப் பசிதீர்த்தற்குப் பெரிய களிற் றைக் கொன்ற பெரியசினத்தையுடைய புலி அதனை உண் பதற்கு, நல்லபாம்பு மேய்தற்கு உமிழ்ந்த சுடர்விடும் மணியாகிய விளக்கின் அண்மையில் இழுத்துச் செல்லும், வாள்மேல் நடந்தாற்போன்று செல்லுதற்கரிய அருவழி களையும் நினைந்தோர் அஞ்சும் கல்லடர்ந்த சிறுவழிகளை யும் கடந்து நமக்கு அருள்புரியும் நெஞ்சோடு வேல் துணை யாக வந்தோன் கொடியனுமல்லன். கூட்டின நீ கொடியளு மல்லை, நினக்கு அமையாத அரிய துன்பத்தைச் செய்த யானே தவறுடையேன். தோழீ!

பிறவற்றைத் தீங்குசெய்யும் பாம்பும் புலிக்குத் துணை யாயினாற் போல, நீயும் குடியோம்பற் செய்தி காரணமாக வரைவோடு வரிற் கடுஞ்சொற் சொல்லுகிறபேரும் இன் சொற் சொல்லி வரைவுடம்படுவர் என்றவாறு. வயா— கருக்கொண்ட பெண்களுக்குப் பொருள்கள் மேற்செல்லும் விருப்பம்.

[" பொன்பிதிர்ந் தாலன்ன மின்மினி சூழ்புற்றின் முற்றிய சோற்—றின்பிதிர்வாங்கியெண்கேறு திளைத்துண்ணுமீண்டிருளே"] (இ- அ. உரைமேற்கோள்.)

—எருமை வெளியனார் மகனார் கடலனார்.

## 73. பாலை

[இது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்தபோது குறித்த பருவ வரவு கண்டு அழிந்த தலை மகட்குத் தோழி சொல்லியது.]

பின்னிப் பூ முதலியன வைத்து அழகுசெய்யாது வாசநெய் பூசிய தாழ்ந்த கூந்தலை முடிந்து, இருட்காலத்தே தோன்றும் வெருகின் கண்போன்று முலையிடத்து விளங்கும் முத்துவடமும் பொருந்தி, அருந்ததி அன்னகற்பினால் அழகு பெறச் சோர்ந்து நின்நோயிடத்தையுமல்லை. எனது அன்புடைய தோழி என்ன ஆகுவள் என்று எனது வருத்தத்துக்கு இரங்குகின்றாய். கொடிகள் பின்னிய தூறுபோல் இருண்ட யானையின் வருகையைப் பார்த்திருக்கும், வலிய சிங்கத்தின் வலியுடைய, தினைப்புனத்தே பறனிடத்திருப் போன்கையிடத்தே பிடித்திருக்கும் நெருப்புக் கொள்ளி சிதறும் பொறிச்சுடர்போல் மின்னி நின்காதலர் தேயத்து மழை நின்றது. விருப்ப மிகுந்த தோழி! நின்னோடு மாறுபடாது நீ நினைந்ததையே நினைக்கும் யானும் நீயுமாகிய இருவேமும் நம் துன்பந்தீர அதனைக் காண்பேம்; வருவாயாக. வெருகு—ஆண் பூனை.

—எருமை வெளியனார்.

## 74. முல்லை

[இது, தலைமகன் பிரிவின்கண் அழிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குக் கூறியது.]

போரிடத்தே வெற்றி எய்தினமையின் மகிழ்ந்த வீரர் தம் வெற்றியைப் புகழ்ந்து வாழ்த்துவர். தண்ணிய மழை பொழிந்து பசுமை உற்றகாலத்து இரத்தம்போன்று நிறமுடைய விளங்குகின்ற சிவந்த தம்பலப்பூச்சிகள் பெரிய

வழியின் மருங்கே சிறியவும் பெரியவுமாய் வரிவரியாகக் கிடக்கும். பசிய முல்லைக்கொடியின் மெத்தென்ற செவ்விய புதிய பூ அறலுடைய வெள்ளிய நுண்மணலிடத்துப் பரந்து கிடக்கும்; வண்டுகள் மொட்டுகளின் முறுக்கை அவிழ்க்கும். இவ்வாறான தண்ணிய கமழ்கின்ற முல்லை நிலத்து, கரிய கொம்புடைய மானின் அழகிய பிணையின் மருண்ட நோக்கைக் காண்டோறும், நின்னை நினைந்து, திண்ணிய தேர்ப்பாகனே! செலுத்துக, எனக் கூறித் தேரை விரைந்து செலுத்தி இன்றே வருகுவர்; மகிழ்ச்சியால் நடுக்கம் அடைவேம், என இவ்வாறெல்லாம் வற்புறுத்திக் கூறும் இன் சொற்களை நிச்சயமென நம்பி ஆற்றியிருப்பேன், வருத்தம்தரும் இருள் செய்கின்ற மாலைக் காலத்தோடு, வளைந்த கோலுடைய கல்லாத கோவலரூதும் வலிய வாயுடைய குழல் ஓசை சேர்ந்து என்னை வருத்தாதெனில். வருத்தாதெனில் ஆற்றியிருப்பேன் என்றவாறு.

—மதுரைக் கவுணியன் பூதத்தனார்

## 75. பாலை

[இது, பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது.]

" இரக்கமில்லாது, பொருளல்லாதவற்றைப் பொருளென மதித்துப் பொருள் வயிற்பிரியும் வலிய விருப்போடு உறங்காது; நெருப்பு எரிந்து பரந்த பெரிய பாலை வழியிடத்தே கரிந்த குதிர்மரம் கரிய குதிர்கள்போற் தோன்றும் காட்டில்வாழும் கொல்லும் புலிபோல் வலிய, செருப்புத் தொட்டமறவாது பழைதாய் வருகின்ற சிறு குடி

யிடத்துள்ள மன்றத்தை நிழற் செய்யும் உயர்ந்த மலையி லுள்ள யாவும் காய்ந்து பொரிந்த பாறைவழியே செல்வா ராயின், அழகிய நுதலும், குற்றந்தீர்ந்த கொள்கையுடைய சில வார்த்தைகளைக் கூறும் துவர்வாயும், விட்டு விளங்கும் வளையுடைய முன்கையும், ஆராய்ந்தெடுத்த ஆபரணமு முடைய பெண்ணாகிய யான், நீங்காத காதலோடு எனது ஆரந்தாங்கிய பரந்த முலை தலைவரது ஆகத்தே தாரோடு குழைய முயங்காது மெல்லிய இடை அழகு அழிந்ததை நினைந்து வருந்துவேன்; போன அழகைத் திரும்பக் கொணர்ந்து கொடுப்பார் இவ்வுலகில் உண்டோ?" எனப் புலந்து கூறி அமையாத நோயுடையை ஆயினை. மாரிபோற் குளிர்ந்தகையும், மாந்தளிர்போன்று அழகிய மாமை நிற முடைய மேனியும், மெல்லிய இடையும், பல மணி கோத்த மேகலாபரணமணிந்த அல்குலும், மெல்லிய சாயலுமுடைய குறுமகளே! அரிதிற் பெறக்கூடிய சிறப் புடைய நின்னை அவர் பிரிய, அவரை யான் விசாரிப்பது முண்டோ? (பிரியார் என்றவாறு) குறுமகள்—இளம் பெண்.

—மதுரைப் போத்தனார்

## 76. மருதம்

[இது தலைமகனை வசப்படுத்திக் கொண்டாளென்று தலை, மகள் கழறியதைக் கேட்ட பரத்தை தலைமகளின் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

கண்டார்க்கு மகிழ்ச்சியுண்டாக முழவை ஒலித்து நாம் கூத்தாடா நிற்க, தண்ணிய துறையுடைய ஊரன் எம்மது சேரிக்கு வந்தானென்று, இனிய காரமுடைய கள்

னுடைய அஃதை களிற்றோடு நல்ல ஆபரணங்களை ஈயும் ஓலக்க அவையிடத்தே புகும் பொருநாது பறை ஓசையினும் மிகுந்த ஆரவாரத்தோடு அவனது மனைவி வைதாள் என்று கூறினார்கள். கச்சினன், கழலினன் தேன் ஒழுகும் மாலை சூடிய மார்பினன் ஆகிய என் கணவனைக் கண்டீரோ என்று பலவகை அழகுபெற்ற மாலை அணிந்த பொருநனைக் கேட்டு மயங்கி ஆதிமந்தி வருந்தும்படி அவளது கணவனை அணைத்து உரையாடிய சிவந்த கிழக்குத் திசையிற்பாயும் காவிரிபோலச் சூள்கொண்டு கையாலே இழுத்தலைச் செய்தேன். ஆடற்கையானுதல் பாடற் குரலானுதல் பெற்றேனென்று சொல்லுவாளாயின் இப்படிச் செய்கின்றேனென்றாள்.

பொருநன் — கூத்தாடுவோன்.

ஆதிமந்தி—இவள் கரிகால் வளவனது மகள், இவள் கணவன் ஆட்டனத்தி. இவள் தன் கணவனோடு கழார்ப் பெருந்துறையில் நடந்த காவிரிப் புதுப்புனலுக்கு வந்திருந்தபோது அக் காவிரி அவனழகைக் கண்டு இழுத்துக் கொண்டுபோய் ஒளித்துவிட்டாள். அவனைக் காணாது வருந்திக் காவிரி சென்ற வழியே சென்று தேட மருதி என்பாள் அவனை அவளுக்குக் காட்டினாள்.

ஆட்டனத்தி, காவிரி நீரில் அகப்பட்டுக் கடலுக்குச் சமீபத்திற் கரையேறிய கதையைப் புலவர்கள் உருவகப் படுத்தி இவ்வாறு கூறியிருத்தல் கூடும்; அல்லது பரத்தையரிடம் அகப்பட்டமையிற்காணுதொழிந்த கணவனை ஆதிமந்தி தேடிப்பெற்றாளாதல் வேண்டும்.

—மருதனிளநாகனார்

## 77. பாலை

[இது, தலைமகன் பிரியக்கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கு வித்தது.]

நல்ல நெற்றி பசப்பவும், பொருள் தொகுத்தற்குச், செல்லற்கரிய காட்டிடத்தே செல்லுதல் நன்றென்று பின்னே நின்று கூறினையாயின் கொடியதைச் சூழ்ந்து கூறினை யானவ. நெஞ்சே! வாழ்வாயாக. இடியோடுகூடிய மழை நீங்கி வெப்பமிகுதலால் மக்கள்குடி எழுந்து சென்ற, யாவராலும் சுட்டிச் சொல்லப்படும் முதிய பாழிடங்களில், கயிறுபிணித்த குடத்திலிட்ட ஓலையை எடுத்து முத்திரை இட்டழித்துப் பிரமாணம் வாங்குகின்ற மாக்களைப் போன்று; * உயிர் விட்டுப்பிரிய நல்லபோரை வென்ற தறுகண்மை யுடையோரின் குடரை இழுத்து சிவந்த செவியை உடைய எருவை, அச்சந்தரும்படி இருக்கும் கற்கள் செறிந்த வழியிடத்தே செல்லின் சிறாரிடத்துப் புல்லிய அரையுடைய இத்தியின் ஐதநிழலுடைய இடத்தே மிகுந்த இருளுடைய மாலைக்காலம் வந்தெய்தும். அப்போது வானவனது படைத்தலைவனாகிய வளைந்த வில்லைப் பிடித்த விசாலித்த கையும், மிகுந்த கள்ளைக் கொடுக்கும் மகிழ்ச்சியும் உடையனாகிய பிட்டன் பகைத்த அரசரின் அரிய போரிடத்து எடுத்த இலைத் தொழிலுடைய வேல் போல, இவளது நீர் வாரும் கண்கள் துயர்தரும்.

மாலைக்காலத்து இவள்கண் துயர்தருமாதலால் பின்னின்று விசாரித்தாயாயின் கொடியவை விசாரித்தாயாவை என்றவாறு. வானவன்—சேரன். பிட்டன்—சேரன் படைத் தலைவன். இவனதுமலை, குதிரைமலை.

—மருதனிளநாகனார்

---

*ஆறலை கள்வரோடு பொருது இறந்தோர்.

## 78. குறிஞ்சி

[இது, களவுக்காலத்துப் பிரிந்து வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நடுக்காட்டில் சிங்கத்துக்கு அஞ்சி இனத்தைத் தன்னிடத்து அழைத்துக் கூட்டிக்கொண்டு நின்று நோக்கும், தண்டாயுதம் போன்ற வலியும், வாயிடத்தே புகும் தேன் வண்டு ஒலித்து மொய்க்கின்ற மதமும், புகர்நெற்றியுமுடைய வலிய தலைமையுடைய களிறு தனது கரிய பெரிய முரடான விசாலித்த கையாற்றழுவவும் சூல்முதிர்ந்த மடப்பிடி நடுங்கும் பக்கமலையிடத்து, தேனூற் சமைத்தகள்ளை உண்ணும் குறவரது முற்றத்தே வளரும் மூங்கிலின் மலர் உதிரக் காந்தளின் நீடிய இதழின் அரும்பு முறியுமாறு வாடை வீசுகின்ற பனிக்காலத்து "நாம் இல்லாத தனிமையினால் தம்மூரிடத்தே தமியளாய் நங்காதலி என்னுருவள்" என, விட்டகன்ற சிலநாட்களில் சிறிதேனும் எம்மை உள்ளியும் அறிதிரோ? உயர்ந்த மலைநாடனே! உலகிலே திரிகின்ற பலர் புகழ்கின்ற நல்ல புகழையும், மெய்மொழியையுமுடைய கபிலன் உபாயத்தால் (கிளிகளைப் பழக்கி அவை வாயிலாக) தூரத்தே உள்ள செழித்த வயல்களில் விளைந்த நெற்கதிர்களைக் கொய்வித்துக் காம்புடைய விசாலித்த ஆம்பல்மலரின் அவியலோடு உண்டு பல ஆண்டுகள் கழிய, வேண்டிய வற்றிற் பிழையாது மதிற்கதவின் வெளியே சென்று வாட்போர் செய்து ஏந்திய கொம்புடைய யானை வேந்தரை ஓட்டிய கடிய குதிரையுடைய வள்ளலாகிய பாரியின் இனிய பசிய சுனையிடத்துப் பூத்த தேன் கமழும் புதுமலர் இவள் நுதலிடத்து நாறும். பாரி—மகட்கொடாமையால் மூவேந்தரும் சினந்து இவனது பறம்பு மலையைச் சூழ்ந்தனர். அவன், கபிலரின் உபாயத்தினால் கிளிகளைப்

பழக்கி அவைகளால் நெற்கதிர் கொண்டுவரச்செய்து பல யாண்டு பொருது அம்மூவேந்தரையும் ஓட்டினான்.

—மதுரை நக்கீரனார்

## 79. பாலை

[இது, பொருள் வயிற்பிரிந்த தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

தோளிடத்தே சோற்றை முடிந்து கட்டிச் செல்லும் தொழிலாளர் ஒலியோடு பொறிபிறக்க குந்தாலியால் வெட்டிக் கல்லிடத்தே குடைந்த மிகுந்த உவருடைய கிணற்றின் பாருடைய பக்கத்தே ஊறிய நீரை உண்ணவேண்டி பார் நிலம் கெடும்படி நீருக்கு நிமிர்ந்து செல்லும் கொங்கரது ஒலிக்கின்ற மணிகட்டிய சிவந்தபசு நிரை எழுப்பிய செம்பாட்டு நிலத்துப் புழுதி அகன்ற வானத்தே செறிந்து தோன்றும் நடுக்காட்டிடத்தே நம்மோடு துணையாகச் செல்வேமென்றது, பெரிய சிறகும் வளைந்த வாயுமுடைய முகவெள்ளைப் பருந்தின்பேடை, ஆடுந்தோறும் ஒலிக்கும் கடிய துடியும் வளைந்த வில்லுமுடைய வீரர் ஆகோடற்குச் சுரத்தே செல்ல, தாமும்கூடச் செல்வதற்கு துணையை அழைக்கும் தொலையாத கல்நிறைந்த வழியிடத்தே சென்று நில்லாத பொருட்பிணிக்குப் பிரிந்த நீ இங்குத் தங்கும்படி வருந்தினை, நெஞ்சே!

—குடவாயிற் கீரத்தனார்

## 80. நெய்தல்

[இது, இரவுக் குறிவந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

வளைந்த காலுடைய முதலையோடு சுறாமீன் திரியும் கரிய இறுகிய கழியைக் கடந்து இரவின் வந்த தண்ணிய

கடற் சேர்ப்ப ! நினக்கு என்ன அரிது. எமது தந்தை திரை வீசும் கடலிற் துழாவிப் பிடித்த மீனாகிய கருவாடு களைக் கவரும் புட்களை ஓப்புவேம். தாமரை செருக்கி வளரும் முதிய நீருடைய கரை இடத்து ஒள்ளிய பல மலரும், கவர்ப்பட்ட இலையும் உடைய அடும்பின் சிவந்த விளங்குகின்ற மெல்லிய கொடியைத் தேர்ச்சில்லு அறுப்ப, பல மணி கட்டிய குதிரை இழுக்கும் நெடிய தேரைச் செலுத்தி, விளங்குகின்ற இலைகளிடையே ஒளிரும் பூங் கொத்துக்கள் விரிந்து தண்ணிய நறிய பூந்தாதுதிர்க்கும் புன்னைப் பொதும்பரிடத்தே பகற் காலத்தே வருவீராக.

பொதும்பர்—சோலை.

—மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்

## 81. பாலை

[இது, பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி தலைமகள் குறிப் பறிந்து வந்து சொல்லியது]

தினமும் உலாவிக் கொலைத் தொழில் புரிகின்ற கரடி, உயர்ந்த கிளையுடைய இருப்பையின் இனிய பழத்தின் முனைபோன்ற புல்லிய அளையுடைய புற்றில் கறையான்கூட் டம் ஒருங்கே முயன்று எடுத்த ஈரமாகியவாயிடத்து, நீண்ட வளைந்த இரும்பூதும் கொல்லன் உலைமூக்குப் போல இருந்து பெயர்த்து இரை கொள்ளுகின்ற மண்பிளக்கும் படி காய்ந்த இடத்தே, பார்க்கமுடியாதபடி வெயில் எறித் தலால், கவிழ்ந்து வாடிய தலையும் கொப்புகளுமுடைய வழி அயலிலுள்ள ஆச்சாமரத்தில் ஏறித் தனிமையா யிருக்க, பாய்ந்து இரையை யெடுக்கின்ற பருந்து வருந்தும் தொலையாத வழியிடத்துள்ள கொடிய போர்முனைபோன்ற அரிய சுரத்தைக் கடந்து, செல்ல நின் வலிய உள்ளம்துாண்

டுதலின், பகைத்தவரது வேல் பரந்த படையைக் களிறுகள் மடியும்படி வெற்றிபெறும் மிகுந்த கொடையாளியாகிய கடலனது விலங்கில் நகரம்போன்ற எமது மையின் அழகை உண்ட கண்கள் கலங்க, ஐயனே! பிரிந்து பொருள் செய்தற்குப் போகின்றீரோ.

— ஆலம்பேரி சாத்தனார்

## 82. குறிஞ்சி

[இது, தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.]

ஆடுகின்ற மூங்கிலிடத்தே தும்பி துளைத்த விளங்குகின்ற துளை மருங்கில் மேல் காற்று வீசுமிடத்துப் பிறக்கும் ஓசை குழலிசையாகவும், ஒலிக்கின்ற இனிய அருவியின் குளிர்ந்த நீரின் இசை பல முழவுகள் ஒன்று சேர்ந்தொலிக்கும் செறிந்த குரலாகவும், குரங்கின் கூட்டம் தாழ விடுகின்ற கடிய குரல் நெடு வங்கியமாகவும், மலைச்சாரலிலுள்ள பூக்களில் ஒலிக்கும் வண்டின்ஓசை யாழாகவும், இனிய பல வாத்தியங்களைக் கேட்டு, மந்திக் கூட்டம் பார்த்து மருளும்படி மூங்கில் வளரும் பாறையிடத்தே நின்று உலாவி ஆடும் மயில், விறலி மெய்யாக வந்தாற் போல் தோன்றும் நாட! அழகிய வலிய வில்லைப் பற்றி, அம்பைத்தெரிந்தெடுத்து தான் எய்த வேழம் சென்ற நெறியை வினவி, விளைந்த கதிருடைய தினைப் புனத்தின் வாயிலின் ஒரு புறத்தே, மார்பிடத்து மலர்மாலை அணிந்து நின்றாரைக் கண்டோர் பலர். அப்பலருள்யான் ஒருத்தியுமே மிக இருண்ட இராக் காலத்தே அணையோடு பொருந்தி கண்ணீர் வரும் கண்களோடு நெகிழ்ந்த தோள் உடையேனாகுதல் எதனாலோ? தோழீ! வாழ்வாயாக.

"பண்ணுற்ற தேமொழிப் பாவை நல்லீரோர் பகழி மூழ்கப்-புண்ணுற்று மாவொன்று போந்ததுண்டோ நும் புனத்தயலே" (இ. அ. உரைமேற்கோள்)

—கபிலர்.

## 83. பாலை

[இது, தலைமகன் இடைச்சுரத்தே தன் நெஞ்சிற்குச்சொல்லியது.]

சுரத்தே கமழ்கின்ற வலமாக முறுகிய ஆச்சாவின் புதிய பூவை, சுருண்ட குதிரையின் தலையாட்டம்போல் நீண்ட மயிருடைய தலை பொலியும்படி சூடிப், பிடி அலறும்படி யானைக்கன்றைக் கொன்ற மகிழ்ச்சியுடையராய் ஆரவாரித்துக் கரிய காலுடைய ஆச்சாமரத்தின் கொழுங் கொம்பைப் பிளந்து அதன் வெள்ளிய நாரை உரித்து கொடி அசையும் மூதூரின் வீதியில் கள் விற்கும் இல்லின் வாயிலிடத்தைப் பிணிக்கும் வேடரின் தலைவனாகிய புல்லியின் பெரிய நல்ல நாட்டிடத்துள்ள வேங்கடத்தைக் கடப்பினும், யான் சேய்மைக் கண் உள்ளேன் என்னாது, அன்பு மிக ஊர்ந்து, நெய்தலின் விரிந்த ஒள்ளிய மலர் அன்ன, உயர்ந்த அழகிய காதலியின் குணங்கள் மிகவும் அன்பு பொருந்தி என்னை அடையவந்தன.

—கல்லாடனார்

## 84. முல்லை

[இது, தலைமகன் பாசறையிருந்து சொல்லியது.]

மலைமீது வளைந்து அச்சந்தரும்படி முரசு போல் முழங்கும் மேகம் கடலிடத்தே நீரை உண்டு தாழ்ந்து பெய்கின்ற நீரை, வலமாக எழுந்து திசைகளெல்லாம் மறையப் பெய்தலின் பெரிய நிலம் அழகு பெற்று உயிர்களுக்குத் தண்

ணளி செய்கின்ற காலத்து, நெருப்புப் போன்ற சிறு கண்ணுடைய பன்றியின் மணலிடத்தே *பற்றையில் துஞ்சுகின்ற முதுகு மறைய நறிய புதிய முல்லையின் மலர்உதிரும் சிறுகாட்டின் வழி முகப்பிலுள்ள சீறூரிடத்தள், ஒள்ளிய நுதலுடைய நம் காதலி. எரிபோன்ற தாமரை மலர்கள் பிறழும்படி வலித்து, நெல்லை அரிவோர் கட்டிய அலைகின்ற தலையுடைய சூட்டைக், கள்ளை உண்கின்ற களமர் களந்தோறும் கொண்டு போகும் மருத நிலங்கள் பொருந்திய கொடிகள் அசையும் ஊர்களைப் பகைவர் திறையாகக் கொடுப்பவும் கொள்ளாது கோபமிருந்து போருக்குப் போகவிடும் தானையுடைய வேந்தனது பாசறையிடத்தேம்யாம்.

—மதுரை எழுத்தாளன்

## 85. பாலை

[இது, தலைமகன் பிரிய வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. இப்பாட்டு எதிர்காலம் நோக்கிற்று.]

அழகிய நெற்றி பசப்பவும், பெரிய தோள் நெகிழவும் உண்ணாத வாட்டத்தோடு உயிர் செல்லும்படி சோர்ந்து யாம் இவ்வியல்பினமாகவும் இவ்விடத்தே நம்மைத் துறந்தோர் அருளுடையரல்லரெனப் பலவற்றைக் கூறிப்புலந்து அழாதே. தோழீ ! வாழ்வாயாக. பக்கமலையிடத்தே ஈன்று நாட்சென்ற மெல்லிய நடையுடைய மடப்பிடியின் கன்றின் பசி களைய, பசியகண்ணுடைய யானை, முற்றாத மூங்கின் முளையை முறித்து ஊட்டும் வெல்லும் வேலுடைய திரையனது உயர்ந்த வேங்கட மலையில், காலையின் மலர்ந்த மிக இளமையுடைய வேங்கையின் நறிய பூவைக் குடைந்த பொறியும் வரியுமுடைய மயில், நறிய பசிய குருந்தின் நாறுகின்ற *சினையிடத்தே இருந்து துணையை அழைக்கும். அது,

வருகின்றேனென்று நின் காதலர் தேற்றிச் சென்றகுளிர்ந்த கார்காலமாகும். அதற்கு மழையும் பரவா நின்றது. அதனைப் பாராய்.

—காட்டூர் கிழார்மகனார் கண்ணனார்

## 86. மருதம்

[இது, வாயின் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. தலைமகளைக் கூடி யின்புற்றிருந்த தலைமகன் பண்டு நிகழ்ந்தது சொற்று இன்புற்றிருந்ததூஉமாம்]

உழுந்து பெய்து ஆக்கிய குழைந்த களியோடு (உழுத்தங்களியோடு) பெரிய சோற்றுக்குவியல் கிடப்ப, நிரைத்த கால்களுடைய குளிர்ந்த பெரிய பந்தரிடத்தே மணலைக் கொணர்ந்து பரப்பி மனையிடத்தே விளக்கேற்றி மாலை தூக்கிச் செறிந்த இருள் அகன்று அழகு பெற்ற நோத்து, தீயகிரகங்கள் இடம்விட்டு நீங்கி வளைந்த வெண் திங்கள் ரோகிணியோடு சேரும் குற்றந்தீர்ந்த சிறப்புடைய கலியாண நாள் வந்ததாக, உச்சியிலே குடமுடையோரும், கையிலே புதிய அகன்ற பாத்திரம் உடையோருமாகிய கலியாணத்துக்கு வந்த முதிய நல்ல பெண்கள், முன்னும் பின்னுமாகக் குடங்களை மாறிமாறிக் கொடுக்க, ஆண்மக்களைப் பெற்ற திதலையுடைய அழகிய வயிறும் தாலி தரித்தோருமாகிய பெண்கள் நால்வர் கூடி, 'கற்பு நெறியிற் றிறம்பாது கொண்டார்க்கு இனியவற்றைப் புரிந்து விரும்பத்தக்க மனைவியாகுக' என்று நீரோடு சொரிந்த குளிர்ந்த இதழுடைய மலர் சொரிந்த கரிய கூந்தலில் நெல்லோடு விளங்க முழுக்காட்டுதலாகிய மணம் *கழிந்த காலை, தமர் கல் என்னும் ஓசையோடு சரேலென்று புகுந்து பெரிய

* இது போன்ற வழக்கம் இன்றும் ஈழத்துத் தமிழர்களிடையே காணப்படுகின்றது.

இற்கிழத்தி ஆகுக என்று தர, ஓரிடத்தே தங்கிச் சேர்கின்ற இராக்காலத்து முதுகுவளைந்து• கலிங்கத்தே ஒடுங்கிக்கிடத்தலால் கோடின புறத்தை முயங்குதல் விருப்போடு முகத்தின் மறைப்பைத் திறப்ப, அஞ்சி அவள் நெட்டுயிர்த்த காலை நின்நெஞ்சிடத்தே ஆழமாகத் தோன்றியதை அஞ்சாது கூறு என, இனிய நகையோடு யான்வினவலின், அழகிய சூடுடைய விளங்குகின்ற குழை அழகிய காதில் அசைய அகத்தே மகிழ்ச்சி எய்தியவளாகி முகத்தைத் தாழ்த்து ஓய் எனக் குனிந்தாள், மானின் மருண்ட மதர்த்த பார்வையையும் வாரிமுடிந்த கூந்தலையுமுடைய மாயோள்.

கலிங்கம்—ஆடை, நெட்டுயிர்த்தல்—பெருமூச்செறிதல், சூடு—மயில் முதலியவற்றின் கொண்டை போல்வது.

—நல்லாவூர்கிழார்

## 87. பாலை

[இது வினைமுற்றி மீளுந் தலைமகன் இடைச் சுரத்துத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது]

இனிய தயிர்கடைந்த திரண்ட காம்புடைய மத்து, கன்று நக்கும்படி முற்றத்தே தூங்கும், மரநிழலாகிய பந்தருடைய புல்லால் வேய்ந்த சிறிய வீடுடைய வறுமை மிகுந்த சீறூரிடத்தே இரவிற்றங்கி கொண்டையுடைய பெரிய கோழிச் சேவல் தலைக் குரல்காட்டும் நேரத்து எழுந்து சென்று, முன்னால் கடிய கண்ணுடைய மறவரது கல்லுச் செறிந்த குறும்பில் எழுந்த * தண்ணுமையின் ஓசையால் அரிய சுரத்தே செல்வோரின் நெஞ்சு துணுக்குற குன்று சேர்ந்த கவர்பட்ட வழிகளில் ஒலிக்கும் அத்தத்தில் மிகப் பெரிதும் வருந்தினை. ஆதலின் இனி நீ மகிழ்வாயாக.

* நிரை கவர்தற்குச் செல்லக் கொட்டுந்தண்ணுமை.

நெஞ்சே ! வாழ்க. இருள் நீங்க எரியும் விடிவிளக்குடைய வான்தோயும் பெரிய மனையிடத்து, சுணங்கு பொறித்த அழகிய முலைகளின் அழகைப் பாராட்டித் தாழ்ந்த கரிய கூந்தலுடைய காதலியின் உயர்ந்த வனப்புடைய தோளை அணைந்து மகிழ்வாயாக.

தண்ணுமை—மேளம் ; அத்தம்—அரியவழி.

—மதுரைப் பேராலவாயார்

## 88. குறிஞ்சி

[இது, இரவுக் குறிவந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது]

உயர்ந்த புனத்தே செழித்து வளர்ந்த பெரிய செந்தினையின் உயர்ந்த வளைந்த பெரிய கதிரை உண்ணுதற்குத் தன்பக்கத்தே பல்லி சொல்லும் நிமித்தத்தை ஆராய்ந்து செல்லும் இளம்பன்றியின் வருகையை நோக்கி, வலியகையுடைய கானவன் பறனின்மீது கொளுத்திய நீண்ட சுடருடைய விளக்கை நோக்கிவந்து நமது பெரிய துன்பத்தைக் களைந்த நல்லோன் தமியனாய்ச் சென்றான். மலையிடத்தே பெரிய புலியைத் தொலைத்த பெரிய கையுடைய யானையின் மதம் பாயும் சுவட்டால் பாயும் மதத்தை மொய்த்து வண்டினம் ஆர்ப்ப, யாழின் குரலென நினைந்து பெரிய மலைமுழைஞ்சிலுள்ள *அசுணமா கேட்கும் மூங்கில் செறிந்த காட்டில் பாம்பு மடியும்படி நெரிக்கும் கொடிய விரலுடைய கரடி கிண்டும் வடுவாழ்ந்த புற்றையுடையன, செல்லற்கரிய வழிகள்.

அசுணமா : ஒருவகை விலங்கு ; கொடிய ஓசையைக் கேட்பின் இறக்கும். 'பறைபடவாழா அசுணமா' இது இசையில் மிகவிருப்புள்ளது.

தினை நுகர்தற்குப் பன்றி நிமித்தம் பார்த்து வருகை யைச் செய்ததாயினும் கானவன் அதுவருகின்ற திறமறி ந்து சுடர் கொளுத்தினாற் போலத், தாமும் பேணி வந் தாரேயாயினும் வரவு வெளிப்படுமென்றவாறு.

—ஈழத்துப் பூதன்றேவனார்

## 89. பாலை

[இது, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

தெறுகின்ற கதிருடைய ஞாயிறு வேனிற்காலத்தின் நடுநாளில் நின்று காய்தலின் மழை வறந்து பேய்த்தேர் ஓடு கின்ற நடுக்காட்டில் கோபித்து எழுகின்ற குரலுடைய கூகைச் சேவல், புல்சாய்ந்த மலைவெடிப்பு வருந்த வரையி னின்றும் கல்லெறியும் இசை ஒப்பக் குழறும் இடத் துச் சிள் வண்டு ஒலிக்கும் சிறிய இலையுடைய வேலமரத் தின் முதிர்ந்து காய்ந்த நெற்று உதிரும். வண்ணார், அவ் வாரவார மிகுந்த விடத்து, வெவ்விய உவர்மண்ணைச் சிந்துதலின் உவர்பரந்த உயர்ந்த பாறையுடைய பக்கத்தே இருந்து நிணத்தோடு கூடிய ஊனைத்தின்ற வளைந்த வில்லு டைய மறவர் கரிய வலிய தோள்கள் பூரிக்கும்படி அசைத்து பண்டங்களைச் சுமந்து செல்கின்ற கழுதையின் நீண்ட நிரைக்குப் பின்னால் காவல் காத்துச்செல்லும் வாள் வீரர்களாகிய சாத்தரது தலையைத் துமித்த மிகுந்த புலால் நாற்றம் வீசும் களத்துப் பறையைத் தாழ்த்து அரிய பண்டங்களைப் பகுந்த விடுநிலமாகிய பெரியபுனம் தூரம் என்று கருதாது, மெல்லிய சிறிய அடிகள் வருந்தச் செல்ல வல்லுநள் ஆயினளோ! தேனளாவிய இனிய பாலை வருத்தவும் உண்ணாது மணற்பரப்பிய பந்தருள்

உலாவும் உயர்ந்த மிருதுவாகிய பணைத்த தோள்களை உடைய மாயோள்.

துமித்தல்—அறுத்தல், மாயோள்—கரியவள், சாத்தர்—வணிகர், மாயோள் செல்லவல்லுநள் ஆயினளோ என வினை முடிவு செய்க.

—மதுரைக் காஞ்சிப் புலவர்

## 90. நெய்தல்

[இது, பகற்குறிவந்து கண்ணுற்று நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப்பறிவுறீஇயது.]

முதியவர்கள் போன்ற வெள்ளிய தலையுடைய கடல், இளையோர் இழைத்து விளையாடும் சிறிய வீட்டை அழிக்கும்; மடல்விரிந்த தாழைகளுடைய கடற்கரைத் துறையிடத்து சிலர் அறிந்த நமது கூட்டம் அலராயெழுதலின் தமர் அவளை இல்லிடத்தே செறித்ததை அறியாய். முதிர்ந்த முலையால் வருத்தப் பண்ணுளாதலின் வருந்தும் பெரிய மார்பினையுடையீர்! எங்கள் வருத்த மறிந்து வரைந்து கொள்ள நினையாத உமக்கு நீங்குக என்று யான் சொன்னலு மறியீர்.

வலிய தெய்வங்கள் எல்லாம் பலி கொள்கின்ற செல்லூருக்குக் கிழக்கே பெரிய கடல் முழக்குப்போன்றதாகி, புதுவருவாயுடைய, ஆயுதங்கள் வடுப்படுத்தின தழும்புடைய முகத்தாகிய கரிய கண்ணுடைய கோசர் வாழும் நகரமாயினும், நறிய நுதலுடையவளது பசிய ஆபரணங்களின் விலைக்குப் போதுமெனக் கொள்ளுவாரல்லர்.

மூத்தோர் இளையோரை வருத்தாரன்றே; அது செய்யாது புணரி இளையோர் மனை சிதைத்தாற் போலப் பெரிய

அறிவுடைய நீர் சிறியேமாகிய எங்களை வருத்தாநின்றீர் என்றவாறு.

—மதுரை மருதனிள நாகனார்

## 91. பாலை

[இது, பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

விளங்குகின்ற பகலைச் செய்கின்ற ஞாயிறு வளம் பொருந்திய பெரிய மலையிலுள்ளனயாவும் தீயும்படி தெறுதலின் அருவி வற்றிய பெரிய பாறையின் மருங்கில், தெய்வ முறைகின்ற சுனையைத் துழாவி நீர்ப் பசுமை காணாது பாசியைத்தின்ற பசிய கண்ணுடைய யானை பசியால் ஒய்ந்த பிடியோடு ஒரு பக்கத்தே ஒடுங்க மூங்கிலின் கணுக்கள் பிளந்த வெயில் தெறுகின்ற நடுக்காட்டில் அரும் பொருள் பெறும் வேட்கையினராய் அகன்றனராயினும் அவர் பெரிதும் அன்புடையர்; தோழீ! பெருமை பொருந்திய மான் தங்கும் உயர்ந்த பரலுடைய சிறிய பற்றையிடத்தே கடிய கண்ணுடைய மழவர் உழ முளைத்த நீண்ட காலுடைய ஈரப் பலாவுடைய உம்பற்காட்டை வார்பிணித்த முழவுடைய குட்டுவன்காக்கப் பசி இன்னதென்றறியாத முரசு ஆரவாரிக்கும் ஊரிடத்துத் தாமரை முகை போன்ற முனையுடைய விசாலித்த கொம்புடைய எருமை, முதிர்ந்த வளைந்த பலாவின் கொழுவிய நிழலில் தங்கும் குட நாட்டைப் பெற்றாலும் மருண்ட மானைப் போன்ற நின்னை நோக்கி, மாட்சிமைப்பட்ட அழகை மறந்து தாமதிக்க மாட்டார்.

—மாமூலனார்

## 92. குறிஞ்சி

[இது, இரவுக்குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்குந் தலைமகனைப் பகற்குறி வாய் பாட்டாற் றோழி வரைவு கடாயது.]

நெடிய பாறையிடத்துக் கண் ஒளி மழுங்கும் படி மின்னிப் பெரிய மழை பொழிந்த நடு இரவில் யானை நடுங்கும்படி தாக்கி வளைந்த வரியும் சிவந்த கண்ணுமுடைய பெரிய புலி முழங்குகின்ற பக்கமலையிடத்து வாராதீர். ஐயனே! வாழ்க. நேரிய இறையுடைய மிருதுவாகிய பணைத்த தோளுடைய இவளும்யானும் நாளைப்பகற்பொழுதில்தினைப் புனத்தைக் காப்பேம். மந்தியும் ஏறியறியாத மரச் செறிவுடைய இறும்பிடத்தே ஒள்ளிய செங்காந்தள்மலர்ந்து கிடக்குமிடத்து, குளிர்ந்த பல அருவிதாழ்ந்தோடும் ஒரு கரையில் இடி கோபித்து இடித்து வலியழிந்த பாம்பின் மணியாகிய விளக்கிடத்தே இருண்ட மெல்லிய கூந்தலுடையவளோடு மிகுந்த மகிழ்ச்சியுடைய துயிலைப் பெறுகுவை.

பாம்பின் மணியாகிய விளக்கு என்றமையால் பாம்பினால் இடையூறுண்டென்றும், மலர்ந்த காந்தட்பூ உள்ள என்றமையால் மலரெடுக்கவருவோரால் இடையூறுண்டென்றும் பகற் குறியும் விலக்கியவாறும்.

இறும்பு-மலை

—மதுரைப்பாலாசிரியர் நற்றமனார்

## 93. பாலை

[இது, வினைமுற்றி மீளலுறுந் தலைமகன் இடைச்சுரத்துத்தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

நண்பர்களது துன்பங்களைக்களையவும், கிளைஞர் உண்ணவும் நொதுமலர் நட்புப்பூண்டு ஒழுகவும் பொருள்தொகுத்

தற்கு எழுந்த உள்ளக் கிளர்ச்சியோடு வெற்றிகரமாக, ஆர மும் போர்ப் பூவும் வெல்லும் போருமுடைய சோழரது அறம்பொருந்திய நல்ல அவையுடைய உறந்தை அன்னபெற லரும் நல்ல ஆபரணங்களைப் பெற்றுத்தேடுதற்கரிய பொருள் தொகுக்கும் வினையை முடித்தேமாதலின், ஆரண்பலவற் றைக் கடந்த வலியதானையும் வாடாதவேம்புமுடைய வழு தியின் காலங்காடித்தெருவின் நாளங்காடிநாறுவது போன்ற நறியநுதலும் நீண்டகரிய கூந்தலும் உடைய மாயோளொடு மலைக்குடைந்தாலன்ன வானைமுட்டும் நெடிய மனை யிடத்தே, நுரையை அள்ளினாற் போன்ற மிருதுவாகிய பூக்கள் பரப்பிய படுக்கையிடத்து, உயர்ந்த பள்ளியறையின் உயர்ந்தசுடருடைய விளக்கில் அழகிய ஆகத்தே ஆபரணங் கள் வடுச் செய்ய முயங்குவேம்; நெஞ்சே! செல்வாயாக. புகர் நெற்றியும் சுனைபோன்று வடிந்து வாயிடத்தே புகும் மதமுடைய வலியோடு நிலத்தே எறிந்து குறுகி ஆட்களைக் கொல்வதிற்பிழையாத அச்சந்தரும் விசாலித்த கையுமுடைய கடிய கோபமுடைய ஆண்யானையும், நெடிய தேருமுடைய சேரனது செல்வநிறைந்த அழகிய கருவூரின் முன்றுறையிடத்துள்ள தெளிந்த நீருடைய கரையிற் குவிந்த குளிர்ந்த பொருநை மணலினும் அம்முயக்கம் பல வாகும்.

—கணக்காயனார் மகனார் நக்கீரனார்

## 94. முல்லை

[இது, வினை முற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தலைமகன் பாகற்குச் சொற்ற தூஉமாம்]

தேன்பாயும் மலைக்குப் பக்கத்தே மண்டி வளர்ந்த கூட்டமாகிய இலையுடைய முசுண்டையின் வானைப் போற்

பூத்த வெள்ளிய பூக்கள் குழைய, பாதிஇரவில் உருவிச் சேர்த்த பறியை முதுகிடத்தே உடைய இடையன், தண்ணிய கமழ்கின்றமுல்லையைச் செங்காந்தளோடுவிரவி வண்டு மூசும்படி தொடுத்த நீர்வடியும் கண்ணியை உடையனாய் ஐதாய் எரிகின்ற தணலில் உள்ளங்கையைக் காய்ச்சிக்கூதற் காய, குறு நரி ஊளையிடும் செறிந்த மயக்கமுடைய நீண்ட தொனி, சிறிய கண்ணுடைய பன்றியின் பெரிய கூட்டத்தை ஓட்ட, புனத்தைக் காப்போர் விளித்திருந்து ஊதும் கரிய கொம்பின் ஓசை யோடு ஒருங்கேவந்திசைக்கும் வன் புலமுடைய காடுடைய நாட்டிடத்துள்ளது, கரிய செறிந்த கூந்தலுடையவளது ஊர். ஊர் உள்ளது என வினைமுடிவு செய்க.

—நன்பலூர்ச்சிறு மேதாவியார்

## 95. பாலை

[இது, போக்குடன் பட்டதலைமகள் தோழிக்குச்சொல்லியது]

சிறிது சிறிதாகப் பசந்து நுதலும் வாடி மெலிகின்றது; என் தனிமை ஒத்த மேனியும் வாடிப் பலரும் நோயை அறியும்படி தோன்றுகின்றது. இவற்றை நோக்கி, உயிர் போன்ற காதலர் எம்மைக்கொண்டேகுதலன்றி வேறொன்றை நினைவார்; பொருக்கும் திரண்ட மொக்குகளுமுடைய இருப்பையின் குவிந்த பூங்கொத்தினின்றும் கழன்று வழியிடத்தே சொரிந்து கிடக்கும் துவாரமுடைய ஆலாங் கட்டிபோன்ற பூவை இழிந்த கரடியின் பெரிய கூட்டம் வழியிடத்திருந்து பொறுக்கி நுகரும். அதனால் வழிப் போக்கர் தொலையாத வழியிடத்தே வருந்துவர். இவ்வாறு அரிய வழியைக் கடந்து வந்த நம் காதலரிடத்து இரக்கமிலராய் இவ்வூரிடத்துள்ள கொடிய பெண்கள் அலர் தூற்றி

இன்னாதவற்றைக் கூறினர். அதனை அறிந்த அன்னை அது என் மகட்கு ஏற்றதல்ல எனக் கூறினள். இவ்வாறு நமது களவொழுக்கத்தை அறிந்து ஆறின தன்மையுடைய அன்னையின்முன் யான் எப்படித் தினமும் எதிர்ப்படுவது.

—ஒரோடோகத்துக் கந்தரத்தனார்

## 96. மருதம்

[இது, தோழி வாயின் மறுத்தது]

கள்ளுண்டெறிந்த பாத்திரத்துக்குத் திடுக்கிட்ட இறால், நாணறுந்த வில்லுப்போலத்துள்ளி நெற்கூட்டுக்குள் பாயும் வயலிடத்துள்ள பொய்கையின் கரையில் வளரும் அரத்தின்வாய் போன்ற முள்ளுடைய பிரம்பின் நெடிய கொடியை நீராம்பலின் அகன்ற இலைமீது எறிந்து வாடை வீசுதலின் அது துருத்தியின் தோல் போல ஊதித் தொய்யும் மருத நிலச் சோலையுடைய காஞ்சியூர! ஒள்ளிய வளையணிந்த ஆயத்தை விரும்பும் ஓர் குறமகளை நீ விரும்பிக்கொண்டாய் என்று கூறுவர்; அச்செயல் சிவந்த பொற்சிலம்பும், குறங்கு செறியும், அழகிய கலங்கிய மாமை நிறமும் உடைய அஃதையின் தந்தையாகிய தலைமை மிக்க யானையுடைய வெல்கின்ற போருடைய சோழர், வெண்ணெல்லுடைய பருவூர்ப் பறந்தலையில் இருபெரு வேந்தரும் ஒரு களத் தொழிய ஒளிவிடுகின்ற வாளினால் நல்ல போரை வென்று களிறுகளைக் கைப்பற்றும்போது எழுந்த ஓசை போலப் பலர் வாய்ப்பட்டு அலராகின்றது.

—மருதம்பாடிய இளங்கடுங்கோ.

## 97

[வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

கள்ளியங்காட்டிலுள்ள புள்ளியுடைய கலை வருந்தி அழகிய்கோடு ஓடியும்படி வேட்டம் புரிந்து புலால் நாற்ற

முடைய புலி விட்டுப்போன செக்கு விட்ட இறைச்சியை, இராக்காலத்தே குறும்பிடத்துள்ளார் அலறும்படி கொன்று கவர்ந்த நிரைகளைப் பகுத்துப் பெரிய கல் நிறைந்த முடுக்கரில் இருந்து உணவை மென்று தின்னும் கொலை புரியும் வில்லுடைய வீரரைப் போலப் பல எருவைகளோடுபருந்து வந்து தங்கி உண்ணும் அரிய சுரத்தைக் கடந்த கொடியோர்க்காகத் தினமும், சிறிய மூங்கிற் கோலின் வளைந்த கணுப் போன்ற வளைந்த இறையுடைய விறலியரோடு கூத்தரைப் புரந்த அன்பும், உழல்கின்ற வளையும் கள்ளுண்ட மகிழ்ச்சியு முடைய ஓலக்க இருக்கையுடைய நன்னன் வேண்மானது, வயலை வேலியாகவுடைய வியலூர் போன்ற நின் அலர்ந்த முலையுடைய ஆகம் வருந்தப் பலவற்றைக் கூறி அழாதே என்று கூறினாய் ; தோழீ ! குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பவிழ்கின்ற வேனிற் காலத்து வாரடித்த அறலுடைய அகலியாற்றின் கரையிடத்துத் துறையை அழகு செய்யும் மருதமோடு மாறுபட உயர்ந்து தண்ணிய தளிரணிந்த பெரிய கிளையுடைய மாவின் செறிந்த புதுப்பூ நிரைத்த சோலையிடத்து அழகிய மேகம் ஊரக் குயில்கள் கூவும் குரல் கேட்போர்க்குக் கண்ணீரை நிறுத்துதல் எளிதோ ?

—மாமூலனார்

## 98. குறிஞ்சி

[இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

இமயமலைபோல் உயர்ந்த பயன் பொருந்திய பக்கமலையிடத்து நங்காதலர் துன்பமில்லாது அளித்த மகிழ்ச்சி துன்பமாக மாறிற்றாக, வெறுப்பை உண்டாக்கும் இவ்

வருத்தம் தெய்வ முறைநின்ற வெற்பிடத்தவன் மார்பாற் றணியுமென்பதை அன்னை அறியாள்; வரைந்த கோல் போலச் செறிந்திலங்கும் வளை நெகிழ்ந்தமை நோக்கிச் செயலற்ற நெஞ்சினளாய் முதிய பொய் கூறு வதில் வல்ல பெண்டிரை வினவினள்; அவள் அரிசியைப் பலியாகத் தூவிக் குறிபார்த்து இது முருகனால்நேர்ந்த வருத்தம் எனக்கூறினள்; அதனை நினைந்து சித்திரம் போல வேலைப் பாடமைந்த அழகிய நல்ல இல்லில், ஆயத்தார் அலங்கரித்த மாட்சிமைப் பட்ட பாவை போன்ற அழகு என் மகட்குப் பண்டையிற் சிறப்பதாக என நினைந்து தெய்வத்தைப் பரவிப் பல இனிய வாத்தியங்கள் ஒருமித்தொலிக்கக் களன் அமைத்து, வெறியாட் டெடுத்த அகன்ற பெரிய பந்தரிடத்தே வெள்ளிய பிளந்த வாயு டைய கடம்பின் பூவாற் றொடுத்த மாலையைச் சூடி இனிய ஐதாகிய தாள மிட்டுச் கூத்தாடிக் கும்பிட்டு வேலனது பெரிய புகழைப் பாடி, வெறி ஆடுகின்ற வேலனது களத்தை அலங்கரிக்க வல்லோன் (படிமத்தான்) பொறி அற்றபாவை போல நின்று வேண்டுவதால் என்ன பயன் உண்டாகும். தோழீ! எனது வருத்தத்தின் காரண மறியாது மயங்கிய பெண்கள் வருந்துமாறு வெறியாடிய பின்னும் வாடிய மேனி முன் போல் அழகு பெறுதாயின் இக் களவுப் புணர்ச்சி அலராகாமை அரிதாகும்; அதை அறிதலால் நமக்குண்டா கும் வருத்தத்தை அறிந்து நறுமணங்கமழும் பெருந்தகை வரைந்தது கொள்வானாயின் இனிதாகும். செறிந்த தொடி கழலலுற்ற காரணம் பிறிதெனக் கான் கெழுநாடனாகிய தந்தை கேட்ட பின் உயிர் வாழ்தல் அவ்வலர் கேட்டு வாழ் தலினும் அரிதாகும்.

—வெறிபாடிய காமக்கண்ணியார்

## 99 பாலை

(இது, உடன்போகிய தலைமகளைத் தலைமகன் மருட்டிச் சொல்லியது)

இக் காட்டிடத்தே, வாள் போன்ற வரியுடைய புலியின் வளைந்த நகம் ஒத்த சிவந்த முகை விரிந்த முள் முருக்கம் பூவின் தாதின் சிவப்புப் படர்ந்த மதர்த் தெழுந்து மாட்சிமைப் பட்ட ஆபரண மணிந்த மகளிர் முலைபோன்ற முகை விரித்த கோங்கமோடு குளிர்ந்த புனலிமரம் அசையாநிற்கும்; பூ உதிர்த்த பரந்த குளிர்ந்த பாதிரியின் கொம்பு, எதிரே பூத்த குருக்கத்தியின் மலரோடு பொருந்தி நறுமணம் ஆடினவர்களைப் போலாய், மணக்கும் பூவினும் விரும்பத்தக்கதா யிருக்கும். போர்க்களத்தே பாய்ந்து பூண் முறித்த மருப்புடைய களிறோடு விரவின யானைக் கூட்டம் போல் குறியவும் நெடியவுமாகிய நின் தந்தையின் நாட்டிலுள்ள குன்றுகள் தோன்றும்.

—பாலை பாடிய பெருங்கடுங்கோ

## 100 நெய்தல்

[இது, தோழி வரைவு கடாயது]

அசைந் தோய்ந்த முத்து வடத்தைக் களைந்து பெருமையுடைய பூ மாலை அணிந்த மார்ப! இராக் காலத்தே வந்து நல்ல மார்பு வடுக் கொள்ளும்படி முயங்கிப் போதல் எனக்கு மகிழ்ச்சி தரும். பெரிய திரையின் முழக்கத் தோடு மேகம் கவிந்து மழை பெய்கின்ற இரவில் இருண்ட கடலிடத்தே மீன் பிடிக்கச் சென்ற செம்படவருக்கு இருளை நீக்கும் விளக்கு, பிறங்கிடாத வலிய வேந்தனது பாசறையில் நிற்கும், ஆடுகின்ற இயல்புடைய யானையின் அழகிய முகத்தே அசைகின்ற நெற்றிப்பட்டத்தின் பிரவை ஒப்பத் தோன்றும். பாடுவோர்க்கு வளைந்த கையுடைய வள்ளலா

கிய குதிரை பூண்ட அழகிய தேருடைய பெரியனின் விரிந்த பூங் கொத்துக்களுடைய புன்னைமரச் சோலையுடைய புறந்தையின் முன் துறையிடத்துப் புதிய நாரை தன் இனத்தை அழைக்க ஒலித்தது போல், தண்ணிய புலரிக் காலையில் போகிய எருமை நெய்தலின் புதிய மலரை மாந் தும், தாழைகள் செறிந்த ஆரவாரமுடைய ஊரிடத்து அம் பல் எழா நின்றது.

அம்பல்—சிலர் அறிந்த அலர்; அலர்—பழிச்சொல்.

—உலோச்சனார்

## 101. பாலை

[இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல் லியது. தோழி கிழத்திக்குச் சொல்லியதூஉமாம்]

தோழீ! வாழ்க. இம்மையின் நன்மை செய்யின் தீமை இல்லை என்னும் பழமொழி இன்று பொய்த்தது போலும். செம்மறிக்கிடாயின் கொம்புபோல்முறுகிப் பிடரியிடத்தே தூங்குகின்ற மயிரும் சிவந்த கண்ணு முடைய மழவர், இருமல் தீர்க்கும் மருந்தோடு வயிரிய, நெருப்பிற் கருகிய சிறிய கோலோடு வில்லைப்பிடித்து, நுரை தெரிகின்ற மத்துகள் செருகிக் கிடக்கும் இடத்தே நிற்கும் நிரைகளின் புறத்தே, காலை மறைக்கும் செருப்பு ஒலிக்கும்படி சென்று காவலுடைய இடத்தே, கன்றுகளோடு நிரையைக் கவர்ந்து கொண்டு செல்லும் பெருங் காட்டின் நடுவே அகன்ற பெரிய வானத்தில் விசும் பின் மறைப்புப் போலப் பகற் காலத்தே நின்ற பல கிரணங்களுடைய ஞாயிற்றின் வெப்பத்தை ஊர்ந்து வருகின்ற மேல்காற்று வீசுதலின் புல்லிய காலுடைய முருங்கையின்பலபூக்கள் குளிர்ந்த காலத்து ஆலாங்கட்டி போல உதிரும், பனி படுகின்ற பலமலைகளைக் கடந்தார்க்கு

வெறுக்கத்தக்கவற்றை யாம் செய்தோமல்லேம். நாம் எய்தும் துன்பம் ஒழிகின்று.

—மாமூலனார்

## 102. குறிஞ்சி

[இது, இரவுக் குறிக்கட் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது]

உயர்ந்த தினைப்புனத்தே சிங்கத்தை ஒத்த வலியுடைய கானவன் பரண்மீதிருந்து கள்ளை உண்டு மகிழ, சந்தனக் குழம்பைக் கரிய கூந்தலிற் தடவி ஐதாக வருகின்ற காற்றிலே கையினால் அசைத்துத் தழைத்த நீண்ட கூந்தலைக் காய்ச்சிய கொடிச்சி பெரியமலையின் பக்கத்தே யிருந்து குறிஞ்சிப் பண்பாட இளைய வலிய களிறு தினையின் கதிரை உண்ணாதும், நின்ற இடத்தினின்றும் பெயராதும் உறங்காத பசியகண்கள் நித்திரை வந்து உறங்கும்நாடன், ஆரம் தாங்கிய மார்பிடத்தே வரியுடைய தேன்வண்டு ஆர்ப்பத் தாரையும் கண்ணியையும் சூடி வலக்கையிடத்தே வேலுடையனாய், காவலரறியாதபடி மெல்லெனக் கதவை அசைத்துத் திறந்து புகுந்து துன்பத்தால் வருந்துகின்ற மார்பைத் தழுவித் தோளேமணந்து இன்சொற்களைக்கூறிப் பெயர்ந்தான். தோழி! அவன் வரைந்து கொள்ளாமையின் அவ்வொழுக்கம் சிலரறிந்த அலராகி இன்றுவந்து வாட்டுகின்ற தன்மையில் கரிய மயிர் சூழ்ந்த ஒள்ளிய நெற்றியிடத்தே பசப்பாயிற்று.

—மதுரை யிளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்.

## 103. பாலை

[இது, தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொற்றது.]

நிழலற்ற நடுக்காட்டிடத்தே, ஒளியுடைய தலையும் ஒடுங்கிய சிவந்தநாவும் தெறித்தது போன்ற நுண்ணிய பல பொறிகளுமுடைய அழகிய ஆண்டலைப் புள் வாடிய சிறிய தூறு தனிக்கும்படி சென்று,முற்புறத்துப் பருக்கைக்கற்கள் பரந்திருக்கும் பெரிய மன்றின் வழி எதிரேயுள்ள சிறு குடியிடத்தே, உறைவோர் குடிபோகிய உயர்ந்த நிலையுடைய பெரிய மனை இறப்பின் நிழலின் ஒரு பக்கத்தே இருந்து அழுது வருந்தும், கொடிய போர் முனைபோன்ற அரிய சுரத்தைக் கடந்து வினை செய்தற்குச் சென்று மீளுகின்ற நங்காதலர், வருத்தந் துணையாக நடுயாமத்தே பசலை பொருந்தித், தன்னொடு தானே கழிந்த நலனைப் பெறும் பொருட்டு மீண்டு வந்து அருருளாரோ ?

—காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்.

## 104. முல்லை

[இது வினைமுற்றி மீளுந் தலைமகற்குத் தோழி சொல்லியது]

வேந்தன் வினையை முடித்த காலை தேன் ஒழுகி வண்டினம் ஆர்க்கும் தண்ணிய நறியமுல்லை நிலத்து வெற்றி வேலுடைய வீரர் மகிழ்ச்சியுற, பாகன் வாரை வலித்துச் செலுத்தின் அல்லது, முள்ளை உறுத்தின் கடல் சூழ்ந்தஇவ்வுலகமும் செலவுக்குப் போதாத கதியுடைய நான்கு குதிரை பூண்ட நெடிய தேரின் வளைந்த உறுப்புக்கள் பொலியும்படி ஏறி, புதரிடத்துள்ள பூவுடைய அவரையின், உள் ஒன்றுமில்லாத பொய்த்தோல் போன்ற வயிறுடைய வெள்ளிய வெள்ளாட்டுமறி, தளர்ந்து தூங்குகின்ற பெரிய செவியுடைய புல்லிய தலையுடைய சிறு குட்டிகளோடு களிப்புடன் மன்றிடத்தே ஆத்தியின் கவர்பட்ட இலையைக் கறிக்கும் சீறூர்கழியும்படி இடையிலே தாமதியாது வந்து

கண்ணீர் உகும் கண்ணளாய் பலவாறு புலந்துறையும் ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களணிந்தவளது கூந்தலிற் பூங் கொத்துகளைச் சூட்டி அலங்கரித்து மகிழ்ச்சியைச் செய்தனை. எந்தையே ! வாழ்க.

—மதுரை மருதனிள நாகனார்

## 105. பாலை

[இது, மகட் போக்கியதாய் சொல்லியது.]

அகன்ற பாறையிடத்தே மலர்ந்த வேங்கையின் பூவோடு தழையை விரவித் தொடுத்த மாலையை மெல்லெனத் தடவி நல்ல வரைநாடனைத் தனக்குரியனாகப் பாராட்ட எப்படி வல்லுனளாயினள்! தேனளாவிய தீம் பாலைப் பளிங்குப் பாத்திரத்தில் ஏந்திச் செவிலித் தாயர் ஊட்டவும் உண்ணாதவள், நிழலுடைய நீர் நிலை போன்ற குளிர்ந்த பெரிய மனையிடத்தே எமது செல்வத்தையும் உள்ளாளாய், பந்துபுடைப்பதுபோல்தாளம் போட்டு அடிவைக்கும் கதியுடையகுதிரையும், பல வேற்படையும் உடைய எழினியின், கெடுதற்கரிய வலியும் ஏவிய தொழிலை முற்றுவிக்கும் ஆற்றலுமுடைய வீரர் கொளுவுதலால் மண்டி, எரி பரந்து, காய்ந்த பாறைகளுடைய கானத்து, கொல்லும் அம்பும் பெரிய வில்லுமுடைய மறவர், தேனாற் சமைத்த நறிய கள்ளை உண்ட மகிழ்ச்சியால் பகைவரைவென்று, பெரிய மிருதுவாகிய பசுக்களை மீட்டுச் செல்லும் பரந்தவேனில் வெப்பமுடைய வழியிடத்தே செல்ல மயங்கிப் போயினள்.

—தாயங் கண்ணனார்

## 106. மருதம்

[இது, தலைமகள் தன்னைப் புறங்கூறினளாகக் கேட்ட பரத்தை யவட் குப்பாங்காயினர் கேட்பச் செல்லியது.]

எரி கிளைத்தாற் போன்ற தாமரை செறிந்தவயலிடத்துப் பொரி தெளித்தாற்போன்று துள்ளிப் பாய்கின்ற சிறிய மீன்களை உண்ட மீன்கொத்திப்புள், பறக்கமுடியாது மணமிகுந்த பசிய இலையில் மெத்தென மெத்தென அசைந்து வந்திருக்கும் துறையுடைய ஊரனாகிய தன்கொழுநனை நம்மோடு புலக்கும்படி சொல்லுவாள் என்று கூறுவர். நாம் நேரே சென்று கூறுவம் அல்லேம் ஆயினும் செறிந்த வளை ஒலிப்பக் கைகளை வீசிச் சிறிது அவ்விடத்தே உலாவிப் பாங்காயினர் கேட்பக் கூறிவருவேம், வருவாய், தோழீ! ஒள்ளிய வாட்படையும் வெற்றியுமுடைய வெளிறில்லாத கல்வியுமுடைய பாண்டியன் போர் செய்யுந்தோறும் களிற்றைப் பெறும் பாணன் கொட்டும் தண்ணுமையின் கண்போன்று வருந்தும் என் வயிறு.

—ஆலங்குடி வங்கனார்

## 107. பாலை

[இது, தோழி தலைமகள் குறிப்பறிந்து வந்து தலைமகற்குச் சொல்லியது.]

நீ செல்ல விரும்பினாய் என்பதைக் கேட்குந்தோறும் பலவற்றை நினைந்து, அன்பு காரணமாக நெஞ்சிடத்தே வருந்தும் தாங்கமுடியாத எனது அகத்துத் துன்பம் களையவேண்டி, நின்னோடு, பெரிய கருங்கற் பாறையிலே கிடத்தி வயிற்றைத் தின்று பெரிய புலி விட்டுச் சென்ற மானின் காய்ந்த கருவாடுடைய வழியிடத்தே செல்லும் புதிய மாக்கள், மகிழ்ச்சியோடு மூங்கிலரிசியைத் தயிரிலே பெய்து தொழுவத்திலே அட்ட வெள்ளிய நிணம் உருக்கினாற் போன்ற வெண் சோற்றைப் புகர்நிறமுடைய தேக்கிலையிலுண்ணும் கல்லாத நீண்ட பேச்சும், கோபமுடைய நாயுமுடைய வடுகரது வலிய ஆண்மையுடைய அரிய போர்

முனைபோன்ற இடத்தைக் கடந்து, வருந்திப் பெரிய அஞ்சத்தக்க இடையூறுடைய ஓடையிடத்து ஏறுதற்கருமை யுடைய ஏற்றத்தின் சறுக்கி வீழ்ந்து முடமாய் வம்பலர்விட்டுச் செல்லுதலால் தனிமையாகத் திரியும் வலிய எருதுக்கு, அழகிய குழையுடைய இருப்பையின் கீழ்நோக்கிய வாயுடைய பெரிய துவாரமுடைய பூவைப் புல்லிய தலைமயிருடைய சிறூர், வில்லினால் வாயை நீக்கி மரையைத் தூரத்தி நின்று ஊட்டும் மலையிடத்துள்ள சீறூரிடத்தே மாலைக்காலத்து நின்னோடு துணையாக இருந்து, பசிய நறிய பூ பெரிய பரலிடத்து உதிர்ந்து மனையிடத்தே கமழுகின்ற காலையில் (நீண்ட கூந்தலுடைய என் தோழியும் துணையாக வருவாள்.) எனது துன்பங்களை வேண்டி நீண்ட காந்தலுடைய தோழிமாலைக் காலத்தே நின்னொடு துணையாக இருந்து காலையில் நின்னொடு துணையாக வருவாள் என்ற வாறு.

—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

## 108. குறிஞ்சி

[இது, தலைமகன் சிறைப் புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லியது.]

சேர்ந்தவருக்குத் துன்பத்தைக் கொடுத்தல் அறிவுடையோர்க்கு ஏற்றதன்று ; அவ்வருத்தம் எவ்வாறு நிலைபெறும். முத்தை மலையிடத்தே சிந்தியது போன்ற, யானையின் மத்தகத்திலுள்ள புள்ளியை ஒத்த புதிய நீர் உறைந்த ஆலாங் கட்டி, பளிங்கு சொரிவது போலப் பாறையிடத்தே நிரையாகக் கிடக்க, மேகம் கோபித்தஇடனகன்ற விசும்பில் பொறி சிதறுகின்ற கொள்ளியைப் போலக் கொடிவிட்டு மின்னிப் பெரிய மழை பொழிந்த நடு இரவின் இருளில், இரை தேடுகின்ற சிங்கம் போலப் பொறி விரவிய மயி

னுக்குப் பயந்து பாம்பின் அஞ்சத்தக்க தலை படம் விரித்தாலன்ன, காயாவின் மெல்லிய கொம்பரை மூட்டும்படி வளர்ந்து பல அரும்புகளை நீட்டி அசைகின்ற பூங்கொத்துடைய காந்தளின் அழகிய மலரின் நறியதாதை ஊதும் தும்பி, சூதாடு கருவியில் ஆடுகின்ற கைபோற் தோன்றும் கரிய சென்னியை உடைய மலையுடைய நாடன் தனியே வருதலை அஞ்சான். தோழீ! வாழ்க! வருந்தாதே. மலைநாடன் இரைதேடும் சிங்கம்போல வருதலை அஞ்சான் என்றவாறு.

—தங்காற்போற் கோல்லனார்

## 109. பாலை

[இது, இடைச்சுரத்துத் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

பல இதழ்களுடைய மென்மையான மலரை உண்ட கண்களும், நல்ல யாழின் நரம்பு ஒலித்தாற்போன்ற இனிய மொழியுமுடையவள் ஊரிடத்தேவதிகின்றாள். கொம்புடைய யானையின் கூட்டம் திரண்டு காட்டின் வழியை மறிக்கும் நீண்ட மரச் சோலையிடத்து அணில் பாய்ந்து விளையாடுகின்ற மூங்கில் வளர்கின்ற நடுக்காட்டில் (ஆறலைப்பார்) வெள்ளிய நுதியுடைய அம்பின் விசையால் வீழ்த்தியோரை இட்டு மூடிய கற்குவியல் எண்ணில் அடங்காது கிடக்கும் சுரவழியிலே கொல்லப்பட்டவர்களைப் போல, அரிய வழியைக் கடந்து வந்தோரிடத்துக் கைப்பொருள் இல்லையாயினும், கொல்லாது, தப்பி ஓடாதபடி பெருங்களிற்றின் மருப்போடு புலித் தோலாற் கட்டி வைக்கும் அறனில்லாத வேந்தனுக்குரியவறண்ட குன்றுகள் பலவற்றைக் கடந்தேம். கொல்லப்பட்டவர்களைப் போலக் கட்டிப்போடும் அறனில்லாதவன் என்றவாறு.

—கடுந்தோடைக் காவினார்

## 110. நெய்தல்

[இது, தோழி, செவிலித்தாய்க்கு அறத்தோடு நின்றது]

அவள் அன்னை அறியினும் அறிக ! அம்மென அலர் தூற்றும் சேரியிலுள்ளார் கேட்பினும் கேட்க. சுழித்த நீருடைய புகார்த் தெய்வத்தை நோக்கிக் கடுமையான சத்தியஞ் செய்து எல்லாவற்றையும் கூறுவேன் கேட்பாயாக. விளையாடுகின்ற ஆயத்தாரோடு கடலுடனாடியும், சிற்றிலிழைத்தும், சிறுசோறட்டும் வருந்திய வருத்தம் தீரும்படி யாஞ் சிறிது நேரம் ஆறியிருந்தேமாக, ஒருவன் நம்மை அணுகி, விசாலித்த மிருதுவான தோளுடைய மட நல்லீர்! யான் இரவும் பகலும் திரியும் இயல்புடையேன் ; மெல்லிய இலையிடத்தே விருந்துண்டு யானும் இக் கல்லென்னும் சிறுகுடியிடத்தே தங்கின் என்னோ? என மொழிந்தான் ; அவனைக் கண்டு வணங்கிய முகத்தினேமாய் ஒருவர் முதுகோடு ஒருவர் ஒடுங்கி, இழிந்த கொழுத்த மீனுணவு உமக்கு ஏற்றதல்ல எனக் கூறி அழகிதாய் நீண்ட கொடி அசைகின்ற நாவாயைக் காண்போமென்று காலால் மணலை அழித்து நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும் என் தோழியைக் குறிப்பாகப் பார்த்து நல்ல நுதலைத் திருத்துவேன் யான் எனக் கூறினன். அதனைக் கேட்ட யாம் அவன் வருந்தக்கூடிய சிலவற்றைக்கூறி இவ்விடத்தை விட்டு நீங்குவாய் எனப் புகன்றேம். அவன் அகன்று பெரிய உயர்ந்த தேரின் கொடிஞ்சியைப்பற்றி நின்றான். அவனால் நேர்ந்த வருத்தம்போலும் என்றும் எனது தோழியை வாட்டுவது.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ

## 111. பாலை

[இது, தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.]

அரசர் யானையிடத்தே உயர்த்திய கொடிச்சீலைபோல வாடிய தலையுடைய ஞெமை மரத்துக் கூடுகட்டிய சிலம்பியின் வலை ஓடைக்குன்றத்தே கோடைக்காற்றுக்கு அசையக் காற்றின் ஓசையை மழை என மருண்ட மயக்கத்தோடு வாடிய களிறு தூக்கிய வருத்தமுடைய நீண்டகை, ஒழுங்குபட்ட பாடலைப்பாடும் கூத்தரின் நெடுவங்கியம் போற்பிளிறும் வழியிடத்தே பன்றியைக் கொன்ற செந்நாயின் கடுவன் அதனை விரைவாக இழுக்க, இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் எருவையின் சிவந்த செவி நெருங்கிய போர்க்களத்து இராக்காலத்தே கொளுத்திப் புண்பட்டவர்களைப் பார்க்கும் விளக்கைப்போல் தோன்றும் விண்ணைத் தீண்டும் பாறையுடைய மலையைக் கடந்தார், கோபித்தவர் இகழ்ச்சியுடைய நெஞ்சில் மகிழ்ச்சி யெய்தார் என்னும் சொல்லை நினைந்து நாணி, வருவர் தோழீ ! வாழ்க.

## 112. குறிஞ்சி

[இது, இரவுக்குறி வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லி வரைவுகடாயது.]

குறுநடையுடைய கூனல் எண்கின் கூட்டம் கறையான் எடுத்த சிவந்த புற்றின் மண்மூடிய கோடு உடையும்படி பெயர்த்து இரையை விரும்பி இருந்து கிளறும் நடுயாமத்தே ஈன்றணிமையுடைய பிணவு பசித்ததாக வீரமுடைய புலி வெள்ளிய உயர்ந்த மருப்புடைய களிற்றைக் கொன்று முழங்கும் அஞ்சத்தக்க இருண்ட சோலையிடத்தே துணைவேண்டுமென்னாது தனியே வந்து தீமை

யைச் செய்தாய். நீர் வராது நாள் இடையே கழியின் என் தோழிவாழாள். அவள் தோளிடத்தே முயங்க நீயும் விரும்புகின்றாய். பிரியாத காதலராயினும் சான்றோர் பழி யோடு வரும் இன்பத்தைச் விரும்பார். வான்தோய் வெற் பனே ! வரைந்து கொள்ளின் என்ன தீமை யுடையது ? குரங்கினங்கள் தாவித்திரியும் மிளகு கொடிபடரும் மலை யிடத்துக்கள வொழுக்கம் நிகழ்ந்ததைத் தமர் அறியார் ; பழைய முறைப்படி விவாகச் சடங்கில் நீர் பெண்கொள் ளும் ஒழுக்கத்தைக் கண்குளிர நோக்கி அயல் விருந்தி னரைப்போல் இருந்து இவள் நாணி ஒடுங்குவதை நாம் காண்பேம். என்கு—கரடி.

—நெய்தற்சாய்த்துய்த்த ஆவூர்கிழார்

## 113. பாலை

[இது, தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

செல்வம் வறண்ட காலத்தும் பழைய நட்பிற் கோடாது சென்று வழிபடுகின்ற மாறுபடாத கோட்பாடு டைய, புல்லிய தலையும், பிடிபோன்ற நடையுமுடைய விறலியரோடு கூடிய பாணரது பெருமானாகிய குதிரைகளைப் பரிசிலர்க்கு வழங்குகின்ற அஃதையை வணங்கிக் காவ லைக் கைவிட்ட பல வேற்படையுடைய கோசரது தேனூறும் நெய்தல் வளரும் வயலுடைய வளம் பொருந்திய நல்ல நாட்டைப்போல எனது தோளை மணந் தாரென்று ஆரவாரமுடைய மூதூரிடத்தே அலரெழுந்து அரற்றவும் வரையாது நின்காதலர் பிரிந்தாரென்று, கல் போன்று மெலியாத பரட்டோடுகூடிய வலிய தாளும், முலையிடத்து உண்கின்ற பாலாகிய உணவும் உடைய சிறு ரும் இகழ்ந்தனராயினும், பதுங்கியிருந்து தருணம் பார்த்

துப் பகைவருறைகின்ற உணவு நிறைந்த குறும்பிடத்துள்ள திரண்ட ஏரியுடைய ஏற்றோடு நிற்கும் நிரைகளை அடித்துச் செல்லும், பெரிய செறிந்த பூணிறுக்கிய காம்புடைய நெடிய வேலும், விழா அயர்ந்தாற் போன்ற கொழுவிய உணவு முடைய பாணனது, குடிகள் தம்பதியை விட்டு எழாதநல்லநாட்டுக்கு அப்பால் வழியேபோகும் புதியமாக்களைக்கொன்ற பகைவரின் எறிபடைகளைக் கழுவிய சிவந்த வரியுடைய நீர் அற்ற நுண்ணிய மணலுடைய கரையைத் தாண்டிச் சேயர் ஆயினர் என்று கூறுப. அதனை அறிந்து வருந்தி நெஞ்சில் வருத்தம் நீங்க உறைதலும் உரியேம்; ஏனெனில் பரிய அரையுடைய மரத்தில் அசைகின்ற கொம்பரிடத்துள்ள கூட்டை விட்டுப் புள் எழுந்தது போல உடல் இவ்விடத்துக் கிடக்க அவர் சென்ற இடத்தில் உயிர் சென்றது.

—கல்லாடனார்

## 114. முல்லை

[இது, வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

நெடிய கொடி அசையும் வானைத்தீண்டும் கோபுரத் தோடுகூடிய மாடத்தே துயில்வோர் ஏற்றிவைத்த விளக்கு நட்சத்திரங்கள்போல் விளங்கித் தோன்றும் அரிய காவலுடைய அஞ்சத்தக்க மூதூரிடத்துள்ள மனையிடத்தே உறையும் குற்றமில்லாத கற்புடைய செவ்வரிபரந்த மதர்த்த குளிர்ந்த கண்ணும், மூங்கிலொத்த தோளும் உடைய தெய்வப் பெண்ணை ஒத்த நம் காதலியைக் கண்டு, "ஏதிடி! தோழி கேள், வேலன் வெறியாடுகளத்துச் சிறிதும் பலதுமாகப் பரந்து கிடக்கும் பூவைப்போல, நறிய முல்லை மலர் உதிர்ந்து கிடக்கும் நறிய குளிர்ந்த முல்லைக் காட்டில் வெவ்விய கதிர் மழுங்கி அந்த கிரியிடத்தே சேர்ந்த

ஞாயிறு அரவு விழுங்கிய சந்திரனைப்போல வியக்கும்படி மறையும் சிறிய புல்லிய மாலைக்காலத்து அவர் நம்மை நினையார்'' எனக் கூறி நம்மைப் புலந்து உறையும் அவள் துன்பம் நீங்க, சாரதித் தொழிலை முற்ற அறிந்த பாகனே, பொன் கல்லணையிட்ட செருக்கி நடக்கின்ற குதிரை பூண்ட தேரைச் செலுத்துக. கல்லணை—தவிசு

இச் செய்யுள் இயற்றியவர் பெயர் காணப்படவில்லை.

## 115. பாலை

[இது, பிரிவிடை வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அவர் பழியிலராயினும், பலரைப் புறங்கூறுதலும், அவர் தூற்றுதலுமாகிய ஒழுக்கமுடைய கொடிய பேச்சுடைய சேரியிடத்துள்ள பெண்கள் இகழினும் இகழ்க. நுண்ணிய பூண் விளங்கும் எருமையுடைய குட நாடு போன்ற எனது, ஆயத்தாரால லங்கரிக்கப்பட்ட நலன் அழியினும் அழிக; என்றும் நம் காதலர் நோயிலராகுக. தப்பாத வாளுடைய எவ்வி வீழ்ந்த செருவிடத்தே பாணர் கை தொழுது சூழ்ந்து நின்று பழைய முறைமையில் வாழ்த்திய வலிய உயர்ந்த வளைந்த கொம்பைப் போன்ற ஒள்ளிய பூங்கொத்துடைய சுடர்விடுகின்ற பூத்த கொன்றைபோல் விளைந்த நெல் தரைமீது பரந்து கிடக்கும் தொலையாத வழியிடத்துப் பிறைபோன்ற பெரிய மருப்புடைய தலைமையுடையயானை சினமிகுந்த வலியுடைய சிங்கத்துக்கு அஞ்சித் தன் இனத்தைக் கூட்டிக் கொண்டு ஒளிக்கும் அஞ்சத்தக்க வழியிடத்து நமது அழகு கெடும்படி நம்மை நீங்கித் தூரதேசத்தே சென்ற நங்காதலர் பொருட்பிணி கைகூடாமையின் நீடித்து அவண் உறைகின்றார். —மாமூலர்

## 116. மருதம்

[இது, தோழி தலைமகனை வாயின் மறுத்தது.]

நெருப்பு எரிவதுபோன்ற தாமரையை இடையிடையே சேர்த்து அரிந்து குவித்த செந்நெல் அறுக்கும் வேலையாட்கள் கள்ளை அருந்தி, வண்டிச்சில்லு சேற்றுட் புதைந்ததாயின் அது செல்லுதற்கு கரும்புகளைத் தெரிந்தெடுத்து அடுக்கும் ஊர! ஒள்ளிய நுதலும், நறியமலர் சூடிய கூந்தலும் மிகுந்த அழகு முடைய பரத்தை ஒருத்தியோடு நாணமின்றி, நேற்று விடியற்காலையில், பொரிபோல் மலர்ந்த புன்கு நிழல்செய்யும் துறையிடத்துப் புனலாடினை என்று கூறுவர். யாம் அதனைப் பொய்யால் மூடி மறைப்பவும் மீறி அது அலராயிற்று. அவ் அலர், மலர்மாலையும், கரியயானையுமுடைய, மறப்போர்புரியும் பாண்டியன் நீங்காத புகழுடைய கூடற்பறந்தலையிடத்து, ஒன்று சேர்ந்து பகைத்தெழுந்த இரு பெருவேந்தரின் கடல் போன்ற பெரும்படை கலங்கத் தாக்கியபோது, முரசுகளை எறிந்துவிட்டுப் புறங்காட்டி அவர் படை ஓடிய ஞான்று, வெற்றிகொண்ட வீரர் களத்தே ஆடிய ஆர்ப்பினும் பெரிதாகும். —பரணர்

## 117. பாலை

[இது, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

வீட்டுக்குக் வேலி நடப்பட்ட மல்லிகையோடு மலர்ந்த பெரிய கொத்துடைய நொச்சியையும், அழகிய திதலை பரந்த அல்குலுடைய ஆயத்தையும் உள்ளாளாய்த் தொழில் மாட்சிமை பட்ட வளம்பொருந்திய அழகிய மனை தனிமை உறப்போய், அஞ்சத் தக்க அரிய வழியிடத்தே கரிய காலையுடைய ஓமை மரத்தில் ஏறி வெள்ளிய தலையுடைய பருந்து பேடையை அழைக்கும் பாழடைந்த

நாட்டிடத்தே பொன்வளை ஒலிப்பக்கையை வீசிச் சிவந்த பாதங்களிற் சிலம்பு ஒலிக்க அசைந்து சென்ற என் மகட்கு சாந்து தடவிய நெளிந்து சுருண்ட கூந்தலைவாரி உச்சி எடுத்து யான் பூக்களைச் சூட்ட வாசனைச் சாந்தைப் பூசாதவளது, தமர்போன்ற தகுதியுடைய விரும்பத்தக்க காதலன் மணநாறுகின்ற பல மலரைப் புனைந்து பின்னலை அவிழ்க்க முதுகு மறையும்படி, நெடிய காலுடைய மாவின் பழுத்த வெள்ளிய வெண்பழத்தை வளைந்த காலுடைய, ஆமை, பார்ப்போடு இருந்து கவரும் பொய்கை சூழ்ந்த பொய்யாத புது வருவாயுடைய வாணனது சிறுகுடிக்கு வடக்கே உள்ள வெவ்விய நீருடையகான் ஆற்று விளங்குகின்ற அறல்போல் தாழாநிற்கும். காதலன் பின்னலை அவிழ்க்க (கூந்தல்) முதுகு மறையும்படி தாழ நிற்கும் எனவினை முடிவு செய்க.

அறல்—கருமணல்.

இப்பாடல் செய்தவரின் பெயர் காணப்படவில்லை.

## 118. குறிஞ்சி

[இது, செறிப்பறிவுறீஇ இரவும் பகலும் வாரலென்றது.]

ஒலிக்கின்ற வெள்ளிய அருவிவிளங்குகின்ற மக்கமலையிடத்தே தேன் கமழ்கின்ற வேங்கையின் பூங்கொத்துக்களைச் சூடி, தொண்டகப்பறையின் தாளத்துக்கு ஆடும் குறப்பெண்களோடு சேர்ந்து மறுகில் ஆடும் சிறுகுடிப் பாக்கத்து அழகிய முருகனை ஒப்பவனே! வலிய வேட்டை நாய்பின்னே செல்லப் பகற்காலத்தே நீ வரின் பிறர் அலர் தூற்றுவதை நாம் அஞ்சுவேம். பெரிய பிடி கன்றோடு விரைந்து சென்ற பெரிய கையுடைய யானையோடு மாறுபட்டு அதனைக் கொல்லமாட்டாதோடிய கொல்லுகின்ற புலி திரியும் மிகுந்த இருளுடைய நடு இரவில் நீர் தனியே

வருதலை அவ்வலர் தூற்றுதலினும் அதிகமாக அஞ்சுவேம். என் தோழி என்ன ஆகுவளோ? பல நாட்களாக நாங்கள் புணர்தற்கு இடமாயிருந்த காய்ந்த கதிருடைய தினைப்புனத்தே கிளியை ஓட்டும் பாடலும் ஒழிந்தது. அன்புடையாட்கு உனது அருளையன்றி வேறு ஆதரவில்லை.

—கபிலர்

## 119. பாலை

[இது, செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொற்றது தோழி சொற்றதூஉ மாம்.]

நுதலும் தோளும் திதலை அல்குலும், வண்ணமும், அழகும் சுணங்கும் வாட, இவள் வருந்துவாளென்று நோக்கி வரைந்து கொள்ளுதல் நன்று என நினையாது பிரிந்தாலும், வழியிடத்தே செல்லும் மாக்கள் அறுத்த பிரண்டை இடியேறுண்ட பாம்பின் பசிய துணிகளை ஒப்ப வழியோரங்களிற் கிடந்து சுருங்கும் வழியிடத்தே வருந்திச் சென்ற உப்புவாணிகர் விட்டுச் சென்றகல் அடுப்பில் ஒள்ளிய சிலையுடைய மழவர் இறைச்சியைப் புழுக்கி உண்ணும் சுர வழி போதற்கரிய தென்னாது துணிந்து, நெய்தல் வடிவினதாய் ஐத அகன்ற இலையுடைய சுரை வயிரமுடைய வேல மரத்திற் படர்ந்து மயிலிறகு கட்டிய அம்போடு சேர்த்திய நாழிகை வட்டில் போற் தோன்றும் தனிமையான காடுதுணையாக, வீரமுடைய புலி பிளந்தவடுவுடைய சென்னியிடத்தே பொருந்திய வருத்தத்தோடு நீருண்ணச் சென்று முழங்காலூன்றிய உயர்ந்த யானை கை தோய்த்து நீரை உறிஞ்சும் நீர் வற்றிய சுனையுடைய கரியமலையிடத்துள்ள வழியே செல்லத் தாம் வருந்தித் துணிவரோ?

—குடவாயிற் கீரத்தனார்.

## 120. நெய்தல்

[இது, தோழி பகற்குறிக் கண்தலைமகளை இடத்துய்த்து வந்து தலைமகனை எதிர்ப்பட்டு நின்று சொல்லியது.]

திருமாலின் மார்பிடத்து விளங்கும் ஆரம் போல செவ்வானத்தைத் தடவி, மீனருந்தும் பசியகாலுடைய கொக்கின் நிரை உயரத்தே பறக்க ஞாயிறு மெல்ல மெல்ல மேற்கே அத்தகிரியிற் சென்றுமறைதலும், மதர்த்த அழகிய குளிர்ந்தகண்கள் கலங்கஇவள், பெரியநாணத்தோடு கூடிய சிறிய மிருதுவாகிய சாயலின் மாட்சிமைபட்ட அழகு சிதையும்படி வருந்திஅமையாது அழத் தொடங் கினாள் பெரும! ஆதலால் உயர்ந்தபனையுடைய வெள்ளிய மணலுடைய சோலையிடத்து அன்றில்தன்பேட்டைஅழைக் கும் இடத்தே உள்ள சிறிய நெய்தல் பூத்திருக்கும் பெரிய கழிபரந்த நாட்டிடத்தே, கழியிடத்துள்ள சுறவை எறிந்த புல்லிய தாளுடைய கோவேறு கழுதை ஆழ்ந்த நீருடைய கழியிடத்தே நடை மெலிந்து அசைய வலிய வேலுடைய இளையரோடு இராக்காலத்தே செல்லாது அவளைச்சேர்ந்து செல்லின் குறைநேருவதுண்டோ.

—நக்கீரனார்

களிற்றியானை நிரை முற்றும்

## அருஞ் செய்யுட் பகுதிகள்

" . . . . . . . . . . . . ." பன்மா
ணோங்கிய நல்லி லொருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெற நசைஇச் சென்றவென் னெஞ்சே" (9)

" யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பி
னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே" (12)

" களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்" (22)

" கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நுதிமுக மழுகிய மண்ணை வெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா வொண் மணி" (24)

"இடங் துயிர் மறுகுவ தாயினு மிடம்படின்
வீழ்களிறு மிசையாப்புலி" (29)

" . . . . . . . . . . . . . தூமயி ரகினந்
றுணையொடு திளைக்குங் காப்புடை வரைப்பிற்
செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
யின்றுவர லுரைமோ சென்றிசினோர் திறத்தெனு

வில்லவ ரறித லஞ்சி மெல்லென
மழலை யின்சொற் பயிற்று
நாணுடை யரிவை" (34)

பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந் (35)

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" (54)

"புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையிற் றீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மக னொற்றி
வருகுவை யாயிற் றருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே"

"அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்" (59)

"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சினமிகு முருகன் றண்பரங் குன்றம்" (59)

"களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
யொளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவு ளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே" (62)

"இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப"

செறுகரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் (66)

" நல்லமர் கடந்த நானுடையு மறவர்
பெயரும் பீடு மெழுதி யதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும் " (67)

" தெள்ளற வியற்றிய நிழல் காண் மண்டிலத்
துள்ளூதாவியிற் பைப்பய நுணுகி " (71)

" கயிறுபிணிக் குழிசி யோலை கொண்மார்
பொறிகண் டழிக்கு மாவண மாக்களி " (77)

தோட்பத னமைத்த கருங்கை யாடவர் (79)

" தீந்தயிர் கடைந்த திரள் கான் மத்தங்
கன்றுவாய் சுவைப்ப முன்றிற் றூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை " (87)

" குடுமி நெற்றி நெடுமர்ச் சேவற்
றலைக்குரல் விடியற் போகி......" (87)

" பகுவாய்ப் பல்லி பாடோர்த்துக் குறுகும் " (88)

" பொறைமலி கழுதை நெடுநிறை தழீஇய
திருந்துவாள் வயவர் " (89)

" தடமருப் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும் " (91)

" மந்தியு மறியா மரம்பயி லிறும்பு " (92)

" வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ் சுடர் விளக்கத்து. (93)

"..............................இம்மை"
நன்று செய்மருங்கிற் றீதில் லென்னுந்
தொன்றுபடு பழமொழி " (101)

" மணப்பருங் காமம் புணர்ந்தமையறியார்
தொன்றியன் மரபின் மன்ற லயரப்
பெண்கோ ளொழுக்கங் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநா ணொடுக்கமும் காண்குவம்யாமே." (112)

" பொய்புறம் பொதிந்தியாங் கரப்பவும் " (116)

4380a

The Royal Printing Works, Mount Road, Madras.

CEYLON UNIVERSITY COLLEGE,
*Colombo, 7th June, 1936.*

In rendering the Pattupattu or the Ten Idylls into prose, Pandit N. S. Kandiah Pillai of Jaffna has done real service to Tamil since the Idylls are, in their classical poetic form, unintelligible to most even with the commentary of the famous Nachchinarkkiniyar.

Mr. Kandiah Pillai's version is true to the original and yet simple enough to be understood by pupils in the upper forms and students.

(Sgd.) FRANCIS KINGSBURY, B. A.,
*Lecturer in Tamil.*

Pandit N. S. Kandiah Pillai of Jaffna has once more put the students of Tamil classical literature under obligation by rendering the Ten Tens (*பதிற்றுப்பத்து*) into prose. What I said in 1936 with regard to his prose version of the Ten Idylls (*பத்துப் பாட்டு*) is equally true of the present work.

(Sgd.) FRANCIS KINGSBURY, B. A.,
*(Formerly Lecturer in Tamil,*
*Ceylon University College.)*

31—1—'38.

— யாழ்ப்பாணத்து நாவலியூர்

திருவாளர். ந. சி. கந்தையா பிள்ளை

எழுதிய நூல்கள்.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | தமிழகம் | ... | 2 | 4 |
| 2. | பத்துப்பாட்டு வசனம் | ... | 1 | 0 |
| 3. | புறப்பொருள் விளக்கம் | ... | 1 | 0 |
| 4. | பதிற்றுப்பத்து வசனம் | ... | 1 | 0 |
| 5. | அகநானூறு வசனம் (களிற்றியானை நிரை) | ... | 1 | 0 |
| 6. | மணிமிடை பவளம் (அச்சில்) | ... | 1 | 4 |
| 7. | நித்திலக் கோவை (அச்சில்) | ... | 1 | 2 |
| 8. | பரிபாடல் வசனம் (அச்சில்) | ... | 1 | 0 |
| 9. | கலிங்கத்துப் பரணிவசனம் | ... | 1 | 0 |

தயாராயுள்ள நூல்கள்

தொல்காப்பிய ஆராய்ச்சி.

தமிழர் சரித்திரம்.

குறுந் தொகை வசனம்.

காவிய வசனத் திரட்டு.

ஆயத்தமாகும் நூல்கள்

காதல் மணம் (களவும் கற்பும்).

புறநானூறு வசனம்.

சங்கநூலாராய்ச்சி (தொகை நூல்கள்).

கலித்தொகை வசனம்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

*Pallavaram,*
*14th Feb. 1938.*

*SWAMI VEDACHALAM,*

*I know Mr. N. S. Kandiah Pillai of Jaffna for more than ten years as a Tamil Scholar devoting his time and energy to a careful and critical study of ancient Tamil classics. His prose renderings of Pathuppattu, Pathitruppathu, etc., and his historical compilation about the ancient Tamil land bear ample testimony to his intimate knowledge of old Tamil classics and his comprehensive grasp of important historical matters performing to the ancient civilisation of the Tamils. A study of his works will, I am sure, not only improve the Tamil knowledge of students but will also lead them to a correct understanding of the civilisations of the Tamilian and Aryan races.*

*(Sgd.) S. Vedachalam.*

தமிழ் இலக்கியம், சரித்திரம், சொல்லாராய்ச்சி, இருப
தற்கு மேற்பட்ட பாஷாஞானம் முதலியன
நிரம்பிய புலமையாளரும், தமிழ்ச் சொற்
பிறப்பு ஒப்பியல் அகராதியை இது
வரையில் எவரும் செய்யாத
புது முறையில் தமிழுக்கு
ஆக்கி அளித்த பேருப
காரியும் கலாவல்ல
வருமாகிய

யாழ்ப்பாணத்து நல்லூர்

வண, ஞானப் பிரகாச சுவாமிகள் ஓ. எம். ஐ. தமிழ் அகத்தைக் குறித்து ஆங்கில மொழியில் வெளியிட்ட அபிப்பிராயம் வருமாறு :—

# ALL ABOUT THE TAMILS

## AN ENCYCLOPAEDIA IN A NUT-SHELL.

This little Tamil work compiled by Mr. Kandiah Pillai may be called an Encyclopedia in a nut-shell. The writer has summarised all that is known and all that is conjectured regarding the origin, history, culture, literature, arts and industries of the Tamil people from the earliest times to the present day. Almost every work in Tamil and English wherein there is some reference to the Tamil people is laid under contribution. Most quotations are given in the original with references to chapter and verse so that the work is an excellent vademecum for the research worker.

(Sgd.) S. GNANAPRAKASAR, O.M.I.

(President: Jaffna Historical Society; Vice-president: Jaffna Oriental Studies Society; member: Royal Asiatic Society C. B.; Hon. member Kalanilayam).

தமிழ் இலக்கியம், சரித்திரம், சொல்லாராய்ச்சி, இருப
துக்கு மேற்பட்ட பாஷாஞானம் முதலியன
நிரம்பிய புலமையாளரும், தமிழ்ச் சொற்
பிறப்பு ஒப்பியல் அகராதியை இது
வரையில் எவரும் செய்யாத
புது முறையில் தமிழுக்கு
ஆக்கி அளித்த பெரும
காரியம் கலாவல்ல
வருமாகிய

யாழ்ப்பாணத்து நல்லூர்

வண. ஞானப் பிரகாச சுவாமிகள் ஓ. எம். ஐ. தமிழ் அகத்தைக் குறித்து ஆங்கில மொழியில் வெளியிட்ட அபிப்பிராயம் வருமாறு :—

# ALL ABOUT THE TAMILS

## AN ENCYCLOPAEDIA IN A NUT-SHELL.

This little Tamil work compiled by Mr. Kandiah Pillai may be called an Encyclopedia in a nut-shell. The writer has summarised all that is known and all that is conjectured regarding the origin, history, culture, literature, arts and industries of the Tamil people from the earliest times to the present day. Almost every work in Tamil and English wherein there is some reference to the Tamil people is laid under contribution. Most quotations are given in the original with references to chapter and verse so that the work is an excellent vademecum for the research worker.

(Sgd.) S. GNANAPRAKASAR, O.M.I.

(President: Jaffna Historical Society; Vice-president: Jaffna Oriental Studies Society; member: Royal Asiatic Society C. B.; Hon. member Kalanilayam).